


கல்கி
KALKI
5.11.2000
ரூ. 5.00
மனம்
திறக்கிறார்
டாக்டர்
ராமதாஸ்!
ஜோதிகாவின்
உ.பி.ச!
ிரசார
மேடையில்
ாக்டர்
ிருஷ்ணசாமி



❛❛என் குழந்தைக்கு, சரியான அளவில், இன்றியமையாத ஊட்டச்சத்து அளிக்கப்படவேண்டும்.

அதனால்தான், நான் செரிலாக்கை நம்புகிறேன்.❜❜

"என் குழந்தைக்கு, 4 மாதங்கள் முடிந்தவுடன், அவனுக்கு எந்த திட உணவைப் புகட்டத் தொடங்குவது என்று, உண்மையிலேயே நான் யோசிக்கலானேன். வெறுமனே திட உணவு மட்டும் போதுமானது ஆகாது. குழந்தை ஆரோக்கியமாகவும், வலுவாகவும் வளர்ச்சியடைய, சமச்சீரான அளவில் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த திட உணவு தேவைப்படுவதாம், என் மருத்துவர் கூறினார். எனவேதான், நான் செரிலாக்கைப் புகட்டத் தொடங்கினேன்."

செரிலாக் எளிதில் சீரணிக்கத்தக்க, சமச்சீரான போஷாக்கு :



செரிலாக் தேவையான ஊட்டச் சத்துக்களை, சரியான அளவில் வழங்குகிறது. இயற்கையான புரதச்சத்துக்கள் நிறைந்த, பால் மற்றும் கோதுமை கொண்டு தயாரிக்கப்பட்ட செரிலாக்கில், கார்போஹைட்ரேட்டுகளும், கொழுப்புச் சத்துக்களும் கூட அடங்கியுள்ளன. அத்துடன், அத்தியாவசியமான விட்டமின்களும், தாதுப் பொருட்களும் இதில் நிரம்பியுள்ளன. இதனால் உங்கள் குழந்தைக்கு, ஒவ்வொரு முறையும் சமச்சீரான உணவு கிடைக்கிறது.

சீரணிப்பது எளிது, விதவிதமான பல சுவை உணவுகள் :

நெஸ்லேயின் புரட்சிகரமான 'ஜெட்-லைன் என்ஜைமேடிக் தொழில்நுட்பம், கார்போஹைட்ரேட்டுகளை எளிதில் சீரணிக்க உதவுகிறது. இதனால் மிருதுவான செரிலாக்கை, உங்கள் குழந்தை, எளிதில் சீரணிக்க முடிகிறது.



செரிலாக்கின் சுவையை, குழந்தைகள் மிகவும் விரும்புகின்றன. 4 மற்றும் 6 மாதங்களுக்கு இடையேயான காலத்தில், செரிலாக் வீட், செரிலாக் பனானா, மற்றும் செரிலாக் ரைஸ்-ஆகியவற்றிலிருந்து ஒன்றைத் தெரிந்தெடுங்கள். பின்னர் பார்த்து மகிழுங்கள் உங்கள் குழந்தையின் மகிழ்ச்சிக் கும்மாளத்தை!

Mudra NES:1543 R Tam

உங்கள் குழந்தைக்கு செரிலாக் அனுகூலத்தை அளியுங்கள்.

IMPORTANT NOTICE : MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.

महत्वपूर्ण सूचना: माँ का दूध आपके बच्चे के लिए सर्वोत्तम है। ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें।

கல்கி குவிஸ் போட்டி!

அழைக்கிறது அமெரிக்கா!

பங்கேற்பது எளிது: பரிசோ மிகப் பெரிது!



நீங்கள் செய்ய வேண்டியது :

ஒவ்வொரு வாரமும் ஆறு கேள்விகள் இடம் பெறும்.

ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு வார்த்தை அல்லது ஒரு எண்தான் விடையாக அமையும்.

அந்த வார்த்தை அல்லது எண்ணை நீங்கள் விடை பகுதியில் எழுத வேண்டும்.

தெரியாவிட்டால் தேடி கண்டுபிடித்து எழுதலாம்.

அடித்தல் திருத்தல் இருக்கக் கூடாது.

12.11.2000 இதழ் தொடங்கி, கல்கி பத்திரிகையில் இடம் பெறும் கூப்பனில் தான் எழுத வேண்டும். ஜெராக்ஸ் ஒட்டக் கூடாது.

உங்கள் முழு விலாசம் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

26 வாரங்கள் சென்றதும் ஒட்டு மொத்தமாக கூப்பன்களை அனுப்பவும்.

நாங்கள் செய்யப் போவது :

26 வாரங்கள் சென்றதும் நீங்கள் அனுப்பும் கூப்பன்கள் பரிசீலிக்கப் படும்.

மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான விடைகளை எழுதுபவருக்கு அமெரிக்க பயணம் பரிசு!

அடுத்த நிலையில் சரியான விடையை எழுதியவருக்கு ஐரோப்பா பயணம்.

மூன்றாவது நிலையில் சரியான விடையை எழுதியவருக்கு மலேசியா – சிங்கப்பூர் பயணம்.

மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் குறிப்பிட்ட எண்ணிக்கையில் சரியான விடைகள் எழுதியிருந்தால் பரிசு பெறுபவர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவார்; மற்றவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

போட்டிக் கடைசி வாரம் முடிவு தேதி குறிப்பிடப்படும். அதற்குள் கூப்பன்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி!

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com   *ஈ மெயில் :* kalkiweekly@vsnl.com

"மீடியாவை மக்கள் தேர்ந்தெடுக்கவில்லை!"

'பத்திரிகையாளர்களும் ஒழுக்க நெறியும்' என்பது பற்றி, ஏஷியன் காலேஜ் ஆஃப் ஜர்னலிசம் மாணவ - மாணவரிடையே பத்திரிகையாளர் ஞாநி பேசினார். பேச்சிலிருந்து:

அமெரிக்காவில், மோனிகா லெவின்ஸ்கி – க்ளிண்டன் விவகாரம் சூடு பிடித்திருந்த அதேசமயம், அதிக நிகோட்டின் உள்ள சிகரெட்டுகளினால் உடலுக்கு உண்டாகும் தீங்கு பற்றி அசோசியேடட் பிரஸ் நிருபர் ஒரு செய்திக் கட்டுரையை வெளிக்கொண்டு வந்தார். ஆனால் மோனிகா லெவின்ஸ்கி விவகாரத்தில் இருந்த சுவாரசியத்துக்கும் பரபரப்புக்கும்தான் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. அதிக நிகோட்டின் சிகரெட்டை பெருமளவில் அமெரிக்கர்கள் உபயோகித்து வந்தாலும், அதைக் கண்டுகொள்ளாமலே விட்டுவிட்டன பத்திரிகைகள். மீடியா செய்தது சரியா?

லாஸ்ஏஞ்சல்ஸ் டைம்ஸ் நிருபர் ரொசாரியோ, போதைப் பொருள்களுக்கு அடிமையாகி, தங்கள் குழந்தைகளைப் பட்டினி போட்டுக் கொண்டிருந்த பெற்றோர் பற்றி, ஐந்து மாதங்கள் பாடுபட்டு, தகவல்கள் சேகரித்து, கட்டுரை எழுதினார். அதை அவருடைய பத்திரிகை இரண்டு மாதங்கள் கழித்து வெளியிட்டது! இது வெளியான பிறகு, அந்தக் குழந்தைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுத்தார்கள். என்றாலும், ஐந்து மாதங்களாக, தம் கண் எதிரேயே, சாப்பிட எதுவுமில்லாமல் பசியும் பட்டினியுமாக இருந்த குழந்தைகளுக்கு அந்த ஐந்து மாதங்களில் ரொசாரியோ என்ன உதவி செய்தார்? 'அந்தக் குழந்தைகள் பட்டினியில் மயங்கி விழுந்து கிடந்தால் நான் உடனடியாக ஏதாவது செய்திருப்பேன்' என்று அவர் சொல்ல முடியுமா? நிருபர் ரொசாரியோ தமது கட்டுரை பத்திரிகையில் வெளியாகி, அதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு விடிவு காலம் பிறக்கட்டும் என்று காத்திருந்தது சரியா?

ஒரு புத்த துறவி தமது கொள்கை ஒன்றை நிறைவேற்றுவதற்காக, தம் மீது நெருப்பு வைத்துக் கொளுத்திக் கொண்டு ஒரு பொதுஇடத்தில் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக அறிவித்தார். போட்டோ-ஜர்னலிஸ்ட் ஒருவர் அதைப் பொறுமையாகப் படம் பிடித்து, தமது பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார். அவர் அந்தத் துறவியின் தற்கொலையைத் தடுக்காமல், தமது வேலையில் குறியாக இருந்து புகைப்படம் எடுத்துக் கொடுத்தது சரியா, தவறா? (ஒரு போராட்டத்தின்போது போலீசார் துரத்தித் தாக்கியபோது, தாமிரபரணி ஆற்றில் குதித்த சிலரை, வீடியோ படமாக எடுத்துக் கொண்டிருந்த புகைப்படக்காரர், வீடியோ காமிராவை வைத்துவிட்டு, தம்மால் முடிந்தவரை சிலரைக் காப்பாற்றினார் என்பது நினைவிருக்கலாம்.)

ஹாக்கி விளையாட்டுக்காக ஒரு பத்திரிகை வருகிறது. அதன் அட்டையில் மூன்று ஆட்டக்காரர்கள் பிடித்திருந்த ஹாக்கி மட்டைகளில் ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் பெயர் பளிச்சென்று தெரிந்தது. அந்தப் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுக்கும் ஹாக்கி மட்டைகள் தயாரிக்கும் கம்பெனிக்கு, அவர்கள் போட்டியாளர்கள்! 'நீங்கள் எப்படி அந்த அட்டைப் படத்தைப் போட்டீர்கள்?' என்று பிரச்னையைக் கிளப்பிவிட்டது விளம்பரம் தரும் கம்பெனி. பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அவசியம். இல்லையென்றால் குறைந்த விலைக்கு வாசகர்களுக்குக் கிடைக்காது! பத்திரிகை அதிபருக்கு,



• ஞாநி

தர்மசங்கடமாகி விட்டது.

கார்கில் போர் நடந்துகொண்டிருந்த போது, நான் காஷ்மீர் போயிருந்தேன். 15 நாட்கள் அங்கே தங்கி, எல்லாத் தரப்பு மக்களையும் சந்தித்துப் பேசினேன். ஸ்ரீநகரில் மக்களிடம் எந்தவிதப் பாதிப்பும் இல்லை. 200 கி.மீ தூரத்தில் சண்டை நடந்து கொண்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு எந்த உணர்வும் இல்லை. எனக்கு இது அதிர்ச்சியாக இருந்தது. 'யாரோ யாருடனோ சண்டை போடுகிறார்கள்!' என்றார்கள் அவர்கள் அலட்சியமாக.

அங்கே லால்சௌக் என்ற நகரின் முக்கிய இடத்தில் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை, 400-500 பேர் கூடி, இந்தியாவுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி, சண்டையை நிறுத்துங்கள் என்று கூச்சல் போட்டார்கள். போலீஸ் அவர்களை வேன்களில் பிடித்துக் கொண்டுபோய், பிறகு வெளியே விட்டார்கள்.

யாசின் மாலிக்கைப் பேட்டி கண்டு எழுதியதை, அப்போது நான் பணியாற்றிய பத்திரிகையில் வெளியிட்டதும், கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. கிலானியின் பேட்டி வெளியானதும், மறுபடி மிரட்டல்கள். எனக்கும் போன் மூலம் எச்சரிக்கைகள்! நாட்டின் பாதுகாப்புக்காக ராணுவ வீரர்கள் போராடும்போது, இப்படிப்பட்ட செய்திகளை எல்லாம் வெளியிடுவதா என்றார்கள். ஆசிரியர் அந்தத் தொடரை நிறுத்திவிட்டார். உண்மையைச் சொல்ல முடியவில்லையே என்பதில் எனக்கு வருத்தம்தான்.

கார்கில் யுத்தம் பற்றிய சில உண்மைகளை 'ஃப்ரண்ட் லைன்', 'அவுட்லுக்' இரண்டும் வெளியிட்டன. ஆனால் அந்தப் பத்திரிகைகளை ராணுவ நீதி விசாரணைக்கு வருமாறு அழைத்தபோது அவை மறுத்து விட்டன!

பத்திரிகை நிறுவனங்கள் நேர்மையை ஆதரிக்கும்போது அவற்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் பலமும் பாதுகாப்பும் கிடைக்கிறது.

பத்திரிகையாளராக விரும்புவோர் திறமையைப் பயிற்சியின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கநெறிகளைத் தாமாகத்தான் உணர்ந்து மேற்கொள்ள வேண்டும். வாசகரை நீங்கள் எப்படி மதிக்கிறீர்கள்? நீங்கள் செய்திகள் சேகரிக்கும் அரசு அலுவலகங்கள், தனி நபர்கள், நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் இவற்றுடன் ஆன உங்கள் தொடர்பு எத்தகையது? இவை எல்லாவற்றிலும் இழை போல ஓடிக்கொண்டிருப்பதுதான் ஒழுக்க நெறி. உங்கள் பணி சமூகத்துக்குத் தீமை தருமானால், அதைச் செய்யாதீர்கள். தேர்தலில் மக்கள் தேர்ந்தெடுத்து, சட்டசபையில் பிரதிநிதிகள் இயங்குவது போல, மீடியாவை மக்கள் தேர்ந்தெடுக்கவில்லை. ஆனால் உண்மை வெளிப்பட வேண்டும் என்பதுதான் முக்கியம்; அந்த உண்மை மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதுதான் முக்கியம்.

— சாருகேசி

பிரசார மேடை

அடித்தட்டு மக்களுக்கு

டாக்டர் க. கிருஷ்ணசாமி,
தலைவர், 'புதிய தமிழகம்'

வெள்ளையர் காலத்தில் கிறிஸ்துவ அறவாணர்கள் தந்த கல்வியால் பட்டியல் சாதி மக்களில் சில பிரிவினர் விழிப்பு பெறுவதை விரும்பாத மூர்க்கர்கள் மனித உரிமைகளுக்கு எதிரான சாதிய சட்டங்களை, ஒதுக்கு முறைகளை விதித்தனர். மனித உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்த்துப் போராடியவர் மள்ளர் (தேவேந்திர குல வேளாளர்கள்) குடியின் மாமணி தேனி தேக்கம்பட்டி பாலசுந்தரராக. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை 1950களில் தளமாகக் கொண்டு மனித உரிமைகளுக்குப் போராடினார் தியாகதீபம் இமானுவேல் சேகரன் அவர்கள். உழைக்கும் மக்களில் பலரும் அன்றாடம் மனித உரிமைகளுக்கும் தன்மானத்திற்கும் போராடி தியாகம் செய்துள்ளனர். அறிஞர் அண்ணா, இமானுவேல் சேகரன் அவர்களைத் தமிழ்நாட்டுத் தலைவராகவும், உலகத் தலைவராகவும், இந்திய நாட்டின் தலைவராகவும் கண்டு சட்டமன்ற உரையில் புகழாரம் சூட்டினார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்காக தமிழ்த் தேசிய உணர்வின் முன்னோடியாக விளங்கிய மானமிகு அயோத்திதாசப் பண்டிதர் 1890ல் தமிழர்– திராவிடர் இறை இயலை மீட்டெடுத்தார். மதுரையின் மேலூரில் மக்களாட்சி நெறி வழி பங்காற்ற முயன்ற தியாக தீபம் மேலவளவு முருகேசனும் அவரின் தோழர்களும் கொலையுண்டனர்.

கோவைப்பகுதியில் வேளாண்மையில் உழைப்புக்குப் பெரும் பங்களிக்கும் ஆதி (அருந்ததியர்) குடியினர் உரிமைகளை இழந்து, ஆதிக்க சக்திகளால் அல்லல்படுகின்றனர். இங்கேயும் ஒரு தியாக தீபம் செருடந்தாளி முருகேசன் மனித உரிமையை நிலைநாட்டியதற்குக் கொலையுண்டார்.

மலைவாழ் பழங்குடிகள், மீன்பிடிக்கும் கோலியர், குறிஞ்சி வேளாளர்கள் மற்றும் பிற பட்டியல் சாதிகள் (SCS) பழங்குடியினரும் (ST)வாழ்வுரிமைக்குப் போராடி வருகின்றனர். எமது போராட்டங்கள் பிரச்னைகளை மையமாகக் கொண்டு எழுகின்றன. அனைத்து நாடுகள், அனைத்திந்திய, மாநிலம் தழுவியக் கட்சிகளால் அணுக முடியாத சிக்கல்களைக் குறிப்பாக அரசியல் சிக்கல்களைப் 'புதிய தமிழகம்' எதிர்கொள்கிறது.

எமது இயக்கம் தமிழக அளவில் மட்டுமின்றி இந்தியாவிலும், உலக அளவிலும் குறிப்பாக மனித உரிமை செயல் வீரர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

தென் தமிழகத்தில் 1920 முதல் சாதிய சட்டங்கள் வழி மூர்க்கர்கள் (குற்ற குலத்தினர்) வருணாசிரம வழியில் உழைக்கும் ஆதிதிராவிடர்களையும் (பறையர்), மள்ளர்களையும்(தேவேந்திரகுல வேளாளர்) ஒடுக்கி வந்தனர். உழைக்கும் மக்களின் மள்ளர்(பள்ளர்) பிரிவினர் தங்களின் குல (சாதி) அமைப்பு வழி போராடினார்கள். இதனைத் தொடர்ந்து தியாகதீபம் இமானுவேல் தியாகம் (1957), வெண்மணி படுகொலை (1968), விழுப்புரம் போராட்டம்(1977), உளஞ்சனை படுகொலை(1979), மீனாட்சிபுரம் சமயமாற்றம்(1981), கொடியங்குளம் கொடுமைகள் (1995), தேவேந்திர வேளாளர்





அரசியல் அதிகாரம்!

கூட்டமைப்பு வழி அணி திரண்ட நிலை(1996), கண்ட மனூரில் மனித உரிமைப் போராட்டம் (1977), மேல வளவில் திரு. முருகேசன் தேர்தல் உரிமைக்குப் போராட்டம், தியாகதீபம் அவரின் தோழர்களின் தியாகம் (1997), கயத்தாறு ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினராகக் கடமையாற்றுவதில் தடைகள், இழிவுகள் (1997), ஊர்வலம் நடத்துவதற்கும் பல தடைகள் போன்ற இன்னல்களைச் சந்தித்தோம்.



டிசம்பர், 15, 1997ஆம் ஆண்டு 'புதிய தமிழகம்' இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகாரம் அளிக்கப் பெற்று அரசியல் கட்சியாக உருவானது. தேனீர்க்கடைகளில் இருகுவளை ஒழிப்பு (1998), தேவக்கோட்டையில் சொர்ணமூர்த்தி ஈசுவரர் கோயிலில் தேர் வடம் இழுக்க மறுக்கப்பட்ட உரிமைக்கு நீதி மன்ற தடை (1998) பெற்றோம். அரசுக் கல்லூரிகளில் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்பாமைக்குக் கல்வி அமைச்சர் வீட்டின் முன்பு போராட்டம், மாஞ்சோலை தோட்ட தொழிலாளர் கூலி உயர்வு, சட்டப்படி அடிப்படை சலுகை பெறுவது ஆகியன தொடர்பான போராட்டங்கள்; 1996ல் வேண்டிய வெள்ளையறிக்கை மே 2000த்தில் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பெற்றமை, இலங்கை தமிழர்களுக்காகப் பேரணி ஆகிய போராட்டங்களை நடத்தி இழப்புகளைச் சந்தித்தும், வெற்றிகளைப் பெற்றும் 'புதிய தமிழகம்' சாதனை செய்து நாட்டு மக்களின் நல்லாதரவைப் பெற்றுள்ளது.

எளிய மக்கள் (தலித் மக்கள்) அரசியல் அதிகாரம் பெறாமல் வலிவு பெற முடியாது என்பதை உறுதியாக நம்பும் 'புதிய தமிழகம்' 1995ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் (தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பின் சார்பில்) ஆறு சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிட்டு ஒட்டம் பிடாரம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்றது. 1998ஆம் ஆண்டு தேர்தலில் 6 நாடாளுமன்ற தொகுதிகளிலும், 1999ஆம் ஆண்டு தேர்தலில் 10 நாடாளுமன்ற தொகுதிகளிலும் (கூட்டணி கட்சியின் வாக்குகளையும் கணக்கில் கொண்டு) ஏறத்தாழ ஒரு இலட்சம் வாக்குகளைப் பெற்று 'புதிய தமிழகம்' தனது முத்திரையைப் பதித்துள்ளது.

திருச்சியில் சீரும், சிறப்பும் பெற்ற இரண்டாம் மாநில மாநாட்டில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் இரண்டு இலட்சம் மக்கள் திரண்டனர். வரும் சட்டமன்ற தேர்தலில் 'புதிய தமிழகம்' தேர்தலைச் சந்திப்பது குறித்த தீர்மானம் நிறைவேறியது. வரவிருக்கும் சட்டமன்ற

மிக நல்ல விஷயம்!

உங்கள் வாழ்வில் நிகழ்ந்த மிகச் சிறந்த விஷயம் என்ன என்று சில வி.ஐ.பிக்களிடம் கேட்டோம். பதில்கள் கமலா செல்வராஜிடம் ஆரம்பித்து...

விளம்பரம்...

மகப்பேறு மருத்துவத்தில் நான் கைராசி உள்ளவள் என்று பெயர் இருந்தாலும், செயற்கை கருத்தரிப்பு மருத்துவம் பற்றி அறிந்தது முதலே அதன் மீது எனக்கு ஒரு ஆர்வம். அதற்கான பயிற்சி ஆஸ்திரேலியாவில் வழங்கப்படுவதாக அறிந்து, ஆஸ்திரேலியாவில் ஒருவார கால பயிற்சிக்குச் சென்றேன். அங்கே சொல்லப்பட்ட பல விஷயங்கள் எனக்குப் புதிதாக இருந்தன. புரியவில்லை. ஆனால் நான் ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியா திரும்பிய அன்றைய நாளிதழில், 'செயற்கைக் கருத்தரிப்பு மருத்துவப் பயிற்சி முடித்து திரும்பும் கமலா செல்வராஜுக்கு நல்வரவு' என்று என் போட்டோ போட்டு ஒரு சிறு விளம்பரம். 'இதெல்லாம் எதற்கு வீண் விளம்பரம்?' என என் கணவரை அன்புடன் கடிந்து கொண்டேன்.



ஆனால் அந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு என் மருத்துவ மனைக்கு வந்தவர்கள் எண்ணிக்கை வியப்பூட்டியது. அவர்கள், குழந்தை பிறக்குமா என ஏங்கும் சோகத்தையும், அதனால் சந்திக்கும் பல வித பிரச்னைகளையும் கண்ணீர் மல்க என்னிடம் கூறியபோது, என் மனம் நெகிழ்ந்தது. செயற்கைக் கருத்தரிப்பு மருத்துவத்தில் தீவிரமாய் ஈடுபட வைத்தது. 81ல் தொடங்கி நான் மேற்கொண்ட கடுமையான முயற்சிகள் பயிற்சிகள், தொண்ணூறாம் வருடம் ஆகஸ்ட் முதல் தேதி, தென்னிந்தியாவின் முதல் டெஸ்ட் டியூப் குழந்தையாய் ஜனித்தபோது.... அதை வார்த்தையால் வர்ணிக்க முடியாது. இத்தனைக்கும் தூண்டுகோலாக அமைந்த என் கணவர் கொடுத்த நியூஸ் பேப்பர் விளம்பரம்தான், என் வாழ்க்கையில் நிகழ்ந்த மிக நல்ல விஷயம்.

— **டாக்டர் கமலா செல்வராஜ்**

தேர்தலில் புதிய தமிழகம் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளான மனித உரிமைகள், சமமான சமுதாய நீதி, சமுதாய ஒருமைப்பாடு, எளிய மக்களுக்கு வலிவூட்டம், சமயம் சாராமை, பெண்ணுரிமை, சமய சிறுபான்மையரின் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நமது அரசியல் எதிர்தரப்பினரான (எதிரிகள் அல்ல) வருணாசிரம வழியினர், மூர்க்கப் போக்கிரி-ஊழல்கும்பல், எதிர்ப் புரட்சியாளர்கள் (Counter Revolutionaries) ஆகியோர் ஆட்சிக்கு வராமல் செய்யும் வகையில் தனித்தோ, கொள்கை உடன்பாடு கொண்ட அரசியல் அணியோடு கூட்டு சேர்ந்தோ தேர்தலைச் சந்திக்க முடிவெடுக்கும் உரிமையைப் 'புதிய தமிழகம்' கட்சியின் தலைவன் என்னும் நிலையில் எனக்களித்துள்ளது கட்சியின் பொதுக்குழு. இம்முடிவுகளில் எளிய மக்களின் (SCs / STs) சுயமரியாதையையும், ஆர்வ விழைவுகளையும் கணக்கில் கொள்ளவும் 'புதிய தமிழகம்' பொதுக்குழு கட்டளையிட்டுள்ளது.

மொத்தம் நிறைவேற்றப்பட்ட 66 தீர்மானங்கள்– தேர்தல், மனித உரிமைகள், சமுதாய நீதி, தொழிலாளர்கள், பொது சிக்கல்கள் ஆகிய பிரிவுகளில் மக்கள் நலம் நாடிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'**பு**திய தமிழகம்'
புதிய தமிழகம் காண
புதியதோர் சமுதாய–அரசியல் இயக்கம்.

'புதிய தமிழகம்' மனித உரிமை, சமுதாய, அரசியல் தளங்களில் பிரச்னைகளை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. வழக்கமான இந்திய அரசியலில் மகாத்மா ஃபூலே, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரின் கொள்கைகளைப் புறந்தள்ளும் போக்கு அனைத்து அரசியல் இயக்கங்களிலும் நிலை கொண்டுள்ளது. 'புதிய தமிழகம்' கட்சியின் செயல் திட்டங்களையும் போராட்டங்களையும் ஒரு நேரிய பார்வையோடு அணுக தமிழகத்தின் அரசியல், சமுதாய இயக்கங்களையும் தமிழ் மக்களையும், அறிவாளர்களையும் 'புதிய தமிழகம்' அன்புடன் அழைக்கிறது. ●

படம்: ராஜன்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

பவர்ஃபைனான்ஸ்

நடத்தும்

டெபாசிட் திரட்டும் முகாம்

உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்

திண்டுக்கல்	தேனி
ஹோட்டல் குறிஞ்சி ஸ்பென்ஸர் வளாகம், முதல் தளம், பஸ் நிலையம் அருகில், திண்டுக்கல் - 624 003. தொலைபேசி : 427017 / 421056 / 421057 நாள் : 2 & 3 நவம்பர், 2000	**ஆதித்யா ஹோட்டல்** முதல் தளம், 840, மதுரை ரோடு, பஸ் நிலையம் அருகில், தேனி - 625 531. தொலைபேசி : 72607, 72437, 75911 நாள் : 4 நவம்பர், 2000

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

12.12%

12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%.
24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 11.10%
36, 48, 60 மாதங்களுக்கு மாதத்திற்கு வட்டி 12.00%,
காலாண்டிற்கு வட்டி 12.12%.

16.34%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 12.00%)

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894.

30-9-2000 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

Visit us at : www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com / www.webulagam.com

மனம் திறக்கிறார் டாக்டர் ராமதாஸ்



"வரும் சட்டமன்றத் தேர்தலில் பா.ம.க. அ.இ.அ.தி.மு.க. அணியில் இணைந்து விடும்; ஏனென்றால் கலைஞர் மீது டாக்டர் ராமதாஸ் கோபமாக இருக்கிறார்" என்று பலமாகப் பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் டாக்டர் ராமதாஸையே நேரில் சந்தித்துக் கேட்டாலென்ன என்று முடிவு செய்து அவரைச் சந்தித்தோம் பாண்டிச்சேரி அருகிலுள்ள தமது தைலாபுரம் பண்ணை வீட்டில், பசுமையான சூழலில் இரண்டு மணி நேரம் நம்முடன் பேசினார் டாக்டர் ராமதாஸ். பேட்டியிலிருந்து...

'2001ல் பாண்டிச்சேரி மாநிலத்தில் ஆட்சியைப் பிடிப்போம், 2006ல் தமிழகம் எங்கள் கையில்' என்று சொல்கிறீர்கள். இந்த லட்சியங்களை அடையும் வகையில்

"மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள்!"

பா.ம.க.வின் வளர்ச்சி இருக்கிறதா?

கண்டிப்பாக இருக்கிறது. 1989ல் கட்சியைத் துவக்கினோம். 200 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டோம். ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியாவிட்டாலும் கணிசமான வோட்டுக்களைப் பெற்று எங்களுக்கென்று தேர்தல் சின்னத்தைப் பெற்றோம். 1991ல் தனியாகப் போட்டியிட்டு ஒரு இடத்தில் வெற்றி பெற்றோம். 1996ல் சட்டமன்றத்தில் நான்கு இடங்களில் வெற்றி பெற்றோம். எங்கள் கூட்டணியில் இருந்த வாழப்பாடி ராமமூர்த்தி, 70 இடங்களைக் கேட்டு, பல இடங்களில் வேட்பாளரை நிறுத்தவில்லை. போட்டியிட்ட இடங்களிலும் அவர் தனிச் சின்னத்தில் நின்றபடியால், நாங்கள் மட்டும் பெற்ற வோட்டுக்களின் அடிப்படையில், தனிச் சின்ன அங்கீகாரத்தை இழந்தோம். பின்னர் 1998 பாராளுமன்றத் தேர்தலின் போது மாங்கனி சின்னத்தில் நின்று அதையே தனிச் சின்னமாகப் பெற்றோம். நான்கு பாராளுமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றோம். 1999ல் தி.மு.க. கூட்டணியில் நின்றோம். ஐந்து இடங்களில் வென்றோம். இப்போது 2001 சட்டமன்றத் தேர்தலை யொட்டி ஒவ்வொரு தொகுதியிலும் மாநாடு நடத்திக் கொண்டிருக்கிறோம். 'பா.ம.க. வன்னியர் கட்சி; திருச்சிக்கு அந்தப் பக்கம்

செல்வாக்கு கிடையாது' என்றார்கள். தெற்கு பக்கம் மட்டுமல்ல; மேற்கு பகுதியிலும் எங்கள் தொகுதி மாநாடுகளுக்கு ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டு வருகிறார்கள். பாரபட்சம் காரணமாக மீடியா எங்கள் செல்வாக்கைக் குறைத்துக் காட்டுகிறது. தி.மு.க. உட்பட பல கட்சிகளிலிருந்து பிரிந்து எங்கள் கட்சியில் சேர்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இன்று தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய கட்சி நாங்கள்தான். முதல் மற்றும் மூன்றாவது யார் என்று மட்டும் கேட்காதீர்கள். பாண்டியில் நாங்கள்தான் ஆட்சி அமைக்கப் போகிறோம்.

"கடந்த நான்கரை ஆண்டு கால தி.மு.க. ஆட்சியைப் பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன?"

கலைஞர் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார். ஆனால் அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. திட்டங்களின் பலன் மக்களுக்குச் சென்று அடையவில்லை. திருமண உதவித் தொகை கேட்டால் குழந்தை பிறந்த பிறகுதான் வந்து சேருகிறது. கிராமங்கள் இன்னமும் முன்னேறாமல்தான் இருக்கின்றன. எனது சொந்த கிராமமான கீழ்ச்சிவிரியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் கிடையாது. சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் கலைஞர் அரசின் செயல்பாடுகளில் வேகம் கிடையாது. போக்குவரத்தைப் பொறுத்த மட்டில், பெரிய ஜீரோ! ஐம்பது சதவிகித மக்களுக்குத்தான் போக்குவரத்து வசதி கொடுக்கப்படுகிறது. நீலகிரி போன்ற மலைப் பகுதிகளில் மக்கள் பணிகளுக்காகப் படும்பாட்டைச் சொல்ல முடியாது. நெடுஞ்சாலைகளில் நடைபெறும் விபத்துக்களைத் தடுக்க எந்த நடவடிக்கையும் கிடையாது. கிராமங்களில் சிமெண்ட் சாலைகள் போடுவதற்குக் காரணம், பத்து சதவிகித கமிஷன்தான்! கொஞ்சம் ஆறுதலான விஷயம் சமத்துவ புரங்களும், உழவர் சந்தைகளும் தான். அதிலும் சில சமத்துவ புரங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகள் தரத்தில் மிக மோசமாக இருக்கின்றன. விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்கவில்லை. காவிரி தண்ணீருக்குப் போராடிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு வருடமும் கடலில் நிறைய நீர் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க நடவடிக்கை இல்லை. சமூக ரீதியில் இன்னமும் அக்கறை காட்டலாம். வீரப்பன் விவகாரத்தில் தமிழக அரசு நடந்து கொண்டவிதம் இதுவரை சரி. ஆனால் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா எல்லோரையும் கலந்து ஆலோசிக்கிறார். கலைஞர் குறைந்தபட்சம் கூட்டணிக் கட்சிகளைக் கூட கலந்தாலோசிக்கவில்லை.

கலைஞர் மீது உங்களுக்கு என்ன கோபம்?

தனிப்பட்ட முறையில் எந்த கோபமும் கிடையாது. தமிழகத்தைப் பொறுத்தவரை தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மூத்த தலைவராக இருந்துகொண்டு கருத்து வேறுபாடுகளைச் சரிசெய்யாமல் அரசியல் புரோக்கரான வாழப்பாடி ராமமூர்த்திக்கு ஊக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறாரோ என்ற எண்ணம் எங்கள் கட்சித் தொண்டர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. சாத்தை பாக்கிய ராஜ் என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பிரமுகர், "ராமதாஸ் செல்லும் காரை வெடிகுண்டு வைத்துத் தகர்ப்போம்" என்று சொல்கிறார். தி.மு.கவுக்கு மிகவும் வேண்டிய காமாட்சி நாயுடு என்ற ஒருவர், "ராமதாஸ் பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடியுமா?" என்று கேட்கிறார். வாழப்பாடி என்னைத் தாக்கி அறிக்கை விடாத நாளில்லை. மூத்த தலைவரான கலைஞர் இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் இருக்கிறாரே என்று எங்கள் தொண்டர்கள் கேட்கிறார்கள். சமீபத்தில் பாண்டிச்சேரியில் என்னைத் தாக்கியதன் தொடர்பாக தமிழ்நாட்டில் எங்கள் தொண்டர்கள் கொந்தளித்துப் போனார்கள். பஸ்கள் சேதம் அடைந்தன. ஆனால் தமிழக அரசு அவர்கள் மீது கிரிமினல் சட்டத்தின் அடிப்படையில் வழக்கு தொடுக்காமல், தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்கு போட்டுள்ளது. கேட்டால் "அழகிரி விவகாரத்தில் எங்கள் கட்சி ஆட்கள் மீதே இதே காரணத்திற்காக தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் பிரயோகித்திருக்கிறோம்" என்று

> **"இன்று தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய கட்சி பா.ம.க.தான்."**





மனுநீதிச் சோழன் போல பேசுகிறது! ஆனால் தமிழக அரசு அப்பட்டமான பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. எங்களுக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபடும் விடுதலைச் சிறுத்தைகள் மீது அனுதாபம் காட்டுகிறது அரசு. 1991ல் வாழப்பாடி தி.மு.க.வின் மீது பழி போட்டார் அதனால் நூற்றுக்கணக்கான தி.மு.க. தொண்டர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பில்லாமல் போயிற்று. ஜெயின் கமிஷனில் கலைஞரைத் தாறுமாறாகக் கேள்வி கேட்டார். அப்படிப்பட்ட வாழப்பாடியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார் கலைஞர். நாங்கள் எதற்காக தனிமைப் படுத்தப்படுகிறோம் என்பது புரிகிறது. எங்களை யாராவது அவமானப் படுத்தினால் கலைஞர் ரசிக்கிறார்.

> **“எங்களை யாராவது அவமானப் படுத்தினால் கலைஞர் ரசிக்கிறார்!”**

எந்தக் கூட்டணியில் அதிக இடம் கொடுக்கப்படுகிறதோ அந்த அணியில் சேர பா.ம.க. திட்டமிட்டுக் கொண்டிருக்கிறதா?

சீட்டுக்காக அப்படித் தாவுவது எங்கள் வழக்கமல்ல. கடந்த கால வரலாறுகளை எழுதிப் பார்த்தால் நாங்கள் பலமுறை வஞ்சிக்கப்பட்டிருக்கிறோம். அதன் காரணமாக வேறு கூட்டணிக்குத் துரத்தப் பட்டிருக்கிறோம். ஆனால் நாங்கள் தொடர்ந்து தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருக்கிறோம். அதே சமயம் சூழ்நிலைகளை உத்தேசித்து, கூட்டணி பற்றி முடிவெடுக்கும் உரிமையை, கட்சி எனக்குக் கொடுத்திருக்கிறது.

ஜெயலலிதாவுக்கு கிடைத்துள்ள தண்டனையைப் பற்றி நீங்கள் விமர்சிக்காமல் இருப்பதைப் பார்த்தால் அவருடன் கூட்டணிக்கான கதவைத் திறந்து வைத்திருப்பது போலல்லவா இருக்கிறது.

பொது வாழ்வில் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. கறை படியாத கரங்களுக்குச் சொந்தக்காரர்களைத் தான் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். அதே சமயம் பாதிக்கப்பட்டவர்கள் உச்சநீதிமன்றம் வரை போய் வழக்காடும் வாய்ப்பு இருப்பதையும் மறுக்க முடியாது.


கலைஞர் – ஜெயலலிதா இருவரில் ஜனநாயகவாதியாக யாரைக் கருதுகிறீர்கள்?

இந்தக் கேள்விக்கு என்ன அவசியம்? இதுபோன்ற சர்ச்சைக்குள் நுழைய நான் விரும்பவில்லை.

தற்போதைய அரசியல் சூழலில் மக்கள் மனநிலை பற்றி உங்கள் கணிப்பு என்ன?

1962–67ல் காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்த போது அதை மாற்ற வேண்டும் என்ற வெறி மக்களிடம் இருந்தது. இப்போது காங்கிரஸ், தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. ஆட்சியை மக்கள் பார்த்தாகி விட்டது. ஒரு மாற்றத்தை மக்கள் விரும்புகிறார்கள். ஒரு புதிய கட்சி ஆட்சிக்கு வர வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்ப பா.ம.க. தன் திட்டங்களை வகுக்கும்.

சந்திப்பு : ப்ரியன்
படங்கள் : ராஜன்



“என்ன ஸார் நம் ஸ்கூலில் எஸ்.எஸ். எல்.சி. எழுதிய 347 பேரில் ஒரே ஒரு மாணவன் ஃபெயிலானதுக்குப் போய் மாவட்டக் கல்வி அதிகாரி உங்களை அந்தத் திட்டு திட்டிட்டாரு?”

“என்ன பண்றது! ஃபெயிலாப் போன அந்த ஒரே ஒரு மாணவன் அவரோட மகனாச்சே!”

– உ. ராஜாஜி

மஞ்சளின் மகத்துவம்!

நம் பாரம்பரியத்தில் மஞ்சளுக்கு மிக முக்கியமான ஒரு இடம் உண்டு. எந்தப் பூஜை என்றாலும், ஆரம்பம் பிள்ளையார் பூஜைதான். பிள்ளையார் பூஜை செய்வது, மஞ்சளில் பிடித்து வைத்த பிள்ளையாருக்குத்தான். மஞ்சளுக்கு ஆன்டி-செப்டிக் குணம் உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், அதற்கு இன்னும் ஏராளமான மருத்துவக் குணங்களும் உண்டு என்று பலருக்குத் தெரியாது.

சளி, இருமல், கபம் போன்று அன்றாடம் வரும் உடல் தொல்லைகளுக்கு, மஞ்சள் மிகவும் நல்லதொரு நிவாரணி. மிகச் சிறந்த கிருமிநாசினி. தினசரி சமையலில் சிறிதளவு மஞ்சள் பொடி சேர்த்தால் பொதுவாகவே உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது.

சமீபகாலமாக நடத்தப்பட்ட ஆராய்சிகளில் மஞ்சளுக்கு உள்ள இன்னொரு புது உபயோகமும் தெரிய வந்துள்ளது. அதாவது, மஞ்சளுக்கு, முதுமையைக் கட்டுப்படுத்துகிற சக்தி உள்ளது. இளமையை நீடிக்க வைக்க மஞ்சள் உதவுகிறது என்பதுதான் அது. அதனால்தான், அமெரிக்க நிறுவனங்கள், நம் ஊர் மஞ்சளை எடுத்துக் கொண்டு போய் பலவிதமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, மஞ்சளின் புதுப்புது குணாதிசயங்களைக் கண்டு பிடிப்பதுடன் மட்டுமின்றி அவற்றுக்கான காப்புரிமையையும் கொண்டாட முயற்சி செய்கின்றன.

இப்போது, நவநாகரிகப் பெண்களால், மஞ்சள் தேய்த்துக் குளிக்கிற பழக்கம் கைவிடப்பட்டு விட்டது என்றாலும், அது மிக நல்ல பழக்கம். தோலுக்கு நல்லதொரு நிறத்தை அளிக்க வல்லது அது.

சிலருக்கு, சளி இல்லாமல் இருமல் மட்டும் இருக்கும். சிலருக்கு ஜல தோஷத்துடன் இருமலும் இருக்கும். இரண்டுக்குமே, சில சிட்டிகை மஞ்சள் பொடி கலந்த பாலை அருந்தலாம். இரண்டு, மூன்று நாட்களிலேயே நல்ல பலன் காணலாம்.

மஞ்சளில் குண்டு மஞ்சள், விரலி மஞ்சள், கஸ்தூரி மஞ்சள் என்று மூன்று வகை உண்டு. குண்டு மஞ்சளைத் தான், கல்லில் தேய்த்து, குளிக்கும்போது பெண்கள் பயன் படுத்துவார்கள். கஸ்தூரி மஞ்சள் பொடியையும் உடம்பில் தேய்த்துக் குளிக்கலாம். மருத்துவர்கள், மருந்துகள் தயாரிக்க கஸ்தூரி மஞ்சளைத்தான் உபயோகப்படுத்துவார்கள்.

விரலி மஞ்சள்தான் சமையலுக்குப் பயன்படுத்தும் வகை. மூன்று வகைகள் என்றாலும், ஒன்றுக்கு பதிலாக மற்றொன்றைப் பயன்படுத்துவதால், எந்தவித ஆபத்துமில்லை. இதில்தான் என்று இல்லை. நம் பாரம்பரிய சித்த மருத்துவமுறையில், எந்த மருந்துமே எந்தவிதமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது என்பதுதான் மிகப் பெரிய பிளஸ்பாயிண்ட்.

உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? இன்று இண்டர்நெட்டில், மஞ்சளுக்கு என்று நிறைய வெப் சைட்கள் இருக்கின்றன. மருத்துவ உலகில் மஞ்சள் ஓர் அதிசயம் என்பதாலும், இதனால், உலகளாவிய மார்க்கெட்டில், மாபெரும் வாய்ப்புகள் இருப்பதாலும் அதைப் பயிரிட உலகமெல்லாம் முயற்சி நடக்கிறது.

அமெரிக்க மண் வளத்துக்கும், தட்ப வெப்ப நிலைக்கும் மஞ்சள் வளராது என்றாலும்





டாக்டர் மூலிகைமணி **வெங்கடேசன்**

டாக்டர் **வெ.அபிராமி**



கூட, அங்கே மஞ்சளைப் பயிர் செய்ய மாபெரும் முயற்சிகள் நடந்து வருகின்றன. பாரம்பரிய அறிவின் மூலமாக நாம் கடைபிடிக்கும் முறைகளை விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபணம் செய்து, அவை தங்களது கண்டுபிடிப்புகள் என்று பதிவு செய்து காப்புரிமை பெறுவதே அமெரிக்கா போன்ற மேலை நாடுகளின் முயற்சி. ஆனால், அவர்கள் இன்று கண்டுபிடித்துச் சொல்பவை எல்லாம், நம் முன்னோர்கள் ஏற்கெனவே கண்டுபிடித்து, நடைமுறையில் கடைபிடித்தவைதான் என நிரூபிக்க வேண்டிய கடமை நம் நாட்டுக்கு உள்ளது. அரசாங்கம் இதை உணர்ந்து ஆவன செய்ய வேண்டும்.

நம் கல்லீரலைச் சுத்தப்படுத்தும் பணியை மிகச் சிறப்பாகச் செய்யக் கூடியது மஞ்சள். மஞ்சள் காமாலை வந்து கல்லீரல் பாதிக்கப்படுகிறபோது ஒரிரு சிட்டிகை மஞ்சள் கலந்த தண்ணீரைச் சுட வைத்து அருந்தினால், கல்லீரல் சுத்திகரிக்கப்பட்டு, அது நன்கு செயல்படத் தூண்டப்படும்.

மஞ்சள் ஜீரணத்தை நன்கு தூண்டிவிடும். குடலின் பணியைச் செம்மைப்படுத்தும். உடம்பில் உள்ள வாயுவை அகற்றி, மிதமான அளவில் உஷ்ணத்தை உண்டாக்கும். உடல் துர்நாற்றத்தை அகற்றும்.

மஞ்சள் பூசிக் குளிக்கத் தயங்கும் இளைய தலைமுறையினர், முகத்துக்கு இல்லாவிட்டாலும் உடம்புக்கு, அதுவும் உடையினுள்ளே மறைகிற உடம்புப் பகுதிக்காவது மஞ்சள் தேய்த்துக் குளிக்கலாம். அப்படிச் செய்தால், தனியாக டியோடரன்ட்களைப் பயன்படுத்த வேண்டிய தேவையே இல்லை.

சிலருக்கு சயனஸ், மூக்கடைப்பு சளித் தொல்லைகள் இருக்கும். தலையில் நீர்க் கோர்த்துக் கொண்டு, தலை பாரமாக இருப்பதுபோல உணருவார்கள். அவர்களுக்கு மஞ்சள் பயன்படுத்தி ஒரு எளிய வைத்தியம் :

எண்ணெய் விளக்கில் மஞ்சளைச் சுட்டு, அந்தப் புகையை முகர்ந்தால் போதும்.




நல்ல நிவாரணம் கிடைக்கும்.

மஞ்சள் என்றதும், உடனடியாக ஒரு கல்லூரி ஆசிரியை நினைவுக்கு வருகிறார். சுமார் முப்பது வயதுடைய அவருக்கு, முகத்தாடையிலும், உதடுகளுக்கு மேலும், சிழும் கருமையான ரோம வளர்ச்சி இருந்தது. அவர் ஏதேதோ செய்து பார்த்தும், பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை. ஆலோசனை கேட்க வந்தார் அவர். இரவில் படுக்கப் போகிறபோது மஞ்சளை மைபோல அரைத்து முகம் முழுக்க படரும்படியாய்த் தடவிக்கொள்ளச் சொன்னேன். இந்து மதத்தைச் சேர்ந்தவர் அல்ல என்பதால் அந்த அம்மையாருக்கு மஞ்சள் பூசிக் கொள்ளத் தயக்கம். இது மிகச் சிறந்த வைத்தியம். முயற்சி செய்து பாருங்கள். உடனடிப் பலன் காண்பது நிச்சயம் என்று ஊக்கம் கொடுத்தேன்.

நான் சொன்னபடியே செய்து வந்தார். சீக்கிரமே அவரது பிரச்னை தீர்ந்து போனது. இப்போது தம் மாணவிகளுக்கெல்லாம் மஞ்சளின் மகிமையைப் பற்றி பாடம் எடுக்க ஆரம்பித்துவிட்டார்.

படங்கள் : **யோகா**



எதைச் செய்தாலும் அதை வித்தியாசமாகச் செய்து மற்றவர்களைச் சிந்திக்க வைப்பதுதான் பார்த்திபன் பாணி. நடிப்பு, இயக்கம் இரண்டிற்காகவும் மாநில விருது முதல் தேசிய விருது வரை எல்லாவற்றையும் வாங்கிக் குவித்திருக்கும் இவர் ஓர் எழுத்தாளர். பேனர் கட்டவும், போஸ்டர் ஒட்டவும் கூடாது என்று கூறி தம் ரசிகர்களை மனித நேய மன்றத்தில் ஒருங்கிணைத்துக் கண் தானம் செய்ய வைத்தவர். ‘உடற்கூறு பயில, உன் கூடு கொடு’ என்று கவிதை

கிறுக்கல்கள்!

எழுதிய அவர், வரும் நவம்பர் பன்னிரண்டாம் தேதி ‘கிறுக்கல்கள்’ என்ற தமது முதல் கவிதைத் தொகுப்பை முதல்வர் தலைமையில் வெளியிட இருப்பதாக வந்த தகவலோடு, அவர் வீட்டுக் கதவைத் தட்டினோம்.

‘‘பரபரப்பான இயக்குனர், நடிகர் பார்த்திபனுக்குக் கவிதை எழுதும் மனநிலை வாய்த்திருக்கிறது என்பதை நம்ப முடியவில்லையே!’’

‘‘என்னைச் சுற்றி வாழ்கிற என் சக மனிதர்கள் துயரப்படும்போது நான் உணர்ச்சிவசப்படாமல் இருக்க முடியாது. தெருக் குழந்தைகளைப் பார்த்து நொந்து போய்த்தான் ‘புதிய பாதை’ எடுத்தேன். கோயமுத்தூர் குண்டு வெடிப்பில் கோபம் கொண்டுதான் ‘ஹவுஸ்புல்’ எடுத்துக் கையைச் சுட்டுக் கொண்டேன். அதே கோவையில் விவசாயக் கல்லூரி மாணவிகள் பேருந்தில் உயிரோடு எரிக்கப்பட்டதைப் படமாக எடுத்து, அதைப் பாடமாக்க ஆசைதான். ஆனால் பணம் விளையாட்டு காட்டுகிறது. என்னைப் பாதிக்கிற, அழவைக்கிற, சிந்திக்க வைக்கிற எல்லா விஷயங்களையும் நான் படமாக எடுத்துக்

கொண்டிருக்க முடியாது. ஆனால் என் ஆதங்கம், உணர்ச்சிகளை வெளிப்படுத்தி யாக வேண்டும். அதற்கு ஒரு ஆயுதமாகத் தான் நான் கவிதையைப் பார்க்கிறேன்.

கடவுளையும் கூட மறுபரிசிலனை செய்கிற காலம் இது. மனிதனுக்குள் மரத்துப் போய்விட்ட மனித நேயத்தைத் திரும்பவும் தேடித் தர வேண்டிய மிகப் பெரிய சேவைதான் இப்போதைய தேவை. எனவே மனிதத்திற்கு எதிரான எல்லா விஷயங்களையும் நான் கவிதையாக்க விரும்பினேன். காதல், பாசம் எல்லாவற்றிலும் நிறைய போலித்தனம் இருக்கிறது என புரிந்துகொண்டு அவற்றைக் கவிதையால் கேள்வி கேட்டிருக்கிறேன். ஒவ்வொரு கவிதைக்குக் கீழேயும் பின் குறிப்பு என்றொரு பகுதியுண்டு. அதில் நான் எழுதிய கவிதைகளை, நானே விமர்சனம் செய்திருக்கிறேன். தமிழ்க் கவிதையில் நவீனத்துவ தனத்திற்கு முன்னால் எனது கவிதைகள் என்ன சொல்ல வருகின்றன என்பதை வாசகர்களும் அறிஞர்களும் தான் சொல்ல வேண்டும். ஆனால் ஒன்று, எனது இந்தக் கிறுக்கல்கள், இப்போதைய சமுதாயத்திற்கான தேவையாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் எழுதப்பட்டவை. காலம் கடந்த கவிதைகளாக அவை இருக்க வேண்டும் என்று நான் கவலைப்படவில்லை. அதனால்தான் முடிவுரையில் கூட நான் ஒரு முடிவுக்கு வரவில்லை'' என்று முடித்த பார்த்திபன், முதல்நாள் தான் மலேசியாவில் இருந்து திரும்பியிருந்தார்.

உலகம் முழுவதும் உள்ள தமிழ்த் தொழில் அதிபர்கள் ஒன்றுகூடி ஏற்படுத்தியுள்ள இன்மால் கார்ப்பரேஷன் என்ற கலாசார அமைப்பு, பார்த்திபனை மலேசியாவுக்கு அழைத்து அமைச்சர் டத்தோ சாமிவேலு தலைமையில் 'வாழ்க்கையின் வெற்றியாளர், சிறந்த மனிதர்' என்ற விருதை வழங்கியிருக்கிறது. விளம்பரம் எதுவுமின்றி அந்த விருதை வாங்கி வந்திருக்கும் பார்த்திபன், "இந்த விருது, நான் நடிகன் என்பதற்காகக் கொடுக்கப்பட்டதல்ல. தனிமனித வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த வெற்றிக்காகத் தரப்பட்டது. எனவே எனது ரசிகர்களிடம் இதைக் காட்டிப் பெருமைப்படுவேன்'' என்றார்.


— சக்கரத்தாழ்வார்

மிக நல்ல விஷயம்!

கிளிக்கு விடுதலை!

உண்மையான மகிழ்ச்சி நமக்கு நேரிடுகிற நன்மையால் அல்ல— அடுத்தவர்களுக்கு நம்மால் ஏற்படுகிற மகிழ்ச்சியின் ஆத்மாவுக்குள்தான் அடங்கியுள்ளது.

நான்கு வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கூண்டுக்குள் அடிமைப்பட்ட, சிறகுகள் கத்தரிக்கப்பட்ட பச்சைக்கிளி ஒன்று, வேறு ஒருவர் மூலம் வீட்டுக்குள் வந்தது. அதன் சிநேகம் ஆறுதலாய் இருந்தாலும், அதன் கட்டுப்பாடுகள் உறுத்தலாக இருந்தது.




அது பெண் கிளியாக இருந்ததால், தோட்டத்து ஆண் கிளிகள் தேடிவந்த போதெல்லாம் அதன் துயரம் அதிகரித்துக் கொண்டே போனது.

புத்த துறவிகள், மீனை வாங்கி, மறுபடி அவற்றை ஆற்றில் நீந்த விடுவது போல, கூண்டுக்குள் அடைபட்டு, நம் வீட்டுக்கு வந்த அதற்கு, நம் மூலமாகவே விடுதலை கிடைக்க வேண்டும் என மனம் எண்ணியது.

ஒருநாள், அதன் சிறகுகள் வளர்ந்த நிலையில், கூண்டைத் திறந்துவிட, அது பறந்து சென்றபோது எனக்குள் இருந்த அடிமைத்தனம் விடுபட்டதுபோல உணர்வு. அந்த மகிழ்ச்சி இன்னமும் என் மனத்தில் ஈரமாய் இருக்கிறது.

— இறையன்பு, ஐ.ஏ.எஸ்.



"நேத்து உங்க கடையில கலர் டீ.வி. வாங்கிட்டு போய் வீட்ல படம் பார்த்தா கலரே வரமாட்டேங்குது சார்..."

"அப்படியா? என்ன படம் பார்த்தீங்க?"

"பராசக்தி....!"

— மலர் சூர்யா

இவர்கள் சொல்கிறார்கள்



• கிளியம்மாள்

எனக்கு(கிளியம்மாள், மாதவரம் பெரிய சேக்காடு எண்11, பெருமாள் கோவில் தெரு) உடலில் உப்பு அதிக மாக இருப்பதாக சென்னை யில் சில மருத்துவமனைகளில் சுமார் 5 வருடம் சிகிச்சை பெற்று பின் பல பரிசோத னைக்குப் பிறகு என் கிட்னி ஃபெயிலியர் ஆகி விட்டதாகவும், அதை மாற்றம் செய்வது தவிர வேறு வழியில்லை என்றும் கூறப்பட்டேன். அதற்கு லட்சக் கணக்கில் செலவு செய்யப் பணம் என் னிடம் இல்லாத காரணத்தால் ராயப்பேட்டையில் உள்ள **ரப்பானி வைத்திய சாலாவில்** காண்பித் தேன். ஒரே மாதத்தில் யூரியாவின் அளவு குறைந்து இனி கிட்னி மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள்.



• E. இராமு

நான் (E. இராமு 51/60, மாணிக்க விநாயகர் கோவில் தெரு, பெரம்பூர், சென்னை – 39

கடந்த 10 ஆண்டு கால மாக சோரியாசிஸ் நோயால் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளானேன். பல மருத் துவர்களிடம் காண்பித்தும் பலன் ஏற்படவில்லை. 12.8.99 அன்று **ரப்பானி வைத்தியசாலாவில்** காண்பித்து மருந்து வாங்கி சாப்பிட்டேன். இன்று புதிய தோலுடன் புதிய மனிதனாக மாறியுள்ளேன். இனி இந்த மருத்துவர் காட்டிவரும் வழியே மருத்துவத்திற்கு சிறந்த வழி என்று என்னை போல் அவதியுறும் அனை வருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிசயங்கள் நிகழ்த்தும் அற்புத மருத்துவர்

மேலும் இங்கு மூட்டுவலி, கிட்னி ஃபெயிலியர், குழந்தையின்மை, அல்சர், ஆண்மைகுறை, சோரியாசிஸ், ஆஸ்துமா, காகாய் வலிப்பு மற்றும் சகல வியாதிகளுக் கும் இங்கு சிகிச்சை பெற்று பயன்பெற்ற பல அன்பர்கள் தினமும் இவருக்கு கடிதம் மூல மும், தொலைபேசி மூலமும், நேரிலும் சந் தித்து நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

(திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் காலை 8.30 மணி முதல் 9 மணி வரை டாக்டரின் பேட்டியை விஜய் டி.வி.யில் காணத் தவறாதீர்கள்)



டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்
ரப்பானி வைத்ய சாலா

73/1, டாக்டர் பெசண்ட் ரோடு, மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்;
இராயப்பேட்டை, சென்னை – 600 014. போன்: 8510969, 8410874

டாக்டர் சையத் சத்தாரின் யுனானி மருத்துவ மாத இதழை கடைகளில் கேட்டு வாங்குங்கள்!



* S. Ravi

எஸ்.ரவி, BHEL, Bangalore.


உடம்பில் உப்பு அதிக மாக இருப்பதாக பரி சோதித்து பல மருத்துவ மனைகள் ஏறி இறங்கி தீவிர சிகிச்சைக்குப் பின் என் கிட்னி ஃபெயிலியர் ஆகிவிட்டதாகவும் அதை அறுவை சிகிச்சை செய்து அகற்றுவதே வழி என்றும் கூறப் பட்டேன். பின் **ரப்பானி வைத்ய சாலா** பற்றி கேள்விப்பட்டு அங்கு சென்று சிகிச்சை பெற்றேன். சிகிச்சைக்குப்பின் என் உடம்பில் உப்பின் அளவு குறைந்து கிட்னி ஆபரேஷன் தேவையில்லை என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள்.



• தமிழ்ச்செல்வி

தமிழ்ச்செல்வி, 3/143 அண்ணா சாலை, காரம்பாக்கம், போரூர், சென்னை.

கர்ப்பப்பை கோளாறு காரணமாக சென்னையில் உள்ள ஒரு மிகப் பெரிய மருத்துவமனையில் சிகிச் சைக்கு சென்று பல மாத சிகிச்சைக்குப் பின் என் கர்ப்பப்பையை அகற்ற வேண்டும் என்று கூறிவிட்டார்கள். பின் **ரப்பானி வைத்யசாலா** சென்று சிகிச்சை பெற்றேன். ஒரு சில மாதங்களிலேயே நம்ப முடியாத முன்னேற்றம் ஏற்பட்டு என் கர்ப்பப்பை அகற்றப்பட தேவை யில்லை என்று சோதனை மூலம் கூறிவிட்டார்கள்.





2000 நவம்பர் 5
விக்ரம ஐப்பசி 20
மலர் : 59
இதழ் : 14

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ஏகாதிபத்திய அ.தி.மு.க. அஜெண்டா!

ஜெயலலிதாவை மீண்டும் கட்சித் தலைவராக ஏற்றிருக்கும் அ.தி.மு.க. பொதுக்குழு, அவருக்கு நிபந்தனையற்ற ஆதரவை அறிவித்திருக்கிறது. அது மட்டுமல்ல, அவர் இனி எடுக்க இருக்கும் அத்தனை முடிவுகளையும் ஏற்கப் போவதாகவும் முன்கூட்டியே தெரிவித்து விட்டது. எந்த பதவிக்கு யார் நியமிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது இனி புரட்சித் தலைவியின் முழு முதல் உரிமை! எந்த கட்சிகளுடன் கூட்டணி கொள்ளலாம் என முடிவு செய்வது அவர் கையில்.

ஜெயலலிதாவும் தம் பங்குக்குச் சபதமே செய்து விட்டார் - வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலில் கட்சியை வெற்றிபெறச் செய்யப் போவதாக! அதன் பிறகு, கூட்டணி அல்லாத தனிக்கட்சி ஆட்சி அமைப்பாராம். அது மட்டுமல்ல, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மத்திய அரசை அமைக்கவும் அ.தி.மு.க. உதவும் என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார் ஜெ.

எல்லாவற்றுக்கும் சிகரமாக, 2022-ஆம் ஆண்டில், கட்சியின் பொன்விழா நடைபெறும் போது தாமே தலைவியாக இருந்து நடத்தி வைக்கப் போவதாகவும் சபதம் செய்திருக்கிறார் ஜெ! ஆக, அடுத்த இருபத்திரண்டு ஆண்டுகளுக்கான ஏகாதிபத்திய அ.தி.மு.க. அஜெண்டா தயார்!

டான்ஸி வழக்கில் ஜெயலலிதாவுக்கும் சசிகலாவுக்கும் எதிரான கடுமையான தீர்ப்பு



வெளியான பிறகுதான் இத்தனை கோலாகலமும் நடந்தேறியிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது சட்டத்தையும் நீதியையும் அ.தி.மு.க. பொதுக்குழு எவ்வளவு தூரம் மதிக்கிறது என்பது பட்டவர்த்தனமாகத் தெரியவருகிறது.


தனிநீதிமன்றத் தீர்ப்பு இறுதித் தீர்ப்பு அல்ல என்பது அ.தி.மு.க.வின் வாதமாக இருந்து வருகிறது. ஜெயலலிதாவும் சசிகலாவும் உயர்நீதிமன்றத்தில் மனு செய்துள்ளனர். உயர்நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்யலாம்; அல்லது தனிநீதிமன்றம் விதித்துள்ள தண்டனைக்குத் தற்காலிகத் தடை விதித்துவிட்டு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும், மேல்முறையீடு அனுமதிக்கப்படுவதால் மட்டுமே ஜெயலலிதா நிரபராதி என்கிற முடிவுக்கு வந்துவிட இயலாது. வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடிவு செய்யும் உயர்நீதிமன்றம், விசாரணை முடியும் வரை தனி நீதிமன்றம் அளித்த தண்டனையை மட்டுமின்றி, தீர்ப்பையே ஒட்டுமொத்தமாக நிலுவையில் வைத்தாலன்றி ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட இயலாது.

எனினும், இது குறித்த விசாரங்களின்றி மிகுந்த தன்னம்பிக்கையுடன் அ.தி.மு.க. தலைவி அறிக்கைகளையும் அறிவிப்புகளையும் வெளியிட்டிருக்கிறார். தாம் தேர்தலில் நிற்க முடியாது போனாலும் தமது கட்சியை வெற்றி பெறச் செய்யலாம் என்கிற எதிர்பார்ப்பில் அவர் இயங்குவதாக நம்பலாம்.

இந்நிலையில் அ.தி.மு.க. பெரும்பான்மை கட்சியாக சட்டமன்றத்தில் இடம்பிடித்து ஆட்சி நிறுவப்படுமானால் தமிழகத்தில் ஆட்சி எப்படியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. ஆட்சிக்கு வெளியே இருந்தபடி அதனைக் கட்டுப்படுத்தும் லாலுவைப் போல், 'ரிமோட்' முதல்வராக ஜெயலலிதா; தலைக்குத் தலை நாட்டாண்மை என்கிற தோரணையில் இயங்கக்கூடிய அமைச்சரவை!

அ.தி.மு.க.வின் முன்னணி தலைவர்கள், அமைச்சர்கள் பேரில் தொடுக்கப்பட்டுள்ள லஞ்ச



- ஊழல் வழக்குகள் யாவும் ஆவியாக மறைந்து போய்விடும் என்பதையும் சொல்லத் தேவையில்லை.

தமக்கிருக்கும் ஆதரவைப் பெருக்கவும் பிரகடனப்படுத்தவும் ஜெயலலிதா இயன்ற வகைகளிலெல்லாம் முயன்று வருகிறார்.

இந்திரா காந்தியிடம் சரணடைந்து, கருணாநிதி சர்க்காரியா கமிஷன் விசாரணைகளை வாபஸ் பெறச் செய்ததாகக் கூறுகிறார் ஜெ. அவ்வாறு தாமும் பி.ஜே.பி. அரசிடம் சரணடைந்து வழக்குகளை வாபஸ் பெறச் செய்திருக்கலாம்; ஆனால் செய்யவில்லை என்று பெருமிதப் படுகிறார்.

சர்க்காரியா கமிஷன் அறிக்கைகளின் அடிப்படையில் வழக்குகள் போடப்படிருந்தால் தீர்ப்பு என்னவாக இருந்திருக்கும் என்பதை ஊகிக்க முடியாது. ஆனால், இன்று ஜெ மீது வழக்குகள் தொடரப்பட்டு, பல தீர்ப்புகள் அவருக்குத் தண்டனைகளை வழங்கியுள்ளன. மேலும், கருணாநிதி மீது வழக்குகள் போடாமல் வாபஸ் பெறப்பட்டது தவறு என்று வைத்துக் கொண் டாலும் ஒரு தவறு இன்னொரு தவறை நியாயப்படுத்திவிடாது.

'ஜெ'யின் வற்புறுத்தலுக்கு இணங்கி, மத்திய பி.ஜே.பி. அரசு, அவர் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறாவிட்டாலும் தாமதப்படுத்தி வந்தது என்பது சமீப சரித்திரம். அவ்வாறு வாபஸ் பெறாததால் அதிருப்தியுற்ற ஜெயலலிதா, பி.ஜே.பி. ஆட்சிக்கு ஆதரவை விலக்கிக் கொண்டதும் ஆட்சி கவிழ்ந்ததும் சுலபத்தில் மறந்து ஒதுக்கக்கூடிய நிகழ்ச்சிகள் அல்ல.

பகட்டையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் பட்டவர்த்தனமாகப் பிரகடனப்படுத்திய பொருட்காட்சியாக இருந்திருக்கிறது ஜெயலலிதாவின் ஆட்சிக் காலம். அதனை மீண்டும் வரவேற்று சிவப்புக் கம்பளம் விரிக்கும் தவறை சுயநலநோக்கில் சில கூட்டணி கட்சிகள் செய்தாலும் மக்கள் செய்துவிடலாகாது. ஜனநாயகத்தில், மக்களின் தகுதிக்கேற்பத்தான் ஆட்சி அமையும். மக்கள் தங்கள் தகுதியை நிரூபிக்க வேண்டும். ●

வீடு வரை உறவு!



அமைச்சர்களிடம் வேலை வாய்ப்பு அல்லது மாற்றம் (transfer) வேண்டி பலர் வருவார்கள். எல்லோருடைய கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாமல் இருப்பார் அமைச்சர். அதன் காரணமாக இயல்பாகவே கட்சித் தொண்டர்களுக்கும், தொகுதி மக்களுக்கும் அவர்கள் மீது ஒரு அதிருப்தி இருக்கும். இந்தப் பொதுவான காரணங்களைத் தவிர, வீட்டு வசதித் துறை அமைச்சராக இருக்கும் பிச்சாண்டி மீது கூடுதலாக ஓர் அதிருப்தி இருப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. நெருங்கியிருப்பவர்களுக்குக் கூட அரசின் வாடகை வீடுகளைத் தனது கோட்டாவில் இருந்து ஒதுக்க முடியாமல் இருப்பதுதான் அந்த அதிருப்திக்குக் காரணம். "வீடு ஒதுக்கீடு சீனியாரிட்டி அடிப்படையில் செய்யப்படுகிறது; அது சம்பந்தமாக யாரும் அமைச்சரை அணுக வேண்டாம்" என்று அமைச்சர் வீட்டில் போர்டு போட்டிருக்கிறார்கள்.

"பாவம்... அமைச்சர் என்ன செய்வார்...? ரொம்பவும் கிராக்கி இருக்கின்ற லாயிட்ஸ் காலனியிலோ அல்லது பீட்டர்ஸ் காலனியிலோ ஏதாவது வீடு காலியானால் அது யாருக்கு ஒதுக்கப் பட வேண்டும்" என்று கூட பெரும்பாலான சமயங்களில் அதிகார பீடத்தில் உயரே உட்கார்ந்திருப்பவர்கள் அல்லவா முடிவு செய்கிறார்கள்" என்று சொல்கிறார் கோட்டையிலுள்ள இளநிலை அதிகாரி ஒருவர். அமைச்சர், தளபதி கிழிக்கும் கோட்டைத் தாண்டாதவர்!

அமைச்சர் பிச்சாண்டியின் தொகுதி திருவண்ணாமலை. மாணவரணியில் தீவிரமாகச் செயல்பட்டவர். பின்னர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர். இருமுறை மாவட்ட செயலாளராகவும் இருந்திருக்கிறார். 1989ல் சட்டமன்ற உறுப்பினர். 1996ல் கழகம் வென்ற போது, பிச்சாண்டியும் வெற்றி பெற்று அமைச்சராக உயர்வு பெற்றார். வீட்டு வசதித் துறை ஒதுக்கப்பட்டது.

கிரிவலம் காரணமாக திருவண்ணாமலைக்குக் கிடைத்திருக்கும் புதிய அந்தஸ்துக்கு ஏற்ப பல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறார் அமைச்சர். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு நகரின் தேவையை மதிப்பிட்டு, இப்போது குடிநீருக்கு வேண்டிய அடிப்படை கட்டுமான வசதியைச் செய்து முடித்துவிட்டார். ஒரு மனிதனுக்குத் தினசரி 70 லிட்டர் நீர் தேவைப்படும் என்பது ஒரு அளவீடு. திருவண்ணாமலை நகரில் எல்லோருக்கும் 70 லிட்டருக்கு மேலேயே தண்ணீர் கிடைக்க வழிசெய்திருக்கிறார். லட்சக்கணக்கான மக்கள், கிரிவலம் அன்று கூடுவதால், சுற்றியுள்ள சாலைகளை கான்க்ரீட் சாலைகளாகப் போட்டு விட்டார். பெண்கள் மற்றும் ஆண்கள் கல்லூரிகள் வந்திருக்கின்றன. தனியார் சர்க்கரை ஆலை செயல்பட இருக்கிறது.

1989ல் மாவட்டம் உருவானாலும், அமைச்சரின் முயற்சி காரணமாக இப்போதுதான் ஆட்சியாளர் அலுவலகம் ஆறு கோடி செலவில் கட்டப்பட்டு, திறக்கப்பட்டு இருக்கிறது. பல மாவட்ட அலுவலகங்களும் வந்திருக்கின்றன. கிரிவலப்பாதை 40 லட்சம் செலவில் தார்ச் சாலையாகப் போடப்பட்டிருக்கிறது.

நகரின் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்க பை-பாஸ் சாலை போடுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. ராஜகோபுர திருப்பணிகளை முடித்து விரைவில் கும்பாபிஷேகம் நடத்த இருக்கிறார்கள். மாவட்ட மருத்துவமனைக்கு ஸ்கேன் வசதி கிடைத்திருக்கிறது.

அமைச்சருக்குத் தனது ஒத்துழையாமை போக்கைக் காட்டி வருகிறது திருவண்ணாமலை நகராட்சி. வளர்ச்சித் திட்டங்கள், தி.மு.க. அரசுக்கு நல்ல பெயரை வாங்கித் தந்து விடுமே என்ற பயம் காரணமாக, பல விஷயங்களில் முட்டுக்கட்டை போடுகிறது, அ.தி.மு.க. தலைவரைக் கொண்டுள்ள நகராட்சி. உழவர் சந்தை அமைக்க இடம்கொடுக்க நகராட்சி தாமதித்ததால், தாசில்தார் அலுவலக வளாகத்திலேயே உழவர் சந்தையை அமைத்து விட்டார்கள்! அதே போன்று பாதாளச் சாக்கடை திட்டத்துக்கு நிதியெல்லாம் ஒதுக்கப்பட்டு, பணிகள் துவக்கப்படும் நிலையில், பம்பிங் ஸ்டேஷன்கள் கட்டுவதற்கு நிலம் ஒதுக்குவதில் நகராட்சி தாமதம் காட்டுகிறது. "இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் போது, கட்சி அரசியலை மனத்தில் கொள்ளாமல் இருக்கலாமே?" என்று வேண்டுகோள் வைக்கிறார் அமைச்சர்.

கிராமப் பகுதிகளையும் அமைச்சர் புறக்கணிக்கவில்லை. வேட்டவலம், பெண்ணாத்தூர் ஆகிய இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் செயல்பட இருக்கிறது. கோணலூர், கீக்களூர், வேங்கிக்கால், ராயம்பேட்டை ஆகிய இடங்களில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அமைச்சர் தமக்கு ஒதுக்கப்படும் தொகுதி நிதியைப் பெரும்பாலும் கிராமப் பள்ளிகளில் வகுப்பறைகள் கட்டத்தான் செலவிட்டிருக்கிறார். ஹட்கோ நிறுவனம் வருடத்திற்குப் பத்து கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அந்தக் கிராமங்களில் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி, மாதிரி கிராமங்களாக மாற்றி வருகிறது. 1987லேயே தமது தொகுதியிலுள்ள சுழிகுளம் என்ற கிராமத்தை அப்படி மாதிரி கிராமமாக மாற்றியிருக்கிறார் அமைச்சர்.

"அவரை அணுகுவது மிகவும் எளிது; வேறு இலாகாவில் நடக்க வேண்டிய பணி என்றாலும், தயங்காமல், மற்ற அமைச்சர்களிடம், பலமுறை பேசி முயற்சி செய்வார்" என்கிறார்கள் உடன்பிறப்புக்கள்.

அமைச்சரின் இலாகாவான வீட்டு வசதித் துறையில் பெரிய அளவு சாதனை செய்வதற்கான வாய்ப்புகள் ஏதுமில்லை. கடந்த நான்கு வருடங்களில் 25000 வீடுகளைக் கட்டியிருக்கிறது வீட்டு வசதி வாரியம். 60,000 நபர்களுக்கு வீட்டு மனைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்களின் மூலம் 700 கோடி ரூபாய் மக்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 45 கோடி செலவில் புதிய குடியிருப்பைக் கட்டியதைப் பெரிய சாதனையாகச் சொல்கிறார்கள் இலாகா அதிகாரிகள். மக்களுக்கு வீட்டு வசதியை உருவாக்குவதில் அகில இந்திய அளவில் எட்டாவது முறையாக முதல் இடத்தைப் பெற்று விருது வாங்கியிருக்கிறார்கள்.


அமைச்சர் கையில் D.T.P. எனப்படும் Town Planning இலாகாவும் இருக்கிறது. இந்த இலாகாவில் எடுக்கப்பட்ட ஒரு முடிவு சட்டமன்றத்தில் பரபரப்பை உண்டாக்கியது. கோடைக்கானல் நகரில் 're-classification' ஆர்டர் போட்ட போது ஒரே கசமுசா. "அமைச்சர் யாருக்கோ சலுகை காட்டுவதற்காக இப்படி ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறார்" என்றெல்லாம் பேச்சுகள்! "ஜெயலலிதா ஆட்சியில் முறைகேடாக ஓட்டல் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அந்த விவகாரம் வேறு; தி.மு.க. அரசில் போட்ட re-classification ஆர்டர் என்பது வேறு. இரண்டையும் போட்டு குழப்பி, குற்றம் சாட்டினார்கள்" என்கிறார் நகரமைப்பு அதிகாரி ஒருவர். 'எதற்கு வம்பு' என்று re-classification ஆர்டரையே ரத்து செய்து விட்டார் முதல்வர். அரசு வட்டாரத்தில் கோடைக்கானல் என்றாலே ஒரு அலர்ஜி ஏற்பட்டிருக்கிறது!

— ஆர்.எஸ்.

மக்கள் போடும் மதிப்பெண்

டினோசர்

அறுபது லட்சம் வருஷங்களுக்கு முன்பு பூமியில் டினோசர்கள் ரவுசு விட்டுக் கொண்டிருந்த காலம். டினோசர் முட்டை ஒன்றைச் சாமர்த்தியமாகச் சுட்டுக் கொண்டு வருகிறது ஒரு பறவை. வழியில் அது தவறி



விழுந்து ஆறு, மலை, அருவி, ஓடை... என்றெல்லாம் பயணித்து, வெகுதூரம் சென்று, குரங்குகள் வாழும் ஒரு நந்தவனத்துக்குள் வந்து விடுகிறது. முட்டை பொரிந்து டினோசர் வெளிப்படுகிறது. அதை ஆசையாய் எடுத்து வளர்க்கப் பிரியப்படுகிறது ஒரு தாய்க் குரங்கு. வழக்கம்போல ஒரு கிழக் குரங்கு அதைத் தடுத்து, அதை வீசி எறிய முற்படும்போது, அந்தக் கடைசி வினாடியில் மனசுமாறி தங்களுடனேயே வளர்க்க முடிவு செய்கின்றன. ('மாமிசத்தை வெறுக்கும்படி வளர்ப்போம்' என்று தாய்க் குரங்கு சமாளிப்பது ஜோர்!) சில வருஷங்கள் சென்று படுபிரம்மாண்ட சைஸில் வளர்ந்து நிற்கும் டினோசர் முதுகில், ஜாலியாகச் சவாரி செய்கின்றன அந்தக் குட்டிக் குரங்குகள்! திடீரென்று ஒரு நாள்.. எரிகற்கள் சரமாரியாகப் பூமியைத் தாக்குகின்றன. அவர்களிருக்கும் பகுதி நாசமாகிப் போகிறது. 'பஞ்சம் பொழைக்க' புதிய இடம் தேடிப் புறப்படும் டினோசர் + குரங்குகள் டீம் ஒரு மலைப் பகுதியை வந்தடைகின்றன. அங்கே சின்னதும் பெரிசுமாய் ஒரு பெரிய டினோசர் பட்டாளமே வசிக்கிறது! அவையும் பசுமையான இடம் தேடித்தான் செல்கின்றன.

பசி, தாகம், வலி என்று இயற்கை வறுத்தெடுக்கிறது. டினோசர்களின் மற்றொரு வில்லன் கோஷ்டி, சாது டினோசர்களை அடித்துக் கொன்று தின்று வருகிறது. பிறகென்ன... அவர்களுடன் ஒரு ஃபைட்... அது வரை தலைவனாயிருந்த இளவரசன் போரில் இறந்து போக, நம்ம ஹீரோ டினோசர் இளவரசியைக் காதலுடன் கைப்பிடித்து, தலைமை தாங்கி, ஒரு புதிய வளமையான வனத்துக்குத் தனது கூட்டத்தையும், வளர்ப்பு குரங்கு குடும்பத்தையும் கொண்டு வந்து சேர்க்க, படம் சுபம்.

படத்தில் எல்லோரையும் 'ஜஸ்ட் லைக் தட்' புறங்கையால் தள்ளிவிட்டு நம்மை பிரமிக்க வைப்பதில் முதலிடம் பிடிப்பது அனிமேஷன் வித்தைகள்தான். ஒரு பறவை பறந்தால் காமிராவும் கூடவே பறக்கிறது. நீருக்குள் அமிழ்ந்தால் காமிராவும் அமிழ்கிறது. டினோசர் எதையாவது மென்றால், காமிரா அதன் வாய்க்குள் சென்று உட்கார்ந்து கொள்கிறது. அருவியிலிருந்து திவலைகளாய்த் தெறிக்கிறது.

உலகம் முழுக்கச் சுற்றி, அற்புதமான இயற்கை எழில் கொஞ்சும் லொகேஷன்களைச் சுட்டுக் கொண்டு வந்து, அங்கே அனிமேஷன் டினோசர்களைப் படு தத்ரூபமாக உலவ விட்டிருக்கும் இந்த ஒன்றரை மணி நேரப் படத்தை நீங்கள் பார்க்கிறீர்களோ இல்லையோ, உங்கள் வீட்டுச் சிறுசுகள் மிஸ் பண்ண விடாதீர்கள். பின்னாளில் விஷயம் தெரிந்தால், உங்களை ஒரு ஜந்துவைப் போல் அவர்கள் பார்க்கக் கூடும்.

- ஜீவன்

ஐம்பதாண்டு பொதுவாழ்வில், மக்களின் மனத்தைத் தொட்டவர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என எல்லா திசைகளிலும் அவருக்கு நேசக்கரம் நீளும். அன்பிலும், அகிம்சையிலும் நம்பிக்கை கொண்ட இந்தக் காந்தியவாதி, தமது பொதுவாழ்வு அனுபவங்களில் சந்தித்த பல நூறு சம்பவங்களை, வெற்றிகளை, நம்மிடம் நினைவு கூர்ந்தார். அவற்றிலிருந்து ஐம்பது நினைவுச் சிதறல்கள் மட்டும் இங்கே.



ஆண்டுகள் – நினைவுகள் –

1. காந்திஜியின் கட்டளையை ஏற்று, பதினெட்டு கதர் தறிகளை நிறுவினார் தந்தையார். வீடு வீடாகச் சென்று, நூற்று முடித்த கதர் நூல் 'சிட்டங்களை' வாங்கி வருவேன். அப்போது எனக்குப் பத்து வயது.

2. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நெசவாளர்களை, உட்கார வைத்து, அவர்கள் முன் என்னை உரையாற்றச் செய்வார். தந்தை ஹரிகிருஷ்ணனே எனக்கு முதல் பேச்சுப் பயிற்சியாளர் ஆனார்.

3. நெல்லை அருகே, உவரியில் சுயம்புலிங்க சுவாமி கோயில். அரங்காவலர் குழு தேர்தல் நடந்துகொண்டிருந்தது. சிதம்பரநாதன் என்பவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். எனது பேச்சை எனக்குத் தெரியாமல் பல இடங்களில் கேட்டிருந்த அவர், வேடிக்கை பார்த்து நின்ற என்னைத் துணைத் தலைவராக முன் மொழிந்தார். பதினாறு வயதில் அறங்காவலர் குழு துணைத் தலைவராகிப் பொதுவாழ்க்கைக்கு வந்தேன்.

4. சுதந்தர இந்தியாவில் பங்கேற்க மறுத்த திருவிதாங்கூர் சமஸ்தான அரசு, சுசீந்தரம் தேரோட்டத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டபோது யானையை விட்டு பக்தர்களைத் துரத்தியது. துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. தேரோட்டம் பார்க்கச் சென்றிருந்த நான், கண் முன்னே பலர் துடித்துச் சாவதைக் கண்டேன். வாழ்வின் முதல் கசப்பான அனுபவம்.

5. கூட்டுறவு சங்க தணிக்கை அதிகாரியாக வேலை. விவசாயக் கடனைத் திரும்பக் கட்டாத ஒரு கிராமத்து பெண்ணின் வீட்டிற்கு ஜப்தி செய்யச் சென்றோம். ஒரே அசையும் சொத்தான பசுமாட்டைக் கட்டிக் கொண்டு அவர் அழுவதைப் பார்க்க சகிக்கவில்லை. பசுமாட்டை ஜப்தி செய்யக் கூடாது என்று ஊழியர்களைத் தடுத்தேன். 'நீங்கள் அதிகாரி' என்றனர். அலுவலகம் திரும்பியவுடன் வேலையை ராஜினாமா செய்தேன்.

6. சங்கு கணேசனின் 'கலை மன்றம்' இலக்கிய இதழில், 'வீழ்ந்த காதல்' என்ற எனது முதல் சிறுகதை பிரசுரமானது. பின்னர் அவரே தமது மகள் கிருஷ்ண



குமாரியை 1960ல் எனக்கு மணம் முடித்து வைத்தார். வீழ்ந்த காதல், வாழ்ந்த காதலானது!

7. அகாஷ்வாணியைத் தமிழில் சென்னை வானொலியாக மாற்றக் கோரி பங்கேற்றப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி, முதல் வெற்றி.

8. 1965-ல் இளைஞர் காங்கிரஸ் தலைவராக, பொறுப்பேற்று, சீருடை, உறுப்பினர் அட்டை, மகளிர் பிரிவு போன்றவற்றை ஏற்படுத்த, காமராசரிடம் பாராட்டு!



9. தமிழக முதல்வராக அடுக்கடுக்கான சாதனைகள் செய்தும் விருது நகர் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார் காமராசர் (1967). என்னை வெகுவாகப் பாதித்த முதல் நிகழ்ச்சி இது.

10. காந்தியின் தொண்ணூற்றெட்டாவது பிறந்த தினத்தை முன்னிட்டு, குமரி முனையிலிருந்து சென்னை வரை தொண்ணூற்றெட்டு இளைஞர்களுடன் முதல் அரசியல் பாதயாத்திரை (1967). அச்சரப்பாக்கத்தில் தலைவர் காமராசர் எதிர்கொண்டு வரவேற்றார்.

11. 1992 ஆம் ஆண்டு கன்னியாகுமரியிலிருந்து மீண்டும் தொண்டர்களுடன் பாத யாத்திரையாகப் புறப்பட்டுச் சென்னை வந்தேன். காமராசர் எதிர்கொண்டு வரவேற்ற அதே அச்சரப்பாக்கத்தில் இந்த முறை அ.தி.மு.கவினர் எங்களைத் தாக்கினர்!

12. நாராயணஸ்வாமி நாயுடு நடத்திய விவசாயிகள் போராட்டம். கலந்து கொள்ள காமராசரால் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தலைவர் என் மீது வைத்த நம்பிக்கையின் முதல்படி.

13. சேலத்தில் நெசவாளர்கள் தொடர் போராட்டம். மீண்டும் காமராசர் ஆணைப்படி, சேலம் சென்றேன். ஒரு மாதம் தங்கி, தினசரி இரவு பொதுக்கூட்டம் நடத்தி, பகலில் சிறை செல்லும் போராட்டக் குழுவை வழி நடத்தினேன்.

14. 1972ல் தமிழக காங்கிரசின் நான்கு மாநிலச் செயலாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டேன். காங்கிரசில் இது எனக்கு இரண்டாவது பெரிய பொறுப்பு.

15. அக்டோபர் இரண்டில் (1975) பெருந் தலைவர் காமராசரின் மரணம். என்னைப் போலவே அடி மட்டத் தொண்டனுக்கும் பேரிழப்பு. தலைமையின்றி தமிழக காங்கிரஸ் தவித்தது.

16. இந்திய அரசியல் வரலாற்றையே

உலுக்கிய அவசர நிலைப் பிரகடனம். ஒரு மாதம் தலைமறைவாகி, நெய்வேலி வந்தேன். அங்கே என்னையும், எனது சகா பி. ராமச்சந்திரனையும் கைது செய்யப் போவதாக தகவல் வந்தது. இதனால் இருவரும் பண்ருட்டி பாலத்திற்குக் கீழே பகல் முழுதும் ஒளிந்திருந்து இரவு வீடு திரும்பினோம்.

17. மறுநாள் கட்சி அலுவலகமான சத்தியமூர்த்தி பவனுக்குக் கிருஷ்ணா என்ற போலீஸ் அதிகாரி வந்தார். எந்த நேரத்திலும் உங்களைக் கைது செய்வேன், எங்கும் செல்லாமல் தயாராயிருங்கள் என்றார். இருபத்து ஏழு நாட்கள் தினசரி கட்சி அலுவலகத்திற்கு போன் செய்து இன்று நீங்கள் கைது என்று சொல்லுவார். நான் தயார் என்பேன். இறுதிவரை அவர் கைது செய்யவே இல்லை!

18. ரிக்ஷா தொழிலாளி ஒருவரைக் கொண்டு எங்கள் பணிமனையான 'காமராஜ் நிலையத்' திறப்பு விழா. உழவர், உழைப்பவர் போன்றவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

19. 'கட்சி எல்லை கடந்து, கன்னித் தமிழ் வளர்ப்போம்' என்ற கொள்கையுடன் 1978ல் இலக்கியப் பேரவை துவக்கம். சனிக்கிழமை தோறும் ஆற்றப்பட்ட உரைகளை வானதி பதிப்பகம் தொகுத்து வெளியிட்டது.

20. உழவர், நெசவாளர் கோரிக்கைகள், மதுவிலக்கு, சட்டம் ஒழுங்கு, விலைவாசி உயர்வு ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம். இதில் ஐம்பத்தாறாயிரம் பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். சென்னை மத்திய சிறைச்சாலையில் எனக்குத் தனிமைச் சிறை வழங்கினர். என் அரசியல் வாழ்வின் மிகப் பெரிய போராட்டங்களில் இது முக்கியமானது.

21. சத்தியமூர்த்திபவன் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கப் பணம் இல்லை. அலுவலகத்தில் நீண்ட நெடுங்காலமாக சேர்த்து வைத்திருந்த செய்தித் தாள்களை, பழைய புத்தகக் கடையில் விற்று ஊதியம் கொடுத்த கொடுமை. உச்சமாக, காமராசர் பயன்படுத்திய காரை சோமசுந்தர நாடார் என்ற காப்பித் தூள் வணிகரிடம் விற்றோம்.

22. தொண்டர்களிடம் துண்டு ஏந்தி, நிதி வசூலித்து அதே காரை மீட்டேன். இப்போது காமராஜர் அரங்கில் நினைவுச்சின்னமாக அது இருப்பதில் எனக்கு மனநிறைவு.

23. 1977ல் முதன்முறையாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி. விருதுநகர் தொகுதியில் நான் வெற்றி பெற ஒரே ஒரு சுவரொட்டி மட்டுமே அடித்தேன். 'அப்பச்சி காமராசர் போற்றிய தொகுதி. அவர் தொண்டன் என்பதே என் தகுதி' - என்பதுதான் அந்தச் சுவரொட்டி.

24. பாராளுமன்ற கேள்வி நேரத்தில், ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில்தான் வினா தொடுக்கலாம் என்ற நிலை. தமிழிலேயே கேள்வி கேட்டதால் தொடர்ந்து வெளியேற்றப்பட்டேன். இறுதியில் வெற்றி கிடைத்தது. தமிழில் மட்டுமின்றி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒரியா, வங்காளி போன்ற மொழிகளுக்கும் இதே அந்தஸ்து கொடுத்தனர்.

25. பண விடைத்தாள், காசோலை, தந்தி, பயணப்பதிவு போன்றவையும் தமிழில் வேண்டும் என்ற கோரிக்கைக்கும் வெற்றி.

26. 1978ல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, அரிஜனங்களின் பிரச்சனைகளை அறிய கோவையிலிருந்து சென்னை வரை நடைப்பயணம் மேற்கொண்டேன். ஒவ்வொரு நாள் இரவும், திட்டமிட்டு ஒரு ஏழை அரிஜன சகோதரனின் குடிசையில் தங்கி இரவு உணவருந்தியபோது, அவர்களது பிரச்னைகளின் பல கோணங்கள் புரிந்தன. அதனால் நோக்கங்களும் விரிந்தன.

27. அதிகாரத்தில் இருந்தபொழுது எத்தனையோ பொருட்களுக்கு வரி விலக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறேன். ஆனால் ட



''குவார்ட்டர் மூடியும், இங்க் பாட்டிலும்'ன்னு ஒருபடம் எடுத்தீங்களே என்ன ஆச்சு?''

''படம் ஊத்திக்கிச்சு சார்!''

— ரெவீ

கடைக்கு வரி விலக்குப் பெற்றுத் தந்ததில் அதிக மகிழ்ச்சி. காரணம் அதை நடத்து பவனும் ஏழை. அங்கு டீ குடிப்பவனும் ஏழை.

28. இந்திய சுதந்திரப் போராட்டத்தை மக்கள் தினமும் நினைவு கூரும் வகையில் முதல் தேசிய நாட்காட்டியை உருவாக் கினேன்.

29. 1978 ஜூன் 18ல் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் என்கிற புதிய கட்சி. மூவண்ணக் கொடியின் நடுவே சுடர்விடும் தீபம் – இதுதான் கட்சிக் கொடி. பல லட்சம் தொண்டர்களைத் தந்த தாய் மடி.

30. தமிழக சட்டமன்றத் தேர்தல். 1980–84 எம்.ஜி.ஆருடன் தேர்தல் கூட்டணி. ஒதுக்கப் பட்ட பத்து தொகுதிகளில் ஆறு தொகுதி களில் கா.கா.தே.கா வென்று சாதனை. எனக்குச் சென்னை திருவொற்றியூர் தொகு தியில் வெற்றி.

31. நிலவில் கால் பதித்த நீல் ஆம்ஸ்ட் ராங் சென்னை விஜயம். சோழா ஐந்து நட்சத்திர விடுதியில், ஆம்ஸ்ட்ராங் அளித்த விருந்தில் எம்.ஜி.ஆரும் நானும் சிறப்பு அழைப்பாளர்கள். தொகுதியிலிருந்து திடீர் அழைப்பு! இறந்து போன மீனவக் குழந் தையை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்ல, எண்ணூர் – பவுண்டரி தடை விதித்தது. இதனால் அங்கே பெரும் கலவரம் வெடிக் கும் சூழல். சம்பவ இடத்திற்குச் சென்று உடன் உண்ணாநோன்பு தொடங்கினேன். முதல்வர் எம்.ஜி.ஆர் விரைந்து வந்து உண்ணாவிரதம் என்று என்னுடன் அமர்ந்துவிட்டார்! இடுகாட்டுப் பாதை திறந்தது!

32. இப்படிப் பாசம் காட்டிய எம்.ஜி.ஆருக்கு எதிராகத் திருச்செந்தூர் இடைத்தேர்தலில் வேட்பாளரை நிறுத்தி யதால் நட்பில் நெருடல். தொண்டர்கள் போர்வையில் வந்த போலிகளை நம்பிய எனக்கு முதல் தோல்வி.

33. வீடுதோறும் தோட்டங்கள் அமைக்க, தொண்டர்களையும் பொதுமக்களையும் கேட்டுக் கொண்டேன். இதற்காக காய்கறி, விதைகள், மரக்கன்றுகளை இலவசமாக வீடு வீடாகச் சென்று வழங்கியதை மறக்க முடியாது. ஆனால் இத்தத் திட்டம் மக்களின் ஆர்வமின்மையால் தோல்வி.

34. வெளிநாட்டு சுற்றுப்பயணத்தின் விளைவாக, இரு கட்சி ஆட்சி முறை, இந்தியாவிலும் கொண்டு வரப்பட்டால், அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படும்; அதன் விளைவாகப் பொருளாதாரம் உயரும் என நம்பினேன். எனது முயற்சிக்குத் தோல்வி.



“என் நிலத்தை நாலா பிரிச்சு நாலு பேருக்கு வித்து என் கடனை அடைச் சேன்...”

“அது பரவாயில்லையே... நம் முத்து ஒரே நிலத்தை நாலு பேருக்கு வித்துட்டு ஜாலியா மேல்நாட்டுக்குக் கிளம்பிட் டான்!”

– பிரியா ஷாந்தகுமார்

35. பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது, ஜனதா கட்சித் தலைவர் சந்திர சேகரின் நட்பு கிடைத்தது. அவரது வேண்டு கோளை ஏற்று கா.கா.தே.காவை ஜனதா கட்சியுடன் இணைத்தேன். இது என் அரசியல் வாழ்வின் மிகப் பெரிய வீழ்ச்சி. ஜனதா கூடாரத்தில் வஞ்சிக்கப்பட்டோம்.

36. இந்திராகாந்தி அம்மையார் படு கொலை. அஞ்சலி செலுத்த டெல்லி சென்றபோது 'பழைய காங்கிரஸ்காரர்கள் ஒன்று சேர வேண்டும். நீங்கள் வருவீர்களா அனந்தன்?' என்று கேட்டது நெஞ்சை உலுக்கியது.

37. 1986ல் திரும்பவும் தாய் காங்கிரசில் இணைந்து, மூப்பனார் தலைவராக இருக்க, நான் துணைத் தலைவர்.

38. காங்கிரஸ் வளர்ச்சிக்காக 'வளர்க்கும் கை' நாடகத்தை எழுதி, அதில் நெசவாளி யாகவும், பாரதியாகவும் நடித்தது, என் இலக்கியப் பணியின் மணிமகுடம்.

39. பதினெட்டு வயதினருக்கு வாக் குரிமை கேட்டு, ஒரு லட்சம் மாணவர் களிடம் கையெழுத்து பெற்று டெல்லி

மக்கள் சபை தலைவரிடம் அளித்தேன். அந்தக் கோரிக்கைக்கு வெற்றி கிடைத்ததையும் மறக்க இயலாது.

40. 1987ல் ஓய்வின்றி உரையாற்றியதால் தொண்டையில் கட்டி ஏற்பட்டது. பேச்சு நின்றது. அறுவை சிகிச்சை செய்தும் பேச்சு வரவில்லை. காஞ்சி மடம் சென்று ஸ்ரீ மகா பெரியவரிடம் ஆசி வேண்டினேன். அவர் தமது பூக்கூடையிலிருந்து மலராத ஒரு மொட்டை எடுத்து என் கண் முன் இதழ்களைப் பிரித்தார். கையால் போய் வா என்று சைகை செய்தார்... வீட்டுக்கு வரும் வழியிலேயே பேச்சு வந்தது.

41. கங்கை, யமுனை நதிகளைக் குமரிக் கடல் வரை கொண்டு வர நாடாளுமன்றத்தில் கோரிக்கை வைத்தேன். ராஜீவ்காந்தி கொள்கை அளவில் ஏற்று உறுதி தந்தார்.

42. 'உழவன் சேற்றிலே கால் வைக்கா விட்டால் ஒருவரும் சோற்றிலே கை வைக்க முடியாது' எனக் கூறி விவசாயத்திற்கு இலவச மின்சாரம் கேட்டு நடைபயணம்; சிறை; சிறையில் வெற்றி!

43. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகப் (1995) பொறுப்பேற்று சத்தியமூர்த்தி பவனில் நுழைந்தபோது ஒரு நாற்காலி, மேசைகூட இல்லாதது கண்டு அதிர்ச்சி. இதுவரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர்களாக இருந்த தலைவர்களின் படங்களைச் சேகரித்து சத்தியமூர்த்தி பவனில் வைத்து காங்கிரஸ் பாரம் பரியத்தை உணர்த்தினேன்.

44. தேர்தலில் போட்டியிடுவோர் சொத்துக் கணக்கைக் காட்ட வேண்டும் என்று அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியில் வலியுறுத்தினேன், கடைபிடிக்கவும் செய்தேன். ஆனால், என்னைக் கோமாளியாக, ஏமாளியாக் எள்ளி நகையாடினர்.

45. உலக மக்கள் ஒன்று பட 'உலகப் பொதுமொழி' ஒன்று வேண்டும் என்று ஐநா சபையில் வலியுறுத்தினேன். 'இந்தியர்களின் விசாலப் பார்வை' என ஐநா பாராட்டியது.

46. நான் படித்த பத்தாயிரத்திற்கும் அதிகமான புத்தகங்களைப் பொதுமக்களும் படித்துப் பயன்பெற இலவச நூல் நிலையம் அமைத்தேன்.

47. தமிழகத்தில் உள்ள 5 கோடி பனை மரங்களை நம்பி வாழும் தொழிலாளர்களுக்குப் பனை வாரியம் வேண்டிய போது முன்னாள் முதல்வர் ஜெய லலிதாவும் இந்நாள் முதல்வர் கலை ஞரும் அதற்கு உத்தரவு பிறப்பித்தனர்.

48. இப்போதெல்லாம் நான் காது குத்து விழாக்களில் அதிகம் பங்கு பெறுகிறேன். காரணம் அரசியலில் எனக்குத் தான் அதிகமாகக் காது குத்தப்பட்டது.

49. குடியாட்சி மலர்ந்துள்ள நாட்டில் பேச்சாற்றலை வளர்ப்பது எனது கடமை. நீங்களும் பேச்சாளர் ஆகலாம் நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் நடத்தும் பேறு பெற்றுள்ளேன்.

50. எனது பொதுவாழ்வின் பொன் விழா கடந்த மாதம் தூத்துக்குடியில் நடந்தது. நான் எந்தப் பொறுப்பிலும் இல்லாதபோதும் கலைஞர் உள்ளிட்ட அனைத்து கட்சி நண்பர்களும், லட்சக்கணக்கான தொண்டர்களும் ஒன்று திரண்டு வாழ்த்தியபோது கண்ணீர் பெருகியது.

சந்திப்பு: **ஜெயன்**

மிக நல்ல விஷயம்!



அதிருப்தி அக்னி!

இதுவரை நீங்கள் எழுதிய கவிதைகளிலேயே மிகச் சிறந்த கவிதை எது என்று ஒரு கவிஞனைக் கேட்டார்கள். 'இனிமேல் எழுதப் போவதுதான்' என்று அவனிடமிருந்து பதில் வந்தது. நானும் அந்தக் கட்சிதான். மிகச் சிறந்த நிகழ்ச்சி ஒன்றை இனிமேல்தான் கடவுள் எனக்காக எழுத வேண்டும். பல மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள் என் வாழ்வில் நடந்துள்ளன, என்றாலும் மிகச் சிறந்த நிகழ்ச்சி நடந்திருப்பதாக நான் திருப்தியடையவில்லை. அப்படி திருப்தியடைந்துவிடும் பட்சத்தில் அன்றுடன் என் வாழ்வு பூரணமாகி விடும். அதிருப்திதான் என் வாழ்வுக்கான அக்னி. அந்த அக்னி அணையாதபடி நான் பாதுகாக்கிறேன். அதுவே வளர்வதற்கான வழி என்பதே எனது வாழ்வியல்.

— கவி சிவம்

கேரள எம்.பியான வயலார் ரவி தமது வீட்டுத் திருமணத்தை குருவாயூர் கோவிலில் நடத்தி முடித்த கையோடு கேரளத்தில் ஒரு பூகம்பம் வெடித்திருக்கிறது. காரணம் ரவியின் மனைவி கிறிஸ்தவப் பெண். கோவிலுக்குள் இந்து அல்லாத ஒருவர் வந்துவிட்டதால் கள் அல்லாத யாரும் வரக் கூடாது' என்று சொல்ல, கிறிஸ்தவர்களுக்கும் உரிமை உண்டு! பாரம்பரிய வழிபாட்டு முறைகளில் தலையிட சட்டத்துக்கு அதிகாரமில்லை என்பதால் இது விஷயத்தில் சட்டம் குறுக்கிட முடியாது. ஆனால் அடிப்படை உரிமைகள் சட்டத்தின் இருபத்தாறாவது ஷரத்தில் குறிப்பிட்டுள்ளபடி அரசு உதவி

சர்ச்சைக்கிடையே சிரிக்கும் குருவாயூரப்பன்!

'தீட்டு' எனக் கூறி கோவிலைச் சுத்தம் செய்ததைத் தொடர்ந்து இந்தச் சர்ச்சை இந்தியா முழுக்க எதிரொலித்திருக்கிறது. குருவாயூர் கோவில் தேவஸ்தானத்தின் செய்கையை கேரள அரசு அங்கீகரித்து ஆதரவும் தெரிவித்துள்ளது. பிற மதத்தினருக்கு ஆலய நுழைவு அனுமதி மறுக்கும் கோவில் நிர்வாகங்களின் அணுகுமுறை சரியா? பல்துறை அறிஞர்களின் கருத்தோட்டம் இதோ...

வழக்கறிஞர் கே.எம். விஜயன்

இந்திய அரசியல் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகளில் பதினைந்தாவது ஷரத்தில் கடை, தியேட்டர், பூங்கா, கடற்கரை உள்ளிட்ட பொது இடங்களுக்கு இந்தியக் குடிமகன்(ன்) யாரும் செல்லலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பொது இடங்கள் என்று குறிப்பிடப்படும் அந்தப் பட்டியலில் 'கோவில்' என்ற சொல் இடம் பெறவில்லை. இதனால், 'தேவாலயத்திற்குள் கிறிஸ்தவர்



• குருவாயூர் கோவில்



• கே.எம்.விஜயன்

பெறும் எந்த ஒரு கோவிலும் பிற மதத்தவர்களை வரக் கூடாது எனச் சொல்ல முடியாது. காரணம் அது அரசின் நிர்வாகத்தில் இருக்கும் ஒரு கோவிலாகி விடுகிறது.

எம். அமான்கான் – *(தமிழக தலைவர் அகில இந்திய முஸ்லிம் ஷரீஅத் வாரியம்)*

டெல்லியில் தாமரை வடிவிலான பகாய் ஆலயம் உள்ளது. எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் அங்கே ஒற்றுமையுடன் அமைதியாகப் பிரார்த்திப்பதைக் கண்டு உள்ளம் உருகியது. பள்ளிவாசல், தேவாலயம், கோவில் ஆகிய மூன்று வழிபாட்டுத் தலங்களிலும் இதே சம தர்மமும் அமைதியும் நிலவவேண்டும். பகாய் ஆலயத்தில் எழுந்த உணர்வு இங்கெல்லாம் எழவேண்டும். நாகூர் தர்காவிலும், வேளாங்கண்ணி தேவாலயத்திலும், மயிலை கபாலீசுவரர் ஆலயத்திலும் எல்லா மதத்தினரும் அனுமதிக்கப்படுகிறார்கள். பிரார்த்தனையும் செய்ய முடிகிறது.



• எம். அமான்கான்


பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் எல்லா மதத்தினரையும் அனுமதித்த இதே குருவாயூர் கோவில் இன்று இது போன்று மத நல்லிணக்கத்திற்கு உலை வைக்கும் காரியத்தைச் செய்து வருகிறது. மதச்சார்பற்ற நாடாக விளங்கும் இந்தியாவில் இந்த நிகழ்ச்சியை ஒரு கரும்புள்ளியாகத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்னையை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதால் எந்தப் பலனும் இல்லை. குருவாயூர் கோவில் தேவஸ்தான நிர்வாகம், அங்குள்ள நம்பூதிரிகள் ஆகியோர், பிற மதத்தினர் வரக்கூடாது என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அனைத்து மக்களும் சென்று வழிபட அனுமதிக்க வேண்டும். பெரியார் போராடி வென்ற மாநிலத்தில் இப்படியொரு விபரீத விதிவிலக்கு இருப்பது, தென்னிந்திய மக்களின் சகோதரத்துவத்துக்கு முட்டுக்கட்டை.

வலம்புரி ஜான்

கடவுள் மனிதனை என்றுமே பிரித்துப் பார்த்தது இல்லை. கடவுளுக்குப் பக்கத்தில் இருக்கிறோம் என்று சொல்கிறவர்கள்தான் மனிதனை மதத்தின் பெயரால் பிரித்துப் பார்க்கிறார்கள். குருவாயூர் அப்பனுக்கு மதம் கிடையாது. வைகுண்டத்தில் இருக்கிற ஸ்ரீமன் நாராயணன் எல்லா மனிதனுக்கும் அருள் மழை பொழிகிறபோது, திருப்பதி வெங்கடேச பெருமான் செல்வக்கொடையை எல்லோருக்கும் தருகிறபோது, குருவாயூர் அப்பன் மட்டும் அந்நிய மதத்தவன் ஆலயத்திற்கு வரக் கூடாது என்று எப்போது சொன்னான்? யாரிடம் சொன்னான்? என்று கேட்கத் தோன்றுகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன் நான் எனது மனைவி குழந்தைகளோடு குருவாயூர் சென்று அங்கே உபவாசம் இருந்தேன். அப்போது அங்குள்ள குருமார்கள், நீ வேண்டுமானால் உபவாசம் இரு. எதற்கு உன் குழந்தைகளைப் பட்டினி போடுகிறாய் என்று அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்தனர். அப்படிப்பட்ட குருவாயூரிலா இன்று இப்படியொரு குளறுபடி? சிலுவையோ, தொப்பியோ, டர்பனோ போடாமல் உள்ளே வருகிற பிற மதத்தவனை எப்படிக் கண்டுபிடித்துத் திட்டு கழிப்பார்கள்? எப்படியாயினும் குருவாயூர் அப்பனே இதற்குத் தீர்வு



• வலம்புரி ஜான்



"இந்த அநியாயத்தைப் பார்த்தீங்களா!"

"என்ன அநியாயங்க?"

"'இங்கு ஆட்டோ மீட்டருக்கு சூடு வைத்துத் தரப்படும்'னு துணிஞ்சு அந்த வொர்க் ஷாப்ல போர்டு மாட்டியிருக்காங்க பாருங்க!"


- புளியரை கணேசன்



"'ரம்மி'யமான சூழல்னு தலைவர் அடிக்கடி சொல்றாரே?"

"சீட்டாடுற கிளப்பைத்தான் அவரு அப்படிச் சொல்றார்."

- தஞ்சை ராகவ், மகேஷ்



"அந்த எழுத்தாளர் சோகமா இருக்காரே... ஏன்?"


"அவர் பத்திரிகைக்கு ஆண்டு சந்தா அனுப்பினாகூட திரும்பி வந்துடுதாம்..."

- மலர் சூர்யா

சொல்வான். ஆனால் அதற்கு முன்பாக மதம், மதம் என்று மார்புகளில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டு தங்களைத் தாங்களே நோக வைத்துக் கொள்கிற மனிதர்கள் மனம் மாற வேண்டும். இல்லையெனில் அப்பன் தீர்வு தரும் வரை ஐம்பத்து இரண்டாண்டு சுதந்தர இந்தியாவின் திருஷ்டி பரிகாரமாக குருவாயூர் போன்ற கோவில்கள் இருக்கும்.

எம்.என்.நம்பியார்

குருவாயூர் கோவிலில்தான் என் மகனுக்குத் திருமணம் செய்தேன். எனது மகனின் நெருங்கிய நண்பர் ஒரு சீக்கியர். திருமணத்திற்கு அவரும் வந்திருந்தார். ஆனால் அவரை உள்ளே விட மறுத்து விட்டனர். ஆனாலும் என்னிடம் கேட்டார்கள். அவர் உங்கள் ஆள் என்று சொல்கிறார்களே என்ன செய்யலாம் என்று. என் மகனின் நண்பர் என்ற முறையில் அவர் கோவிலுக்குள் வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் ஒரு சனாதன இந்து என்று பார்த்தால் கோவிலின் பாரம்பரியத்தை மதிக்கிறேன் என்றேன். அவருக்கு அனுமதி மறுத்தனர். சீக்கியரும் அவர்களின் உணர்வைப் புரிந்து கொண்டு இதைப் பிரச்னையாக்க வேண்டாம் என்று சொல்லி விட்டார்.



• எம்.என். நம்பியார்

இரு முடி கட்டிய பிற மதச் சகோதரர்கள் சபரிமலையில் பதினெட்டு படி ஏறி தரிசிக்க அனுமதியுண்டு. அதே சமயம் வேறு சில ஆலயங்களில் இது சாத்தியமில்லை. என்னைப் பொறுத்தவரை இது போன்ற பாரம்பரிய பழக்கங்கள் உள்ள ஆலயங்களுக்குச் சென்று மனம் வருந்துவதைவிட அத்தகைய இடங்களுக்குப் பிற மதச் சகோதரர்கள் செல்லாமல் இருப்பதே நல்லது என்று சொல்வேன்.

— சக்கரத்தாழ்வார்

படங்கள்: ஜரிஸ்

கிரிமினல்கள் ஜாக்கிரதை – 14

பத்மநாபா கொலை; பாதியில் நின்ற சோதனை!

ஒரே அறைக்குள் ஒன்பது பேர் பிணமாகக் கிடந்தார்கள். ஒவ்வொருவர் உடலும் அடையாளம் தெரியாத வகையில் ஏ.கே.47 துப்பாக்கியால் சல்லடையாகத் துளைக்கப்பட்டிருந்தது. ஆற்று வெள்ளம் போல அவர்கள் உடலிலிருந்து ரத்தம் அறைக்கு வெளியே பாய்ந்து கொண்டிருந்தது! மேல்கூரை, பக்கச் சுவர்களில் ஏ.கே. 47



* பத்மனாபா

“முதல்வர் கலைஞரை இன்றளவும் சில பிரச்னைகள் தொடர்ந்து வருவதற்குக் காரணம் அந்த அதிகாரியும் அப்போது தி.மு.கவிலிருந்த சில பிரமுகர்களும்தான் என்பது என் அழுத்தமான கருத்து.”

ரவைகளால், சிமெண்ட் பூச்சு பெயர்க்கப்பட்டு, கீழே கொட்டி, சுவரில் செங்கற்கள் தெரிந்தன. பத்மநாபா கொலை போன்ற கொடிய காட்சியை என் வாழ்நாளில் இது வரை பார்த்ததில்லை.

அதற்குள் என் உதவியாளர்கள் வந்தனர். நான் அறையில் கிடந்த ஏ.கே.47 ரவைகளைச் சேகரிக்கத் துவங்கினேன். வந்தவர்கள் நான்கு அல்லது ஆறு பேராக இருக்கலாம் என்பது என் அனுமானம். அந்த ஃப்ளாட்டில் இருந்த பதினான்கு பேரையும் கொன்றுவிட்டு, போகும் வழியில் மக்களைப் பயமுறுத்த கைக் குண்டுகளையும் வீசிவிட்டுத் தப்பிச் சென்றிருக்கிறார்கள் கொலைகாரர்கள்.

அந்த கைக்குண்டுகளில் உள்ளே சிறிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கோலி குண்டுகள் போன்றவை இருந்தன. ஏ.கே.47 ரவைகள் மற்றும் இந்தச் சிறிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கோலி குண்டுகளைச் சேகரித்துக் கொண்டிருக்கும்போது கீழே உள்துறைச் செயலாளர் கூப்பிடுவதாகச் சொன்னார்கள். டெலிபோனில் 'யாரிடமோ' பேசிக் கொண்டிருந்த அவர் என்னிடம் “9 எம்.எம். சினே ஸ்டென்கன் உபயோகப்படுத்தியிருப்பார்களா?” என்று கேட்டார். நான் உடனே “ஏ.கே.47 மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார்கள்” என்று சொன்னேன்.

கொலை நடந்தது கோடம்பாக்கத்தில் ஒரு ஃப்ளாட்டில். மேலும் தடயங்கள் கிடைக்கிறதா என்று பார்ப்பதற்கு நான் பத்மனாபா வீட்டுக்குச் சென்று விட்டேன். சிறிது நேரத்தில் எனக்குக் கீழேயிருந்து “தடய சோதனைகள் போதும்... கிளம்பலாம்” என்று தகவல் வந்தது. எனக்கு ஒரே ஆச்சர்யம்! 'ஏன் பாதியில் நிறுத்தச் சொல்கிறார்கள்' என்று புரியாமல் நான் சேகரித்தவற்றை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டேன். அதன் பின் அந்த ரவைகள் மற்றும் கைக்குண்டுகளில் இருந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கோலிகுண்டுகள் ஆகியவற்றை எங்கள்



தடய அறிவியல் நிபுணர் டாக்டர் பி. சந்திரசேகரன்

சோதனைச் சாலையில் ஆராய்ந்தோம். அறிக்கை தயாரித்தோம்.

வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் இது சம்பந்தமாக எந்த அறிக்கையையும் அரசு எங்களிடம் கேட்கவில்லை என்பதுதான்.

அது தவிர என்னை எந்த கோர்ட்டிலும் சாட்சி சொல்லவும் அழைக்கவில்லை. சம்பவம் நடந்த இடத்தில் எங்களைப் போதுமான அளவு சோதனை செய்ய அனுமதித்திருந்தால் எதிர்காலத்துக்கும் அது பயனுள்ளதாக அமைந்திருக்குமே! என்று இப்போதும் நினைத்துக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவம் நடந்தபோது தமிழக முதல்வர் டெல்லியில் இருந்தார் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அப்போது ரஷ்யா உதவியுடன் நெல்லை மாவட்டத்தில் கூடங்குளம் அணு மின் நிலையம் அமைப்பது பற்றி வாதப் பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. 'கதிரியக்கம் மிகப் பெரிய ஆபத்தாக இருக்கும்' என்று சொன்ன சுற்றுச் சூழல் மற்றும் முற்போக்கு இயக்கங்கள் கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்து கொண்டிருந்தன. என்னுடன் அண்ணாமலையில் பௌதிகம் படித்த நண்பர்கள் பலர் அணுசக்தி துறையில் விஞ்ஞானிகளாக இருந்தார்கள். அவர்களில் ஒருவர் அமுல்ராஜ். கல்பாக்கத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். 'முதல்வரைச் சந்தித்து இதுபற்றி விளக்க வேண்டும்' என்று அவர் விரும்பினார். பின்னர் நாங்கள் இருவரும் சேர்ந்துகொண்டு கதிரியக்கம் என்ற விவகாரம் பெரிது படுத்தப்படுகிறது என்றும் அணுமின் நிலையம் வெளிப்படுத்தும் கதிரியக்கம் மிக மிகக் குறைந்த அளவுதான் என்றும் அதனால் எந்தப் பாதிப்பும் இருக்காது என்றும் பல அம்சங்களை விளக்கியும் அறிக்கை தயாரித்தோம். அதை எடுத்துக் கொண்டு முதல்வரைச் சந்தித்தோம்.

எங்கள் விளக்கங்கள் பற்றி முதல்வர் திருப்தி தெரிவித்து மறுநாள் "அணுமின் நிலையத்தால் பாதிப்பு வராது'' என்று அறிக்கை விட்டார்.

நாங்கள் முதல்வரைச் சந்தித்தது, அறிக்கை கொடுத்தது ஆகியவை பற்றி கேள்விப்பட்ட உள்துறைச் செயலாளர் கடுப்பாகிப்போய் "எனக்குத் தெரியாமல் கலைஞர் எப்படி திட்ட அறிக்கை கொடுக்கலாம்" என்று கேள்வி கேட்டார்! "நான் அரசு அதிகாரி மட்டுமல்ல; விஞ்ஞானியும் கூட. இது போன்ற பிரச்னைகளில் பொறுப்பில் இருப்பவர்களுக்கு விளக்குவது என் கடமை'' என்று பதில் சொன்னேன்.

இப்படி தலைமைச் செயலக அதிகாரிகளுக்கும் எங்கள் பிரிவுக்கும் உரசல்கள் தொடர்ந்து கொண்டிருந்த சமயம் அமெரிக்க அமைப்பு ஒன்று எனக்கு 'மனித குலத்துக்குச் செய்த சேவைக்கான விருது' ஒன்றை வழங்கி கௌரவித்தது. அந்த விருது எனக்கே இன்ப அதிர்ச்சியாக இருந்தது. இந்த விருது கிடைத்த விஷயத்தை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கடிதம் எழுதி தெரிவித்தேன். உடனே அரசு தரப்பிலிருந்து, "உங்களுக்கு எப்படி விருது கிடைத்தது. யார் உங்களைச் சிபாரிசு செய்தது?" என்று கேட்டார்கள்.

உடனே நான் விருது கொடுத்த நிறுவனத்துக்கு எழுதினேன். அவர்கள் கல்கத்தாவில் இருந்து டாக்டர் பானர்ஜி என்பவர் சிபாரிசு செய்ததாகத் தெரிவித்திருந்தார்கள். இந்தத் தகவலை நான் அரசிடம் தெரிவித்தேன்.

"நீங்கள் முன்னமே ஏன் இந்தத் தகவலைச் சொல்லாமல் மறைத்தீர்கள்'' என்று குற்றம் சாட்டுகிறது போல உள்துறைச் செயலரிடம் இருந்து கடிதம் வந்தது!

எந்த விருது யாருக்குக் கொடுப்பதாக இருந்தாலும் யாராவது சிபாரிசு செய்ய வேண்டும் என்பது அடிப்படையான விஷயம். ஆனால், விருது பெறுபவருக்கு யார் சிபாரிசு (nominate) செய்தது என்று தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. "நோபல் பரிசு கூட சில சிபாரிசுகளைப் பரிசிலனை செய்த பின்னர்தான் கொடுக்கப்படுகிறது" என்றெல்லாம் விளக்கி; பொறாமை, பொச்சரிப்பு காரணமாக என் மீது குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்படுவதாக ஷேக்ஸ்பியர் எழுத்துகளிலிருந்து மேற்கோள்கள் காட்டி காரசாரமாக பதில் எழுதினேன். என் கடிதத்தை வைத்துக்



கொண்டு டிக்ஷ்னரி கொண்டு வரச் சொல்லி ஆராய்ந்தார் அவர். கடைசியில் விருது பெறுவது போன்ற சாதாரண தகவல்களை 'எனக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை' என்று கடிதம் எழுதினார். உடனே நான் 'அரசு விவகாரங்களில் 'நான்', 'எனது' என்ற பேச்சுக்கே இடமில்லை' என்று பதில் எழுதினேன். அத்துடன் அந்தப் பிரச்னை முடிந்தது. முதல்வர் கலைஞரை இன்றளவும் சில பிரச்னைகள் தொடர்ந்து வருவதற்குக் காரணம் அந்த அதிகாரியும் அப்போது தி.மு.கவிலிருந்த சில பிரமுகர்களும் தான் என்பது என் அழுத்தமான கருத்து.

சென்ற வருடம் சண்டிகர் நகரில் இருந்த நுகர்வோர் நீதிமன்றத்தில் சிவகாசி பட்டாசு நிறுவனம் ஒன்று தக்க பதில் சொல்லாமலிருந்திருந்தால் இந்தத் தீபாவளிக்குப் பல வெடிகளை உற்பத்தி செய்ய முடியாமலேயே போயிருக்கும்.

விஷயம் இதுதான்: ஒரு சிறுவன் ஆட்டம் பாம் (உருளை வடிவில் உள்ளது) வெடிக்கும் போது, அதிலிருந்து சிதறிய களிமண் துகள்கள் அந்தச் சிறுவனின் கண்ணில்பட்டு, பார்வைக்கு ஆபத்து வந்து விட்டது. உடனே அந்தப் பையனின் தந்தை, வெடிகள் வாங்கிய அதே கடையில் அதே போன்று வெடியை வாங்கி, சண்டிகரில் உள்ள ஒரு தடய அறிவியல் விஞ்ஞானியிடம் கொடுத்து ஆராயச் சொல்லியிருக்கிறார். அந்த விஞ்ஞானி வெடி மருந்து சட்டப் புத்தகத்தைப் பார்த்து அலசி, "ஆட்டம்பாம் வெடியைச் சணல் நூல் சுற்றித்தான் செய்ய வேண்டும். இந்தக் குறிப்பிட்ட நிறுவனம் வெடிமருந்துடன் களிமண்ணையும் சேர்த்து உருளை வடிவில் வெடி தயாரித்திருக்கிறது. இது சட்ட விரோதம்! வெடியினுள் இருக்கும் களிமண் வெடித்தவுடன் சிதறும் போது அதன் துகள்கள் குண்டுகள் சீறிக் கொண்டு வருவது போல் வருகின்றன. இது மிக ஆபத்தானது. உடனே அந்த நிறுவனம் செய்யும் பட்டாசு வெடிகளுக்குத் தடைவிதிக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

சண்டிகர் அரசு அதிகாரிக்குக் கடிதம் எழுதினார் சிறுவனின் தந்தை. அரசும் அந்தக் கடிதத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அந்த பட்டாசு நிறுவனம் உற்பத்தியை நிறுத்த வேண்டும்; என்பது தவிர, பட்டாசு அதிபரைக் கைது செய்ய வேண்டும் என்ற பயமுறுத்தல் வேறு. பார்வை பாதிக்கப்பட்ட பையனின் தந்தை 25 லட்ச ரூபாய் நஷ்டஈடு கேட்டு பயமுறுத்தினார். பட்டாசு நிறுவனம் என்னைத் தொடர்பு கொண்டது.

'பைரோடெக்னிக்ஸ்' என்ற பட்டாசு நுட்பத்தைப் பற்றிய எல்லா புத்தகங்களையும் படித்தேன். சணல் சுற்றிதான் ஆட்டம் பாம் வெடி இருக்க வேண்டுமென்பது ரொம்பவும் பழைய சட்ட புத்தகத்தில் போடப்பட்டிருந்த ஒன்று. களிமண் பாதுகாப்பு இல்லாமல் எந்த வெடிகளையும் செய்ய முடியாது என்பது பல புத்தகங்களைப் படித்த போது தெரிய வந்தது.

காகிதக் குழல் அடைப்புக்குள் இருபக்கமும் களிமண் வைத்து நடுவில் வெடி மருந்தை வைப்பார்கள். அதிலிருந்து திரி கிளம்பி மேற்புறமாகக் களிமண்ணைக் கடந்து வெளியில் வரும். வெடிக்கும் போது கூடுதல் அழுத்தத்தையும், வெடிக்குப் பாதுகாப்பையும் கொடுக்க இந்தக் களிமண் பாக்கிங் அவசியம்.

வெடி வெடிக்கும்போது அதிலிருந்து வெளிப்படும் களிமண் துகள்கள், கண்ணைப் பாதிக்கும் வகையில் வெளிப்படுகிறதா என்று சோதித்துப் பார்த்தேன்.

இதற்காக குறிப்பிட்ட நிறுவனத்தின் தயாரிப்புகளைத் தவிர வேறு பல நிறுவனங்களின் ஆட்டம்பாம் வெடிகளையும் வாங்கிச் சோதித்தேன். மண் துகள்கள் அதிகபட்சமாக மூன்றடி விட்டத்துக்குள் உயரவாக்கில் சிதறி, அப்புறம் கீழே விழுவது தெரிந்தது. கீழே விழும்போது குண்டுகள் சீறி வருவதைப் போன்ற வேகம் எதுவும் இல்லை. இந்த நிலையில் அந்தப் பையனுக்கு மண் துகள்கள் கண்ணில் எப்படி பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்? இப்படி நான் யோசித்துக் கொண்டிருந்தபோது பட்டாசு நிறுவனம் வழக்கிற்கு உதவும் வகையில் ஒரு தகவலைச் சேகரித்து வந்து சொன்னது.

(தொடரும்)

"மாப்பிள்ளை சினிமா டைரக்டரா இருக்கலாம்! அதுக்காக இப்படியா?"

"ஏன் என்னாச்சு?"

"தாலி கட்டறது விட்டுட்டு எழுந்துபோய் அடிக்கடி வீடியோ கேமரா கோணம் பார்க்கறது கொஞ்சம் கூட நல்லாயில்லை!"

- ரெவி

அலுவலகத்தில் இருந்து வந்ததும் வராததுமாக, கொல்லைப்புறம்தான் சென்று பார்த்தேன். நான் பயந்தபடியே நடந்திருந்தது. என்னையறியாமல் இயலாமைப் பெருமூச்சு ஒன்று என்னிடமிருந்து வெளிப்பட்டது.

என்னையும், என் பார்வை சென்ற திக்கையும் கவனித்தவாறு உள்ளிருந்து வந்தாள் தங்கம். திரும்பிப் பார்த்த என் கண்ணில் குற்றச்சாட்டு இருந்தது. அவள் உதடுகள் முணுமுணுத்தன. பரிதாபமாய், "என்னால் மட்டும் என்ன செய்ய முடியுமாம்?"

உள்ளே வந்து முகம் கழுவி, உடை மாற்றி, சாப்பிட்டபின் தான் தோன்றியது, தங்கம் பாவம் என்று! மனிதனுக்குத் தன் தேவைகள் முடிந்த பிறகுதானே அடுத்தவரை பற்றிய சிந்தனையே வருகிறது! அவள் முணுமுணுத்ததை நினைத்துக் கொண்டேன். பாவம் அவளும்தான் என்ன செய்வாள்?

காலையில் எழுந்ததும், அனுமார்வாலாக நீண்டிருக்கும் குடங்களின் அணிவகுப்பில் நின்று, சகல

அந்தக் கணத்தில், அந்தக் கணத்தில்தான் நானும் அந்த டிசம்பர் செடியும் ஒன்றே எனத் தோன்றியது. என்னைக் கொஞ்சம் கூட வளர விடாமல் சதி செய்யும் விதியும். இந்த ஆடும் ஒன்றே எனத் தோன்றியது.

வித்தைகளையும் பிரயோகித்துத் தண்ணீர் பிடித்து, காப்பி கலந்து, டிபன் செய்து, சமைத்து, திசைக்கொன்றாய் உறங்கும் இரு பிள்ளைகளையும் உலுக்கி, கிளப்பி நானும் கிளம்புவதற்கு உதவி, பாத்திரம் தேய்த்து, துணி துவைத்து, மாவரைத்து... அப்பப்பா, சொல்லி வரும் எனக்கே மூச்சிறைக்கிறதே.

தினம் அலுக்காது செய்து வரும் அவளுக்கு எப்படி இருக்கும்? அவளைப்



சாந்தி குமார்

போய், தோட்டத்தைக் கவனிக்கவில்லையே என்று குறைபடுவது என்ன நியாயம்?

டிசம்பர் செடியும் நானும்

தோட்டம் என்றால் நீங்கள் நினைப்பது போல் வானளாவிய மரங்களும், வேலி கொள்ளாத செடிகளும், பூத்துக் குலுங்கும் கொடிகளும் இல்லை. எட்டடிக்கு, எட்டடி மண் பரப்பும் அதில் இருக்கும் ஒரேயொரு டிசம்பர் செடியுமே என் தோட்டம்.

டிசம்பர் பூவைப் பலருக்குப் பிடிக்காது. மணமில்லா மலர் என்பர். ஆனால் எனக்கென்னவோ மிகவும் பிடிக்கும். டிசம்பர் மாத குளிரில், அதிகாலை வெளிச்சத்தில், செடி கொள்ளாது பூத்துச் சிரிக்குமே, அந்த அழகைப் பார்த்துக் கொண்டேயிருக்க மிகவும் பிடிக்கும். அதனால் தான் சென்ற வருடம் சீசன் முடிந்ததும் பக்கத்து வீட்டார் கழித்துப் போட்ட செடியில் இருந்து மூன்று குச்சிகள் எடுத்து வந்து நட்டேன். ஒன்று மண்ணோடு ஊடல் கொண்டு இறந்து போனது. மற்றொன்றை ஒரு ஆடு வேரோடு இழுத்துப் போக, மிஞ்சியது இது ஒன்று மட்டும்தான்.

இந்த ஒரு செடியை வளர்ப்பதற்குத் தான் இத்தனை பாடும்... என்ன சொன்னேன்... வளர்ப்பதற்கு என்றா? தவறு. மனிதன் குடிப்பதற்கே தண்ணீருக்கு வழியில்லாத போது, செடிக்கு ஊற்ற எங்கே போவதாம்?

இந்தச் செடி நாங்கள் குளிக்கும், புழங்கும் நீரில், தானே வளர்ந்து கொண்டிருக்கிறது அனாதை குழந்தை போல.





வழக்கமாக வரும் அந்தக் கறுப்பு ஆட்டிடமிருந்து செடியைக் காப்பதற்குத்தான் இந்தக் கஷ்டமும்.

முன்பாவது வேலி என்ற பெயரில் அங்கும் இங்குமாக முள் ஒட்டிக் கொண்டிருக்கும். ஆடு, மாடை, கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது அச்சுறுத்தும். அந்த 'வேலி'யையும் பக்கத்து வீட்டுக்காரர் அப்புறப்படுத்தி விட்டார். பிள்ளைகள் பள்ளி செல்ல, தண்ணீர் எடுக்க, வசதிக்காக என்று மொத்தமாய் எடுத்து விட்டார். மாதக் கடைசியில் ஆபத்துக்கு உதவுபவர் வாயைத் திறக்க முடியுமா? கடைசியில் என் வீட்டுக் கொல்லைப் பக்கம் சகல ஜீவராசிகளின் நடைபாதையாயிற்று.

"தாவரங்களுக்குக் கால் இல்லை. எனவே அவை எதிரிகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் சக்தியை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றன. உதாரணம் ரோஜா செடியில் முள்."

என் மகன் உரக்கப் படித்தது என் சிந்தனையைக் கலைத்தது. பிறகு சிரிப்பு வந்தது. டிசம்பர் செடியிலும்தான் முள் உள்ளது. பற்றாக்குறை அதிகரிக்க, அதிகரிக்க, மனிதர்களைப் போலவே விலங்குகளும் சாமர்த்தியமாகி விட்டன. முள் தைக்காமல் செடி மேய கற்றுக் கொண்டு விட்டன.

காலையில் எழுந்ததும், தாவரங்களுக்குக் கால் இல்லை என்ற வாசகம் என்னுள் வந்து அலைமோதியது. ஏதோ அந்தச் செடிக்குப் பாதுகாப்பு கொடுக்காமல் குற்றமிழைத்த உணர்வு நெஞ்சை நெருட, சைக்கிளில் சென்று, ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்திலிருந்து கொஞ்சம் கருவேல முள்ளை வெட்டிக் கொண்டு வந்து செடியைச் சுற்றி நெருக்கமாகப் போட்டுவிட்டு, அந்த ஆட்டை ஜெயித்த உணர்வுடன் அலுவலகம் சென்றேன்.

அலுவலகத்தில் எனக்கு வேலையே ஓடவில்லை. முள்ளை வெட்டி எடுத்து வந்த பழக்கமில்லாத வேலையைச் செய்ததாலோ, அல்லது சற்றும் தகுதியில்லாத மேலதிகாரி வார்த்தை வாளெடுத்து என் தன்மானத்தை மற்றவர் முன் மொத்தமாய்க் கிழித்ததாலோ தெரியவில்லை; தலைவலி! நெற்றிப் பொட்டு தெறித்தது. அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தேன்.

வீட்டை அடைந்ததும் கால் அனிச்சை செயலாய்க் கொல்லைக்குச் செல்ல, அங்கு நான் கண்ட காட்சி என் இரத்தக் கொதிப்பை அதிகப்படுத்தியது. நான் போட்டிருந்த முள்ளை லாகவமாக விலக்கியபடி, செடியினருகில் நின்று கொண்டிருந்தது அதே ஆடு.

அந்தக் கணத்தில், அந்தக் கணத்தில் தான் நானும் அந்த டிசம்பர் செடியும் ஒன்றே எனத் தோன்றியது. என்னைக் கொஞ்சம் கூட வளர விடாமல் சதி செய்யும் விதியும். இந்த ஆடும் ஒன்றே எனத் தோன்றியது.

எட்டுக் குழந்தைகளில் ஒன்றாய் பிறந்தது, ஏழ்மை காரணமாய்ப் பள்ளியில் அவமதிக்கப்பட்டது, ஆயிரம் கனவுகளோடு தேர்வுக்குப் படித்துத் தயாராகையில் அம்மை கண்டு படுத்தது. கல்லூரியில் விருப்பப் பாடம் கிடைக்காமல், கிடைத்ததைப் படித்தது, படித்த படிப்புக்குச் சம்பந்தமே இல்லாத, முன்னேற்றத்துக்கு வழியே இல்லாத துக்கடா வேலையைச் செய்து கொண்டிருப்பது, பற்றாக்குறை வருமானத்தில் இழுபறியாய் வாழ்க்கை... என என் வாழ்க்கையே நிழற்படமாய் என் கண்முன் ஓடியது.

மிக நல்ல விஷயம்!

ஜூலை 5, 1996



1996 ஜூலை ஐந்தாம் தேதி. அன்றுதான் என் வாழ்வில் மிகச் சிறந்த விஷயம் நடந்தது. எனது திருமண நாள். நான் கர்நாடக இசையுலகில் பிரபலமாகிக் கொண்டிருந்த சமயம். ஜெர்மன் ஹாலில் நடந்த என் கச்சேரிக்கு வந்து, மேடையில் பாடிய என்னைப் பார்த்து என் பாட்டைக் கேட்டு, தன் மகனுக்கு என்னைப் பார்த்தால் என்ன என்று மாமியார் நினைக்க, அதே சமயத்தில் எங்கள் வீட்டிலும் வரன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவருக்கு மும்பையில் வேலையாயிற்றே என்று கொஞ்சம் தயங்கிய போது, சென்னைக்கே மாற்றல் கிடைத்தது. சந்தோஷத்துக்குக் கேட்கவா வேண்டும்.

– *நித்யஸ்ரீ மகாதேவன்*

ஏழு குழந்தைகள் இருக்கையில், எட்டாவ தாகப் பிறந்த என்னை ஏன் பெற்றாய் என்று என் பெற்றோரைக் கேட்க முடியாது!

எனக்கு ஏன் நல்ல வேலை தரவில்லை என்று அரசாங்கத்தைக் கேட்க முடியாது.

என்னை நானே வெறுத்து தற்கொலை யும் செய்து கொள்ள முடியாது. ஏனென் றால் என்னை நம்பி ஒரு குடும்பம் இருக் கிறது. விதி முடியும் காலம் வரை வாழ்ந்து தான் தீரவேண்டும் என்பது என் தலை யெழுத்து!

இந்தச் செடி என்ன பாவம் செய்தது? இது ஏன் தினம் தினம் செத்துப் பிழைக்க வேண்டும்? எனக்குப் பூ கிடைக்க வேண்டும் என்ற என் சுயநலத்துக்காக இது ஏன் சித்திர வதைப்பட வேண்டும்? காப்பாற்ற வழியில் லாதவனுக்கு என்னுடையது என்று சொந் தம் கொண்டாட என்ன தகுதி இருக்கிறது?

டிசம்பர் செடி 'என்னை ஏன் கொல் லாமல் கொல்கிறாய்?' என்று கேட்பதாய்த் தோன்றியது. காலையில் கனவோடு துளிர் விடுவது. மாலையில் கடிபட்டு மொட்டை யாவது... இதுதான் என் வாழ்க்கையா? என கேட்பதாகத் தோன்றியது. இல்லை... இல்லை... இதை இப்படியே விடக் கூடாது.

ஒரு முடிவுக்கு வந்தவனாக அந்தச் செடியின் அருகில் சென்று, வெறிபிடித்த வன் போல் இரு கைகளாலும் அதனை வேரோடு பிடுங்கி, தூக்கியெறிந்தேன். ஆடு என்னை ஒரு மாதிரியாய் ஒரு விநாடி பார்த்துவிட்டு செடியிடம் ஓடியது - மொத்தமாய் மேய்வதற்கு.

'கஷ்டப்படும் ஓர் உயிருக்கு விடுதலை வாங்கித் தந்துவிட்டோம். இதுவும் ஒருவகை கருணைக் கொலைதான்' என்று எண்ணிய வாறு நிமிர்ந்த நான், தங்கம் என்னையே கலவரமாகப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவளுக்கு அருகில் என் பதிமூன்று வயது மகன், என்னைப் போலவே சிந்திக்கத் தெரிந்தவன், 'வருங் காலத்தில் என்னைப் போலவே யதார்த்தத் தோடு ஒன்றாமல் கஷ்டப்படுவானோ?' என்று என்னை இப்போதே சங்கடப்படுத்து பவன் - நின்றிருந்தான்.


அவன் கண்களில் என் செயலுக்கான கண்டனம் இருந்தது. 'இவ்வளவுதானா நீ?' என எண்ணியிருப்பானோ? வாய் திறந்து மெல்ல ஆனால் அழுத்தமாகக் கேட்டான்.

"நாளைக்கு என்னையும் வளர்க்க முடி யாட்டா இதைத்தான் செய்வியாப்பா?"

அதிர்ந்து தலைகவிழ்ந்தேன் நான். ●

காஷ்மீரை விட்டுக் கொடுத்தார் முஷாரஃப்!

'காஷ்மீர்' பிரச்னையைத் தீர்க்க இந்தியாவின் சார்பாக லல்லு பிரஸாத்தும், பாகிஸ்தானின் சார்பாக முஷாரஃபும் சந்தித்துப் பேசினர். ஐந்து நிமிடங்களில்



சந்திப்பு முடிந்து, காஷ்மீரை இந்தியாவுக்கு விட்டுக் கொடுத்து விட்டார் பாகிஸ்தான் அதிபர்! பத்திரிகையாளர்கள் லல்லு பிரஸாத்



தைச் சூழ்ந்து கொண்டு "இது எப்படி சாத்தியமாயிற்று?" என்றனர். லல்லு சிரித்துக் கொண்டே கூறினார்: "நான் போட்ட ஒரே கண்டிஷன் காஷ்மீருடன் இலவச இணைப்பாக பீஹாரையும் பாகிஸ்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான்!"

— சேகர் சுமனின் டி.வி. நிகழ்ச்சியில் ரசித்தவர்: வாசுதேவன்

"நிறைவேற்ற முடியாத நிபந்தனை களை வீரப்பன் போடுறானா.. என்ன வாம்?"

"ரேஷன் கடையிலே எடை சரியா நிறுக்கணுமாம்!"

— தஞ்சை தாமு



மும்பை பத்திரிகையாளரான கங்காதர், பதினான்கு ஆண்டுகள் ரீடர்ஸ் டைஜஸ்ட் பத்திரிகையின் இந்தியப் பதிப்பில் பணியாற்றியவர். அவரது டைஜஸ்ட் அனுபவங்கள் சுவாரசியமானவை. அவற்றில் சில இங்கே.



எம்.ஜி.ஆர் அளிக்காத பேட்டி!

டைஜஸ்ட்டில் எது பிரசுரமானாலும் அதில் சின்ன தவறுகூட நிகழ்ந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார்கள். உதாரணமாக, 'சென்னையில், சுட்டெரிக்கும் ஒரு பகல் பொழுது' என்று எழுதினால், அது எந்த மாதம், அப்போது சென்னையின் பகல் பொழுது வெயில் எவ்வளவு இருக்கும் என்று வானிலை ஆய்வு மையத்தில் கேட்டு, தகவலைச் சரி பார்ப்பார்கள்!

திரும்பத் திரும்ப எதையும் சரிபார்ப்பதன் காரணமாக, காலதாமதம் தவிர்க்க முடியாத ஒன்று. 1983ல் உலகக் கோப்பையை, கபில் தேவ் தலைமையிலான இந்திய அணி ஜெயித்தபோது, கபில் பற்றியும், இந்திய கிரிக்கெட் அணி பற்றியும் ஒரு கட்டுரை எழுத முடிவு செய்து, கபில்தேவைப் பார்த்துப் பேசினேன். அதனையடுத்து, இந்திய கிரிக்கெட்டுடன் தொடர்பு கொண்ட பலரையும் சந்தித்துப் பேசினேன். ஒரு வழியாக ஆறுமாத கால உழைப்புக்குப்பின் கட்டுரை தயாரானது. ஆனால், இடைப்பட்ட காலத்தில் இந்திய கிரிக்கெட் அணி சில சரிவுகளைச் சந்தித்தது. இதனால் அந்தக் கட்டுரை முக்கியத்துவம் இழந்தது. கடைசியில் அது பிரசுரமாகவே இல்லை.

சுனில்தத் பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டியிருந்தபோது, அவரது ஷூட்டிங், பொது நிகழ்ச்சிகள், வீடு, இப்படி அவருடனேயே பதினைந்து நாட்கள் கழித்தேன். அவரை நாலைந்து முறை பேட்டி கண்டேன். அவருக்கு நெருக்கமான திரையுலகப் பிரமுகர்கள், நண்பர்களிடம் நிறைய பேசினேன். அந்தக் கட்டுரைக்காக, சுனில்தத் கொடுத்த ஒத்துழைப்பு அளவில்லாதது.

ஆனால், பிரபல சினிமா ஹீரோவாக இருந்து, கட்சி ஆரம்பித்து, ஆட்சியைப் பிடித்த எம்.ஜி.ஆர் பற்றிய கட்டுரை எழுத மும்பையிலிருந்து சென்னை வந்தபோது எனக்கு ஏற்பட்ட அனுபவம் நேர் எதிரானது.

சென்னை நகரின் மூத்த பத்திரிகையாளர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள், சினிமா உலகப் பிரமுகர்கள் என்று ஜெயலலிதா உள்பட பலரைச் சந்தித்துப் பேசினேன். ஆனால் எம்.ஜி.ஆரைச் சந்திப்பது மட்டும் அத்தனை சுலபமாக இல்லை. கடைசியில் எம்.ஜி.ஆரைச் சந்திக்க அப் பாயின்ட்மெண்ட் கிடைத்தது. தி.நகர் ஆற்காடு தெருவில் உள்ள அவரது



• கங்காதர்

வீட்டுக்குச் சென்றேன். கட்சிக்காரர்கள் சூழ அமர்ந்திருந்தார். நான் கேட்ட கேள்விகள் ஒன்றுக்கும் அவர் நேரடியாகப் பதில் சொல்லவில்லை; கூட இருந்த கட்சிக்காரர்கள், அவரைத் திருப்திப் படுத்தும்படியாகப் பதில் சொன்னார்கள். மறுபடி சந்திக்க முயன்றபோது, நேரம் ஒதுக்கித் தர எம்.ஜி.ஆர் முன்வரவில்லை. அந்தக் கட்டுரையை எழுத என் மனச்சாட்சி இடம் தரவில்லை.

ஒரிசாவில் ஒரு ரயில் விபத்து. நதியொன்றில் ரயில் விழுந்து ஏகப்பட்ட உயிர்ச் சேதம். பத்திரிகைகளில் விபத்துப் பற்றிப் படித்துவிட்டு, ஒரிசா புறப்பட்டுப் போனேன். டைஜஸ்ட்டில் 'நிஜ வாழ்க்கையில் நடந்த நாடகம்' என்ற பகுதிக்காக விபத்தின் கோரமான, துன்பமான சூழ்நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு, பிரதிபலன் பாராமல் சாதாரண மனிதர் எவராது சேவை செய்து கொண்டிருந்தால், அவரது அனுபவங்களைக் கேட்டு எழுதலாம் என்பது என் திட்டம். ஆனால், விபத்து ஸ்தலத்துக்குப் போய் இறங்கியபோது கண்ட காட்சி, என் எண்ணத்தைத் தவிடு பொடியாக்கிவிட்டது.

போலீஸ்காரர்களும், பொதுமக்களும் அகப்பட்டவரை சுருட்டிக் கொண்டிருந்தார்கள். தண்ணீரில் மூழ்கி இறந்த பயணிகளின் உடல்கள் கரையொதுங்கியபோது, விரல்களையும், காதுகளையும் வெட்டி, மோதிரம், தோடு போன்றவற்றை அவர்கள் எடுத்துக்கொண்டு போனார்கள்.

அந்தப் பகுதியில் இருந்தது ஒரே ஒரு விருந்தினர் மாளிகைதான். அதில்தான் நான் தங்கியிருந்தேன். இரண்டாவது நாள், ஓர் அரசியல்வாதி, விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட வந்தார். அவர் தங்குவதற்காக, தயவு தாட்சணியமின்றி, என் பெட்டி, படுக்கையை எடுத்து விருந்தினர் மாளிகை வராந்தாவில் வைத்து விட்டார்கள். அடுத்த இரு நாட்களுக்கு நான் வராந்தாவிலேயே படுத்து உறங்கினேன்.

எழுதினால் 'பாசிடிவ்'வாக இருக்க வேண்டும் என்ற கொள்கைக்கு ஏற்ப அப்போது ஒன்றும் எழுத முடியாது போனது ஒரு வித சோகம் என்றால், சில மாதங்களுக்குப் பின் அந்த ரயில் விபத்துக்குக் காரணம், திடீரென்று வீசிய புயல்தான் என்று அறிக்கை சமர்பித்து, விஷயத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தது எனக்குப் பேரதிர்ச்சியை அளித்தது.

சந்திப்பு : **எஸ்.சந்திரமௌலி**

படம் : **யோகா**



முப்பத்து எட்டாம் அத்தியாயம்

நடித்தது நாடகமா?

வாள் தவறித் தரையில் விழுந்தபோது எழுந்த ஒலியுடன் நந்தினியின் சோகம் ததும்பிய மெல்லிய சிரிப்பின் ஒலியும் கலந்தது.

அவள் பரபரப்புடன் "ஐயா! தெய்வத்தின் சித்தம் வேறு விதமாயிருக்கிறது. வாள் இங்கேயே கிடக்கட்டும். தாங்கள் உடனே போய் மறைந்து கொள்ளுங்கள்!" என்றாள்.

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வந்தியத்தேவன் குனிந்து வாளை எடுக்கப் போனான். அதன் கூரிய நுனிப் பகுதியைப் பிடித்துத் தூக்க முயன்றான்.

அதே சமயத்தில் அந்த வாளின் பிடியை ஒரு காலினால் மிதித்துக்கொண்டாள் நந்தினி.

"வேண்டாம்! இளவரசர் காதில் வாள் விழுந்த சத்தம் கேட்டிருக்கும். இங்கே வாள் இல்லாவிட்டால் அவர் மனத்தில் சந்தேகம் உண்டாகும். ஏற்கெனவே, தங்கள் மீது அவருக்குச் சந்தேகம். போய் விடுங்கள்! முன்னொரு தடவை மாயமாய் இங்கிருந்து மறைந்தது போல் இந்தத் தடவையும் மறைந்து போய் விடுங்கள்!" என்றாள்.

வந்தியத்தேவன் வாளின் முனையைப் பிடித்து எடுக்க முயன்றதில் அவன் கையில் சிறு காயம் உண்டாயிற்று. அவன் வாளை விட்டுவிட்டு நிமிர்ந்தான். அவன் உள்ளங் கையில் இலேசாக இரத்தம் கசிந்ததை நந்தினி பார்த்தாள்.

"நான் உமக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவேன். என் கையால் என் உடன்பிறந்தானைக் கொல்ல மாட்டேன்.

அமரர் கல்கி

நீர் தப்பித்துக் கொள்ளும். உம்மை இங்கே அவர் கண்டுவிட்டால்...!"

"போய் விடுங்கள்! உடனே போய் விடுங்கள்!" என்று மணிமேகலையும் சேர்ந்து கெஞ்சினாள்.

காலடிச் சத்தம் மேலும் நெருங்கிக் கேட்டது.

வந்தியத்தேவன் வேண்டா வெறுப்பாக யாழ்க் கருவிகளின் களஞ்சியத்தை நோக்கி விரைந்து சென்றான். களஞ்சியத்தின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்று மறைந்தான்.

காலடிச்சத்தம் வெகு சமீபத்தில், வாசற்படிக்கருகில் கேட்டது.

வந்தியத்தேவன் மறைந்த இடத்தை வியப்புடன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மணிமேகலையைப் பார்த்து, "தங்காய்! நீயும் மறைந்து கொள்! கட்டிலின் திரைகளுக்குப் பின்னால் மறைந்து கொள்! நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அவருக்குத் தெரியாமல் இங்கிருந்து போய் விடு!" என்றாள் நந்தினி.

மணிமேகலை கட்டிலின் திரைச்சீலைக்குப் பின்னால் மறைந்த மறுகணத்தில் ஆதித்த கரிகாலனும் கந்தமாறனும் உள்ளே வந்தார்கள்.

கரிகாலன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே நந்தினியை நெருங்கினான். கட்டிலின் திரைச்சீலை அசைந்ததை அவன் கவனித்தான். ஆனால், கவனித்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை.

நந்தினிக்கு அருகில் வந்ததும் தரையிலே கிடந்து ஒளிவிட்டுக் கொண்டிருந்த வாளைப் பார்த்தான். பின்னர், நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

நந்தினியின் நெஞ்சை ஊடுருவிய அந்தப் பார்வையின் தீட்சண்யத்தைப் பொறுக்க மாட்டாமல், வாளை எடுக்கும் பாவனையாக அவள் குனிந்தாள்.

நந்தினியின் நோக்கத்தை அறிந்து அவளை முந்திக்கொண்டு கரிகாலன் வாளைக் கையில் எடுத்துக்கொண்டான். அதன் அடிப் பிடியிலிருந்து கூரிய நுனி வரையில் கூர்ந்து பார்த்தான். நுனியில் புதிய இரத்தக்கறை இருப்பதையும் பார்த்துக்கொண்டான்.

பின்னர் நந்தினியை நோக்கி, "தேவி! நாங்கள் வரும்போது கேட்ட சத்தம் இந்த வாளின் சத்தந்தான் போலிருக்கிறது. தங்கள் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்திருக்கிறது! எங்களை வரவேற்பதற்குக் கையில் வாளேந்தி ஆயத்தமானது போலத் தோன்றுகிறது" என்றான்.

"வீரம் மிக்க இளம் புலிகளையும் தீரத்திற் சிறந்த வாலிப சிங்கங்களையும் வரவேற்பதற்குரிய முறை அதுவேயல்லவா?" என்றாள் நந்தினி.

"மூர்க்கப் புலிகளுக்கும் சிங்கங்களுக்கும் கூரிய நகங்களும் பற்களும் வேண்டும். ஆனால் துள்ளித் திரியும் புள்ளி மானுக்கு அவை தேவையில்லையென்று தானே கடவுள் தரவில்லை?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"மானும் தன் கொம்புகளை உபயோகிக்க வேண்டிய தேவை நேரிடலாம் அல்லவா? தனக்குக் கொம்புகளை அளித்த கடவுளிடம் கலைமான் நன்றி செலுத்தும் சந்தர்ப்பமும் நேரிடலாம் அல்லவா? கருணை கூர்ந்து அந்த வாளை என்னிடம் கொடுத்து விடுங்கள்!" என்று மன்றாடினாள் நந்தினி.

"இல்லை; இல்லை! தங்கள் கைகளுக்கு இது ஏற்றதன்று. மலர் கொய்யவும் மாலை புனையவும் பிரம்ம தேவன் படைத்த தளிர்க்கரங்களினால் வாளை எப்படிப் பிடிக்க முடியும்?" என்றான் கரிகாலன்.

"கோப்பெருமகனே! இந்த ஏழையின் கைகள் ஆர்வத்துடன் மலர் கொய்து ஆசையுடன் மாலை புனைந்த காலம் உண்டு. அந்த மாலையைச் சூடுவதற்குரியவர் எப்போது வருவார் என்று காத்திருந்து காத்திருந்து ஏமாந்த காலமும் உண்டு. அவ்விதம் பகற்கனவு கண்டு வந்த காலம் போய் எத்தனையோ யுகங்கள் ஆகிவிட்டன. இப்போது இந்தத் திக்கற்ற அநாதையின் கரங்கள் வாளைத் துணை கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. ஐயா! அந்தத் துணையையும் தாங்கள் என்னிடமிருந்து பறித்துக் கொள்ளாதீர்கள்!" என்றாள் நந்தினி.

"தேவி! இது என்ன பேச்சு? தங்களையா திக்கற்ற அநாதையென்று



சொல்லிக் கொள்ளுகிறீர்கள்? தங்கள், காலால் இட்ட பணியைத் தலையால் வகித்து நிறைவேற்றுவதற்கு எத்தனை வாலிப வீரர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்? இது தங்களுக்குத் தெரியாதா?'' என்றான் கரிகாலன்.

''தப்பித் தவறி என் கால் அத்தகைய தூர்த்தர்களுடைய தலையிலே பட்டு விட்டால் அந்தக் காலை வெட்டிக் கொள்ள வேண்டியதாயிருக்கும், ஐயா! அதற்கேனும் வாள் அவசியம் அல்லவா?''

''ஐயோ! இது என்ன கர்ண கடூரமான பேச்சு? பாதச் சிலம்பு கலீர் கலீர் என்று ஒலிக்க அரண்மனை மாட கூடங்களில் அன்னமும் நாணும் நன்னடை பயில வேண்டிய கால்களை வெட்டுவதா? இந்த வார்த்தைகள் பெரிய பழுவேட்டரையரின் காதில் விழுந்தால் அவர் உள்ளம் என்ன பாடு படும்?''

''ஐயா! அவரைப் பற்றிக் கவலைப் படுவோர் யார்? அந்தக் கிழச் சிங்கம் ஒரு கர்ஜனை செய்தால் அதைக் கேட்டு நடுங்கி ஓடிப் பதுங்கிய வாலிபப் புலிகள் இப்போது எவ்வளவு தைரியமாக வெளி வந்து நடமாடுகின்றன? அவர் கொள்ளிடத்து வெள்ளத்தில் போய்விட்டார் என்ற செய்தியைக் கேட்ட பின்னர் அல்லவா வாலிபப் புலிகளுக்கு இவ்வளவு துணிச்சல் வந்துவிட்டது? அந்தப் புலிகள் என்னிடம் ரொம்பவும் நெருங்கி விடாமல் பார்த்துக் கொள்வதற்காக இந்த

ஆயுதத்தை வைத்திருந்தேன். குப்பையில் கிடந்த என்னை உலகமறிய அழைத்து வந்து அரண்மனை வாழ்வும் அரச போகமும் அளித்த மகாபுருஷரின் கௌரவத்தைக் காப்பதற்காக இந்த வாளின் உதவியைக் கோரினேன். தாங்கள் சற்று முன்னால் சொன்னது போல், மலர் கொய்ய வேண்டிய கரங்களினால் வாள் சுழற்றப் பயின்றேன்..."

"தேவி! உண்மையில் அதற்காகத் தானா? இந்த வாளைத் தாங்கள் பெட்டியில் வைத்துப் பூஜை செய்து வந்ததும், இதைத் தங்கள் மலரினும் மென்மையான கன்னங்கோடு சேர்த்துக் கொஞ்சிக் குலாவி வந்ததும், பெரிய பழுவேட்டரையரின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகத்தானா? அல்லது தங்களைப் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு நெருங்கும் நிர்மூடர்களை நெருங்கவொட்டாமல் தடுப்பதற்குத் தானா? வேறு நோக்கம் ஒன்றுமில்லையா?"

"வேறு என்ன விதமான நோக்கம் இருக்க முடியும், ஐயா?"

"ஏன்? வேறு எத்தனையோ நோக்கம் இருக்க முடியும்! பழி வாங்கும் நோக்கம் இருக்கலாம். தாங்கள் அடிபணிந்து கை கூப்பிக் கேட்டுக் கொண்ட வேண்டுகோளைப் புறக்கணித்துத் தங்கள் உள்ளத்தில் அழியாத புண்ணை உண்டாக்கிய பாதகனைக் கொன்று சபதம் முடிக்கும் நோக்கம் இருக்கலாம்!"

நந்தினி தலையைக் குனிந்து கொண்டு ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள். பின்னர், இளவரசனை நிமிர்ந்து நோக்கி, "கோமகனே! அம்மாதிரி எண்ணமும் ஒருசமயம் எனக்கு இருந்தது உண்மைதான். அதற்காகவே இந்த வீரவாளைப் பூஜை செய்துவந்தேன். எப்போது அந்த வேளை வரும் என்று காத்துக்கொண்டிருந்தேன். ஆனால் வேளை வந்தபோது என் கரங்களில் வலிவு இல்லாமல் போய்விட்டது. நெஞ்சில் உறுதியில்லாமலும் போய் விட்டது. இனி இந்த வாளை என் கற்பையும் என் கணவரின் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள மட்டுமே உபயோகப்படுத்துவேன். கருணை செய்து அதை இப்படிக் கொடுங்கள்!" என்றாள்.

"தேவி! அந்தப் பொறுப்பை நான் வகிக்கக் கூடாதா? தங்களுக்கோ, தங்கள் கணவருக்கோ, தீங்கு எண்ணிய பாதகனைத் தண்டிக்கும் கடமையை நான் நிறைவேற்றக் கூடாதா?" என்றான் ஆதித்தகரிகாலன்.

"தங்களால் அது இயலாத காரியம். இந்தத் திக்கற்ற அநாதை ஸ்திரீயின் நிமித்தம் தங்கள் ஆருயிர் நண்பர்களைத் தண்டிக்க முடியுமா?"

"ஏன் முடியாது? நிச்சயமாய் முடியும்! நந்தினி! நீ அன்றைக்கு ஏரித் தீவில் வந்தியத்தேவனைப் பற்றிக் கூறியதையெல்லாம் அப்போது நான் பூரணமாக நம்பவில்லை. பின்னால், கந்தமாறன் சொல்லியதிலிருந்து அவ்வளவும் உண்மைதான் என்று அறிந்தேன். அந்தப் பாதகனை நீ மன்னித்தாலும் நான் மன்னிக்கச் சித்தமாயில்லை. அவன் எங்கே என்று சொல்...! சொல்ல மாட்டாயா...? வேண்டாம்! என் கண்கள் குருடாகிவிடவில்லை...! இதோ பார்!" என்று ஆத்திரத்துடன் ஆதித்த கரிகாலன் கர்ஜனை செய்துகொண்டே கட்டிலை மூடியிருந்த திரைச்சீலையை நோக்கி அடி எடுத்து வைத்தான்.

நந்தினி அவன் காலைத் தொட்டு எழுந்து மண்டியிட்டுக் கரங்களைக் குவித்துக்கொண்டு "கோமகனே! வேண்டாம்! வேண்டாம்!" என்றாள்.

"நந்தினி! உன் கருணையை வேறு காரியங்களுக்கு வைத்துக் கொள்! என் நண்பனைப் போல் நடித்துச் சதி செய்யும் சண்டாளனிடம் கருணை காட்ட வேண்டாம்!" என்று சொல்லிய வண்ணம் ஆதித்த கரிகாலன் நந்தினியை மீறிக் கொண்டு மேலே நடந்தான்.

நந்தினி பிரமித்துத் திகைத்தவள் போல் நாலாபுறமும் பார்த்து விழித்தாள். இத்தனை நேரமும் வாசற்படிக்கு அருகில் சிலையைப் போல் நின்று கொண்டிருந்த கந்தமாற

னைப் பார்த்து "ஐயா! அவரைத் தடுங்கள்!" என்று அலறினாள்.

கந்தமாறனாகிய சிலைக்கு உயிர் வந்தது. ஆனால் அவன் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. இலேசாக ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு மீண்டும் சிலையாக மாறிவிட்டான்.

கரிகாலன் ஒரு கையினால் வாளை ஓங்கிய வண்ணம் கட்டில் திரைச்சீலையின் அருகில் சென்று, இன்னொரு கையினால் திரையை விலக்கினான்.

உள்ளே, கையில் சிறிய கூரிய கத்தியுடன் தோன்றிய மணிமேகலை 'கிறீச்' என்று சத்தமிட்டாள்.

ஆதித்த கரிகாலன் ஓங்கிய வாளுடன் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றுவிட்டுப் பின்னர் அந்த வாளினால் கட்டில் திரைச்சீலையைக் கிழித்தெறிந்தான்.

"ஆகா! இந்தப் பெண் புலியா இங்கே நிற்கிறது? அப்பப்பா! இதன் நகங்கள் மிகக் கூர்மையாயிற்றே?" என்று கூறி 'ஹா ஹா ஹா'வென்று சிரித்தான்.

பின்னர், கந்தமாறனைப் பார்த்து, "நண்பா! உன் தங்கையை அழைத்துப் போய் அவள் தாயாரிடம் ஒப்புவித்து விட்டு வா! இவள் வயிற்றில் எத்தனை புலிக்குட்டிகள் பிறக்குமோ தெரியாது! இவள் இந்த வீர பாண்டியனுடைய வாளுக்கு இத்தனை நேரம் இரையாகிச் செத்திருந்தால் சோழ நாடு எத்தனை வீரப்புதல்வர் புதல்விகளை இழக்கும்படி நேர்ந்திருக்கும்?" என்றான்.

சற்று முன் உண்மையிலேயே பெண் புலி போல் சிறிய மணிமேகலை ஆதித்த கரிகாலனின் வார்த்தைகளைக் கேட்டு நாணம் அடைந்தாள். கந்தமாறன் அவளை அணுகி அழைப்பதற்குள், அவளாகவே அந்த அறையிலிருந்து செல்ல ஆயத்தமாகி விட்டாள்.

அண்ணனும் தங்கையும் அங்கிருந்து போனதும், கரிகாலன் நந்தினியைப் பார்த்து, "தேவி! ஒரு நாடகம் நடித்து அவர்கள் இருவரையும் போகச் செய்துவிட்டேன். இனிமேலாவது நம் உள்ளத்தைத் திறந்து உண்மையைப் பேசலாம் அல்லவா?" என்றான்.

நந்தினி உண்மையான வியப்புடன் கரிகாலனை நோக்கி, "ஐயா! தாங்கள் நடித்தது நாடகமா? அப்படியானால், அது ஆச்சரியமான நடிப்புத்தான்! நானும் அதை உண்மையென்றே நம்பி ஏமாந்து போனேன்!" என்றாள்.

"நந்தினி! நடிப்பிலே உனக்கு இணை இந்த உலகிலேயே இல்லை என்பது என் எண்ணம். நீயே ஏமாந்திருந்தால், என் நடிப்புத் திறமையை அவசியம் மெச்சிக் கொள்ள வேண்டியதுதான்! ஆனாலும், நான் வாளை ஓங்கிக் கொண்டு மணிமேகலை மறைந்திருந்த இடத்தை நோக்கிப் போனபோது, நீ என்னைத் தடுக்கவில்லையே? அது ஏன்? என் மீது சுமந்துள்ள பல குற்றங்களுடன் ஸ்திரீ ஹத்தி தோஷமும் சேரட்டும் என்று எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தாயா?" என்று கேட்டான் கரிகாலன்.

"சிவ சிவா! இந்த உலகத்திலேயே இன்றைக்கு அந்தப் பெண் ஒருத்தியிடந்தான் நான் உண்மையான அன்பு கொண்டிருக்கிறேன். அவளும் சாகட்டும் என்று சும்மா பார்த்துக் கொண்டிருப்பேனா? திரையை நீக்கியதும் தாங்களே தெரிந்து கொள்வீர்கள் என்று எண்ணினேன்..."

கரிகாலன் சிரித்தான்.

"இந்தச் சிரிப்பின் பொருள் விளங்கவில்லை!" என்றாள் நந்தினி.

"மணிமேகலையை நான் கொல்லுவதற்கு நீ சொன்ன காரணமே போதும்!" என்றான் கரிகாலன்.

"இன்னும் விளங்கவில்லை!"

"நீ யாரிடமாவது அன்பு கொண்டாய் என்றால், அவனோ அவளோ என்னுடைய பரம விரோதியாகி விடுவார்கள். இது உனக்குத் தெரியாதா?"

"தெரியும்; அத்தகைய துரதிர்ஷ்டசாலி நான் என்று தெரியும். ஆனாலும் தங்கள் குரோதம் கள்ளங்கபடமறியாத இந்த இளம் பெண் வரையில் செல்லும் என்று நான் கருதவில்லை!"

"அல்லது உன் நோக்கம் வேறுவிதமாகவும் இருக்கலாம். நான் மணிமேகலை



யைக் கொன்றுவிட்டால், அதற்காகக் கந்தமாறன் என்னைப் பழி வாங்குவான் என்று எண்ணியிருக்கலாம். அல்லது நான் அவளைக் கொல்லுவதற்குள் அவள் கையிலிருந்த சிறிய கத்தியை எறிந்து என்னைக் கொன்றுவிடுவாள் என்றும் கருதியிருக்கலாம்..."

"ஐயையோ! இது என்ன? எப்படிப் பட்ட பயங்கரமான கற்பனைகள்!"

"கற்பனையா? என்னுடைய பயங்கரமான கற்பனைகளைக் காட்டிலும் பயங்கரமான நோக்கத்தை நீ உன் மனத்தில் வைத்திருக்கிறாய்! உண்மையைச் சொல்! என் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் தீயை மேலும் வளர்க்க வேண்டாம்! என்னை எதற்காக இந்தக் கடம்பூர் அரண்மனைக்கு வரச் சொன்னாய்? எதற்காகப் பழுவேட்டரையரைத் தஞ்சைக்குப் போகும்படி செய்தாய்? சோழ சாம்ராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொடுத்துச் சமரசம் செய்து வைப்பதற்காகவோ, எனக்கும் மணிமேகலைக்கும் திருமணம் செய்வித்துக் கண்டுகளிப்பதற்காகவோ இத்தனை முயற்சியும் செய்ததாகச் சொல்லாதே! அந்தக் கதைகளையெல்லாம் நான் நம்ப மாட்டேன். நம்பி




யிருந்தால், இங்கு வந்திருக்கவும் மாட்டேன்..."

"பின் எதற்காக இங்கு வந்தீர்கள், கோமகனே! என்ன நம்பிக்கையுடன் இந்த இடத்துக்கு வந்தீர்கள்?"

"நம்பிக்கையா? எனக்கு ஒருவித நம்பிக்கையும்

இடையாது. என் உள்ளத்தில் நிரம்பி யிருப்பதெல்லாம் நிராசையும் அவ நம்பிக்கையுந்தான். இந்த நாட்டை விட்டும், இந்த உலகத்தை விட்டுமே, நான் போய்விட விரும்புகிறேன். அதற்கு முன்னால் உன்னை ஒரு தடவை பார்த்து விடை பெற்றுப் போகாலம் என்றுதான் வந்தேன். ஒரு சமயம் என்னிடம் நீ ஒரு வரம் கோரினாய். காலில் விழுந்து மன்றாடிக் கேட்டுக் கொண்டாய். கையெடுத்துக் கும்பிட்டு இரந்தாய். என் ஆத்திரத்தினாலும்



மூர்க்கத்தனத்தினாலும் நீ கோரியதை நான் கொடுக்கவில்லை. பிறகு ஒவ்வொரு கணமும் அதை நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்கு ஏதேனும் பரிகாரம் உண்டானால், அதைச் செய்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். நந்தினி! சொல்! எந்த விதத்திலாவது அதற்கு நான் பரிகாரம் செய்ய முடியும் என்றால், சொல்!"

இவ்வாறு இரக்கம் ததும்பும் குரலில் கூறிய கரிகாலனைப் பார்த்து நந்தினி, "கோமகனே! அதற்குப்



பரிகாரம் ஒன்றும் கிடையாது. இறந்தவர்கள் இறந்தவர்கள்தான்! இறந்தவர்களைப் பிழைக்கச் செய்யும் சக்தி இந்த உலகில் யாருக்கும் கிடையாது. கதைகளிலே காவியங்களிலே சொல்கிறார்கள். நாம் பார்த்ததில்லை" என்றாள்.

"இறந்தவர்களைப் பிழைக்கச் செய்ய முடியாது. அது உண்மைதான்! ஆனால் உயிருக்கு உயிர் கொடுத்துப் பரிகாரம் தேடலாம் அல்லவா...? இதோ பார்! என்னிடம் இனியும் மறைக்க வேண்டாம். இங்கு நீ எதற்காக வந்தாய், என்னை எதற்காக வரச் சொன்னாய். என்னத்திற்காகப் பழுவேட்டரையரைத் தஞ்சைக்கு அனுப்பினாய் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது என்று எண்ணாதே! நீயும் நானும் சின்னஞ்சிறுவர்களாயிருந்த நாளிலிருந்து உன் மனத்தில் எழும் எண்ணங்களை அறியும் சக்தி எனக்கு உண்டு. எனக்கு ஆத்திரம் ஊட்டி நீசத்தனமான செயல் புரியும்படி செய்வதற்காகவே வீர பாண்டியனுடைய உயிருக்காக நீ மன்றாடினாய். என் பக்கத்திலிருந்து என்னை வதைத்துக் கொண்டிருப்பதற்காகவே பெரிய பழுவேட்டரையரை நீ மணந்து தஞ்சைக்கு வந்தாய். நான் காஞ்சியில் நிம்மதியுடன் இருப்பது உனக்குப் பொறுக்கவில்லை. அதனாலேயே இந்தக் கடம்பூர் அரண்மனைக்கு வரச் செய்தாய். வீர பாண்டியனுடைய வாளினால் என்னைக் கொன்று பழி முடிக்கும் நோக்கத்துடனேயே நீ இவ்விடத்துக்கு வந்திருக்கிறாய். அந்த உன்னுடைய நோக்கத்தைத் தடையின்றி நிறைவேற்றிக் கொள்! அதற்காகவே கந்தமாறனையும் அவன் தங்கையையும் அப்புறப்படுத்தினேன். இதோ! இந்த வாளைப் பெற்றுக் கொள்! உன் பழியை முடித்துக்கொள்!" என்று கூறிக் கரிகாலன் வாளை நீட்டினான்.

நந்தினி வாளை வாங்கிக்கொண்டாள். வாளைப் பிடித்த அவளுடைய கைகள் நடுங்கின. பின்னர் அவள் உடம்பெல்லாம் நடுங்கியது. கண்களில் கண்ணீர் ததும்பியது. இதயத்தைப் பிளக்கும் சோகக் குரலில் விம்மலும் தேம்பலும் கலந்து வந்தன.

"நந்தினி! இது என்ன அதைரியம்? இந்த மனத் தளிர்ச்சி ஏன்? நீ பட்டர் குடும்பத்தில் வளர்ந்தவள்; ஆனால் வீர மறக் குலத்தில் பிறந்தவள் அல்லவா? ஆட்டு மந்தையில் வளர்ந்தபடியால் சிங்கக்குட்டி தன் இயல்பை இழந்து விடுமா? இதோ பார்! உன் பழியை முடிப்பதற்குக் கந்தமாறனையோ, பார்த்திபேந்திரனையோ, வந்தியத்தேவனையோ நீ ஏவி விட வேண்டாம். அவர்கள் மீது எனக்குக் கோபத்தை உண்டாக்கவும் வேண்டாம். உன் சபதத்தை நீயே நிறைவேற்றிக் கொள்! உன் பழியை உன் கையினாலேயே முடித்துக்கொள்! யாராவது இங்கே மறுபடியும் வந்து தொலைந்து விடலாம். கந்தமாறன் தன் தங்கையை அன்னையிடம் சேர்ப்பித்து விட்டுத் திரும்பி வருவான். பார்த்திபேந்திரனும் சம்புவரையரும் திரும்பி வரும் நேரமும் ஆகிவிட்டது. அவர்களுடனே என் பாட்டன் மலையமானும் வந்தாலும் வரலாம். பழுவேட்டரையர் கொள்ளிடத்து வெள்ளத்தில் போயிருப்பார் என்றும் நான் நம்பவில்லை. அவரும் திடீரென்று வந்தாலும் வரக்கூடும். உன் பழியை முடித்துச் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ள இதைக் காட்டிலும் நல்ல சந்தர்ப்பம் வரப் போவதில்லை. என்னைக் கொல்லுவதினால் எனக்கு நீ எவ்விதத் தீங்கும் செய்தவளாக மாட்டாய்! பேருதவி செய்தவளாவாய்!" என்றான்.

நந்தினி பொங்கி வந்த விம்மலை அடக்கிக்கொண்டு, "கோமகனே! தங்களிடம் நான் எதையும் மறைக்கவும் இல்லை; மறைக்க விரும்பவும் இல்லை. நான் இங்கு வந்ததின் நோக்கம் பற்றித் தாங்கள் கூறியதெல்லாம் உண்மைதான். தங்களை இங்கு வரச் சொன்னதின் நோக்கமும் அதுதான். ஆனால் சந்தர்ப்பம் நேர்ந்திருக்கும் சமயத்தில் என் கைகளில் வலுவு இல்லை; என் நெஞ்சி

லும் தைரியம் இல்லை. தாங்கள் என்னைத் தேடி வரும் காலடிச் சத்தம் கேட்டவுடனேயே என் கையிலிருந்த வாள் நழுவிக் கீழே விழுந்துவிட்டது. இதோ பாருங்கள்! வாளைப் பிடித்திருக்கும் என் கரங்கள் நடுங்குவதை!'' என்றாள்.

''ஆம், ஆம்! அதைப் பார்த்துக்கொண்டுதானிருக்கிறேன். ஆனால் அதன் காரணந்தான் எனக்குத் தெரியவில்லை. உன் நெஞ்சம் ஒரு சமயம் எவ்வளவு உறுதியடைந்திருந்தது என்பதை நான் அறிவேன். தேவேந்திரனுக்காக வஜ்ராயுதத்தைச் செய்து கொடுத்த பிறகு அதில் மீதமான உலோகத்தைக் கொண்டு பிரம்மதேவன் உன் இருதயத்தைப் படைத்திருக்க வேண்டும் என்று நான் எண்ணுவதுண்டு. அப்படிப்பட்ட உன் நெஞ்சு இவ்விதம் இளகிவிட்டதன் காரணம் என்ன...?''

''தங்கள் தோழர் வந்தியத்தேவர் சொன்ன செய்திதான் காரணம்?''

''ஆகா! நீயும் நானும் உடன் பிறந்தவர்கள் என்று அவன் கண்டுபிடித்துக் கொண்டு வந்த செய்தியைத்தானே சொல்லுகிறாய்? அன்றைக்கு ஏரிக்கரைத் தீவில் நாம் பேசிக் கொண்டிருந்தபோது நீ அதை நம்பவில்லையென்று சொன்னாயே? நம்மை மறுபடியும் பிரித்து வைப்பதற்காக யாரோ செய்திருக்கும் சூழ்ச்சி என்று கூறினாயே?''

''நான் அதை நம்பக்கூடாது என்றுதான் பார்த்தேன். அதற்காக எவ்வளவோ பிரயத்தனம் செய்தேன். ஆனால் இன்று அவர் கூறிய வேறொரு செய்தி என் நெஞ்சுறுதியை அடியோடு குலைத்துவிட்டது.''

''ஆகா! அது என்ன? இன்னும் ஏதாவது புதிய கற்பனையா? புதிதாக வேறு என்ன கூறினான்?''

''என்னைப் பெற்ற அன்னையைப் பற்றிச் சொன்னார். அவரை இலங்கைத் தீவில் பார்த்ததாகக் கூறினார். அதை நான் நம்ப மறுப்பதற்குக் காரணம் எதுவும் இல்லை. கோமகனே! முன்னொரு தடவை நான் ஒரு வரம் கேட்டேன். அதைத் தாங்கள் கொடுக்கவில்லை. அதற்காக இன்றுவரை வருத்தப்படுவதாகச் சொன்னீர்கள். இன்று மறுபடியும் ஒரு வரம் கேட்கிறேன். இதையாவது கொடுப்பீர்களா?''

''வரம் இன்னது என்று குறிப்பிட்டுக் கேட்டால், கொடுக்க முடியும் முடியாது என்று சொல்கிறேன்.''

''கோமகனே! வீர பாண்டியனுடைய மரணத்துக்குப் பழி வாங்குவதாக நான் சபதம் செய்தது உண்மைதான். மீன் சின்னம் பொறித்த இந்தப் பாண்டிய குலத்து வாளினால் ஒன்று தங்களைக் கொல்லுவேன். அல்லது என்னை நானே கொன்று கொண்டு மாய்வேன் என்று சபதம் எடுத்துக்கொண்டேன். தங்களைக் கொல்வதற்கு என் நெஞ்சிலும் துணிவு இல்லை; என் கைகளிலும் வலிவு இல்லை. என்னை நானே கொன்றுகொண்டு தங்கள் முன்னாலேயே மடியலாம் என்று எண்ணினால், அதற்குப் போதிய பலம் என் கைகளில் இல்லை. அரைகுறையாக முயன்று, என் உயிர் போகாவிட்டால் என்ன செய்வது என்று பயமாயிருக்கிறது. ஐயா! என் சபதத்தை நிறைவேற்றுவதற்கு உதவி செய்யுங்கள்! இந்த வாளைத் தாங்களே வாங்கிக்கொண்டு தங்கள் கையினால் என்னை வெட்டிக் கொன்று விடுங்கள்! அப்போது என் சபதம் முடிந்து விடும். இந்த ஜன்மத்தில் மட்டுமின்றி இனி வரும் பிறவிகளிலும் தங்களிடம் நன்றியுள்ளவளாவேன்!''

இவ்விதம் கூறிக்கொண்டே நந்தினி நீட்டிய வாளை மறுபடியும் ஆதித்த கரிகாலன் வாங்கிக் கொண்டான்.

''ஹா ஹா ஹா'' என்று அரண்மனை முழுதும் எதிரொலி செய்யும்படி பயங்கரமாகச் சிரித்தான்.

(தொடரும்)



• கூட்டத்தில் அடிகளார்....

"வெள்ளாடு வளர்த்தா காட்டை அழிச்சிடும். மழை வராதுன்னு சொல்லித்தான் பெரிய சாமி காலத்திலே வெள்ளாடு வளர்க்கலை.... இப்ப ஒவ்வொரு வீடா போயி வெள்ளாட்டை எடுத்து வளர்க்கச் சொன்னீங்க... உங்க பேச்சைக் கேட்டு பாதிப் பேரு எடுத்திட்டாங்க. எடுக்காதவங்களுக்கு என்ன செய்யுறதுன்னு இந்தக கூட்டத்திலே முதல்லே முடிவு செய்யுங்க!"

"வெள்ளாட்டை எடுக்காதவங்க எடுக்கிறதுக்குத் தவணை கேட்டிருக்காங்க... வெள்ளாட்டை வைத்து பிழைப்பு நடத்துறவங்களுக்கு மாற்று ஏற்பாடா வங்கிகள் மூலம் செம்மறியாடு வாங்கிக் கொடுத்து வளர்க்க பேசிக்கிட்டிருக்கேன். அதனாலே கொஞ்சம் பொறுத்து முடிவு செய்வோம்.." என்று பொன்னம்பல அடிகளார் சொன்னவுடன் அந்தக் கூட்டத்தில் அமைதி நிலவியது.

தமிழக அரசின் அறிவிப்பின்படி கிராமங்கள்தோறும் கிராம சபைக் கூட்டங்கள் அண்மையில் நடைபெற்றன. சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டம் நமக்கு ஒருவித வித்தியாசத்தை உணர்த்தியது. வோட்டுக்களுக்காக அரசியல் நோக்கோடு மக்களை அணுகாமல் "நம் மக்கள்... நமது கிராமம்" என்ற நோக்கோடு மக்களோடு மக்களாகத் தரையில் அமர்ந்து அந்தக் கிராமசபைக் கூட்டத்தில் கிராமத்தின் நிறைகுறைகளைப் பேசினார் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்.

இதுவரை நடந்துள்ள ஏழு கிராமசபைக் கூட்டங்களில் ஒன்றைக் கூட புறக்கணிக்காமல் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொண்டுள்ளார் பொன்னம்பல அடிகளார்.

"நாங்க.... தாழ்த்தப்பட்ட மக்களென்று அரசாங்கத்திலே எங்களுக்குன்னு சமுதாயக் கூடம் கட்டித் தந்தீங்க... அதை எங்களைப் பயன்படுத்த விடாம பூட்டி வைச்சா எப்

மிக நல்ல விஷயம்!

பதவியல்ல; பொறுப்பு!

இரண்டு ஆண்டுகளுக்கு முதல்வர் கலைஞரிடமிருந்து அழைப்பு வந்தது. எதற்காக அழைக்கிறார் என்று தெரியாமலேயே அவரைச் சந்தித்த போது, மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயிலின் அரங்காவலர் குழுத் தலைவர் பொறுப்பை எனக்கு அளிக்க முன் வந்தார். "இது பதவி இல்லை பொறுப்பு" என்றும் குறிப்பிட்டார். மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன்.



பாரம்பரியம் மிக்க மயிலை திருக்கோயிலில், யானை மடம், பசு மடம், தங்க ரதம், திருக்குளம், கருணை இல்லம், திருமண மண்டபம் என்று பல தரப்பட்ட பணிகளை பக்தியுடன் கவனித்து வருகிறேன்.

- சீர்காழி சிவசிதம்பரம்

படி...? எதுக்கு கட்டினீங்க...?" என்று கோபமாகப் பேசினார் சோமையா...

சாவி, பஞ்சாயத்திலேதான் இருக்கு... அதைப் பயன்படுத்தும்போது ஏதாவது பெயரளவு கட்டணம் வசூலிக்கச் சொல்லியிருக்காங்க பி.டி.ஓ ஆபிஸ்லே... என்றார் பஞ்சாயத்து தலைவர் தெய்வநாயகம்.

"அந்த விவரத்தை எங்களுக்கும் சொல்லுங்க. இப்பதானே தெரியுது... இனிமேலே அது மாதிரி செய்யலாம்" என்று சமாதானமாகி உட்கார்ந்தார் சோமையா.

இப்படி சாலை ஆக்கிரமிப்பு, வெள்ளாடுகளை அகற்றுதல், வீடுதோறும் குடிநீர் இணைப்புகள், வீட்டு வரி வசூலிப்பு என்று காரசாரமான விவாதங்கள்...

"நான் தலைவரா இருக்கிறது அஞ்சு வருஷத்துக்குத்தான்... அடுத்து ஒரு தலைவர் வருவாரு. ஆனால் குன்றக்குடியில் நிரந்தரமான தலைவர் அடிகளார்தான்... அரசு அலுவலகங்களில் எங்களால முடியலைன்னா கூட சாதித்துக் கொடுக்க ஒரு வி.ஐ.பி இருக்காரு... குன்றக்குடியின் பஞ்சாயத்துத் தலைவர் நான் என்பதில் பெருமைதான் எனக்கு" என்கிறார் பஞ்சாயத்து தலைவர் தெய்வநாயகம்...



• சோமையா

"வெள்ளாட்டுக்கு முதல்ல பதில் சொல்லுங்க!"


"இதுவரை மூன்று ஊர்களில் கிராம சபை கூட்டங்களில் அரசு பார்வையாளராகப் போயிருக்கேன். இந்த அளவுக்கு ஒரு கூட்ட விவாதம் இங்குதான் பார்த்திருக்கேன்... அடிகளாரை ஒரு வி.ஐ.பியாகப் பார்த்து தங்களுடைய ஆலோசனைகளைத் தெரிவிக்காமல், காரசாரமாக கலந்து பேசி முடிவெடுத்திருக்கிறார்கள். ஓர் உண்மையான கிராமசபையைப் பார்த்த திருப்தி எனக்கு" என்கிறார் கல்லல் ஊராட்சி ஒன்றிய உதவியாளர் ராமமூர்த்தி.

செய்தி, படங்கள்:
கி. சிங்காரவடிவேல்

கனவிலும் நினைக்காத கௌரவம்!

வாழ்க்கைக்கு ஒரு வேலை. வேலைக்காக ஒரு பத்திரிகை என்றுதான் நக்கீரன் ஆரம்பித்தோமே தவிர, வேறு எந்த ஒரு பெரிய கனவும் இல்லை. ஆனால் இன்று நக்கீரனை இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் தெரிந்திருக்கிறது. புலனாய்வு இதழியலில் நக்கீரனுக்குத் தனியிடம் கிடைத்துள்ளது. இன்று இரு மாநில அரசுகளின் சார்பில் அரசு தூதராக வீரப்பனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் அளவுக்கு எனக்கு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நக்கீரன்தான். நக்கீரன் பத்திரிகை ஆரம்பித்ததுதான் என் வாழ்க்கையில் நடந்த மிக நல்ல விஷயம்.

- நக்கீரன் கோபால்



மிக நல்ல விஷயம்!

திருமதி, திருப்பதி,

'ஜே.எஸ். ஜம்புநாத்'

டீ.வி.யில் சன் மியூசிக்கை ரசித்துக் கொண்டிருக்கும் ஈஸ்வரன், மனைவியின் மெட்டிச் சப்தம் கேட்டு உஷாராகி, மகரிஷி மகேஷ் யோகி சானலுக்குச் சட்டென்று தாவுகிறார்.

1

பார்வதி : கஷ்டம்! கஷ்டம்! நாள் பூரா ஈன்னு இளிச்சிண்டு டீ.வி. முன்னாலே உட்கார்ந்து இருக்கீங்களே. கொஞ்சம் கம்ப்யூட்டர் முன்னே உட்கார்ந்து 'ஈ-மெயில்' அனுப்பக் கத்துக்கிறது தானே?

ஈஸ்வரன் : போச்சுடா! தெருக்கோடியிலே இருக்கிற 'க்னோபஸ் கம்ப்யூட்டர் சென்டரி'லே ஒரு மண்டலம் ஏதோ கத்துண்டாலும் கத்துண்டே, என்னைக் 'கம்ப்யூட்டர் இல்லிட்ரேட்'னு குத்திக் காட்டறதே உன் வேலையாப் போச்சு. 'மல்டி மீடியா' தெரியாத 'மல்டி மடையா'ன்னு திட்டாததுதான் பாக்கி. இதோ பாரு, மகேஷ் யோகி 'லெவிடேஷனை'ப் பற்றி என்ன சொல்றார்னா...

பார்வதி: 'லெவிடேஷன்'கிறது ஒரு 'ஸித்தி' நிலை. ஆழ்நிலை தியானம் மூலமா தரையிலிருந்து ஒரு அடி, இரண்டு அடி பறக்கறதுதான். ஆனா ஒரு அடி, ரெண்டு அடின்னு இல்லாம, முப்பதாயிரம் அடி உயரத்திலே பறந்து அமெரிக்கா போயிருக்கிற உங்க பிள்ளைக்கு நீங்களாகவே ஈமெயில் அனுப்ப ஏன் கத்துக்க மாட்டேங்கறீங்க?

ஈஸ்வரன்: ஐயா உட்கார்ந்தா, அமித்தாப் பச்சனோட கம்ப்யூட்டர்ஜிக்கு முன்னாலே, 'ஹாட் சீட்லே'தான் உட்காருவார்! ரேஸிலேயும், லாட்டரி சீட்டிலும் எனக்கு அதிர்ஷ்டம் இல்லை. டீ.வி.யினாலே க்ரோர்பதி ஆகிறேனான்னு பார்க்கிறதை விட்டுட்டு, ஈமெயிலாவது, எறும்பு மெயிலாவது?

பார்வதி: பிள்ளைக்கு முப்பது வயசாகப் போகிறது – கவனம் இருக்கட்டும்! திடீர்னு அட்லாண்டாவிலேர்ந்து ஆனபெல்னு ஒரு அமெரிக்கப் பெண்ணை மோதிரம் மாத்திண்டு அழைச்சிண்டு வந்து ஆசீர்வாதம் பண்ணுங்கோன்னு சொன்னா என்ன செய்வீங்க?

ஈஸ்வரன்: ஹூம்... வெங்கல மெடல் வாங்கின குண்டு வீராங்கனை கர்ணம் மல்லேஸ்வரி ஸ்டைலில் இரண்டு பேரையும் தலைக்கு மேல் அல்லாக்காகத் தூக்கி வெளியே கடாசிடுவேன். கேட்டுக்கோ! உன் பிள்ளைக்குப் பெண் பார்க்கிறது ரொம்ப கஷ்டம். நான் சொன்ன ஃபர்ஸ்ட் க்ளாஸ் வரனை அவன் லட்சியமே பண்ணலை. அந்தக் காலத்திலே அப்பா காமிச்ச பெண்ணை நான் கண்ணை மூடிண்டு சரின்னு சொல்லலை?

பார்வதி: முப்பது வருஷத்துக்கு முன்னே நாம பண்ணின தப்பைப் பத்தி இப்போ என்ன? நீங்க உடனே ஈமெயில் கத்துக்கணும். சும்மா கம்ப்யூட்டர் முன்னே 'மெயிலே மெயிலே இறகு போடுன்னா' ஈமெயில் போடாது. சொல்ல மறந்துட்டேனே... நாளையிலேர்ந்து 'க்னோபஸ்'லே பழைய அழுமூஞ்சி சிவராமமூர்த்தி கிடையாதாம். ஸ்மார்ட்டான ஒரு சின்னப் பெண் க்ளாஸ் எடுக்கப் போறாளாம்...

ஈஸ்வரன் : (சுதாரித்துக் கொண்டு) அப்படியா? கம்ப்யூட்டர்கிட்டே போகக் கூடாதுன்னு இல்லே... நாளையிலேந்தா? நவமி ஆச்சே? பரவாயில்லை. கணினிக்கு நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டாம்... இதென்ன பிட் நோட்டீஸ்... ஓகோ! இன்னிக்கு 'இண்டு' பேப்பர்லே இருந்ததே... 'க்னோபஸ்' பத்திதானே? குடு... பார்க்கலாம்!

2

(க்னோபஸ் கம்ப்யூட்டர் சென்டரில் ஈஸ்வரன் காலடி வைத்தவுடன் அதுவரை அணைந்திருந்த விளக்குகள் 'பளிச்'சென்று

எரிய ஆரம்பிக்கின்றன.)

ஈஸ்வரன்: நல்ல சகுனம்தான்! என் பேரு ஈஸ்வரன். நீங்கதான் இன்ஸ்டிரக்டரா?

இன்ஸ்டிரக்டர்: ஆமாம் சார்! என் பெயர் சிவப்ரியா!

ஈஸ்வரன்: சந்தோஷம்.

க்ரோர்பதி!

லெஃப்ட்லே ஆணி, சுத்தி, கம்பி விக்கிற 'விருதுநகர் முருகன் ஹார்ட்வேர்ஸ்! ரைட்லே – மெத்தை, தலைகாணி, திண்டு விக்கிற 'கண்மணி பெட்லாண்ட்ஸ்'. நடுவிலே கம்ப்யூட்டர் சென்டர்! ரொம்பப் பொருத்தம். எல்லாமே ஹார்ட்வேர் – சாஃப்ட்வேர் சமாசாரம்தானே? என்னம்மா? உங்க 'மௌஸ்'செல்லாம் சௌக்கியமா? 'முருகன் ஹார்ட்வேர்ஸ்' கடை வாசலிலே நிறைய எலிப் பொறிகள் வைச்சிருக்கே?

சிவப்ரியா: *(சிரித்து)* என்ன கோர்ஸ் சார்? சி ப்ளஸ்-ப்ளஸ்ஸா? ஆரகிளா? யூனிக்ஸா, ஜாவாவா? விஷுவல் பேசிக்கா...



ஈஸ்வரன்: ஈ காமர்ஸை விட்டுட்டீங்களே? ஆமா - நான் அதைப் படிச்சுக் கரையேறிட்டா என் பெயரை 'ஈடாட்ஸ்வரன்னு' எழுதிக்கலாமா? அப்போ சின்ன ஈ போடணுமா? பெரிய ஈயா?

சிவப்ரியா: *(மறுபடியும் சிரித்து)* சொல்லுங்க சார். என்ன வேணும்?

ஈஸ்வரன்: அம்மா, சிவப்ரியா! நான் வந்தது இன்டர்நெட், ஈமெயில், வேர்ட், எக்ஸல் கத்துக்க இல்லைன்னு தெரிஞ்சுண்டு இருப்பே! எனக்கு இப்ப தேவை - ரெண்டு ஜாதகம். கன்னியால்... சீச்சீ உளர்றேன். கணினியால் கணிக்கப்பட்ட இரண்டு ஜாதகங்கள்!

சிவப்ரியா: *(தொடர்ந்து சிரித்து)* கம்ப்யூட்டர் ஜாதகமா? ரெண்டா? இங்கே அந்த சாப்ட்வேர் இல்லியே சார்! பிறந்த தேதி, நேரம், இடம் குறித்துக் கொடுத்தால், தமிழிலோ, இங்க்லீஷிலோ என் அப்பா, ஜோதிடப் புலி, த்ரிகால ஞானி, மகா காளி உபாசகர் ஸ்ரீ குமார ஜோதிடர் நடத்தற சர்வமங்கள ஜோதிஷ - ஜாதகலயாவிலிருந்து பிரிண்ட் போட்டு நாளைக்குத் தருவேன் சார். ஒரு ஜாதக 'காஸ்டிங்'குக்கு இருபது ரூபாய். மூணுன்னா ஐம்பது ரூபாய்தான்!

ஈஸ்வரன்: *(குறிப்புக்களைக் கொடுத்து)* குட்! ஏம்மா? நெஜம்மா கேக்கறேன். ஈமெயிலையும், இன்டர்நெட்டையும் கத்துண்டா, பில்கேட்ஸ் என்னை அமெரிக்காவுக்குக் கொத்திண்டு போயிடுவாரா?

சிவப்ரியா: *(சீரியஸாக)* அதுவரை நம்மூர் நாராயணமூர்த்தியும், அஸிம் ப்ரேம்ஜியும் உங்களை விட்டு வெச்சிருக்கணுமே! *(இருவரும் சிரிக்கிறார்கள்)*

3

(தமிழ் ஃபாண்ட் 'டௌன்லோட்' ஆகாத தளம் போல் புரியாத லிபிகள் உள்ள தடிமனான கம்ப்யூட்டர் புத்தகத்தில் சிவப்ரியா ஆழ்ந்து இருக்கிறாள். டெலிபோன் அடிக்கிறது.)

குரல்: ஹாய்! சிவப்பழப்ப்ரியா! குமார் பேசறேன் - அட்லாண்டாலேந்து!

சிவப்ரியா: ஈஸ்வர புத்திரனா? இப்போ என்ன பண்ணிண்டு இருக்கே?

குமார்: அங்கிள் சாமுக்கு மென்பொருள் எழுதுவதைச் சற்றே நிறுத்தி விட்டு ஒரு இந்தியப் பெண்ணுக்குப் புதுக் கவிதை எழுதிண்டு இருக்கேன்!

சிவப்ரியா: கவிதையா? சும்மா கதை! 'காலிங்கார்டு'லே பேசறயா? சீக்கிரம் முடிச்சுடறேன். உங்கப்பா ரெண்டு ஜாதகத்தை வெச்சிண்டு அலையறார். ஒண்ணு உன்னுடையது. இன்னொண்ணு யாருதுன்னு சொல்லு பார்க்கலாம்?

குமார்: *(எரிச்சலுடன்)* ஏன்? அவருடையதா?

சிவப்ரியா : *(வியப்புடன்)* கரெக்ட்! எப்படிக் கண்டுபிடிச்சே?

குமார் : எங்க இரண்டு பேருக்கும் எதிலேயும் ஒத்துப் போகாது. நான் சாப்ட்வேர்னா அவர் வைரஸ்! நான் நிலான்னா அவர் ராகு! இரண்டு பேர் ஜாதகத்தையும் ஏதாவது ஜோஸ்யர்கிட்டே காட்டறாரோ என்னவோ?

சிவப்ரியா : ஃபன்டாஸ்டிக்! என் அப்பா என்ன செய்யறார்னு உனக்குத் தெரியுமா?

குமார் : எனக்கு ஜோஸ்யமா தெரியும்? லுக்! உன்னையே இன்டர்நெட் தயவினாலே கொஞ்ச நாளாத்தான் தெரியும். உன் அப்பாவைப் பத்தி நீ ஒண்ணும் சொல்லலையே...

சிவப்ரியா : கொஞ்ச நேரத்திலே லைன் கட்டாயிடும் இல்லே...? ஆமா, ஆபீஸ்லே ஏதோ ப்ரைஸா ஐந்நூறு டாலர் வாங்கினாயாமே? எதுக்கு?

மிக நல்ல விஷயம்!

மோதிரக் கையால் 'ஷொட்டு'!

மூதறிஞர் ராஜாஜியிடமிருந்து கிடைத்த பாராட்டும், ஆசியும்தான், ''கெட்டிக்கார இளைஞனாக இருக்கிறாய்! ஒருநாள் தமிழ்நாட்டு காவல் துறைக்கே ஐ.ஜியாக (அப்போது இன்ஸ்பெக்டர் ஜெனரல்தான் காவல் துறையின் தலைவர்) வருவாய் என அவர் ஆசிர்வதித்தது, சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து நிறைவேறியது.

அவர் பாராட்டியது எதற்காகத் தெரியுமா? 1970ல் தி. நகரில் இரவோடு

இரவாக பிள்ளையார் தோன்றி பரபரப்பூட்டியபோது, அது, ஒருசில காரணங்களால் மதக் கலவரமாக மாறும் அபாயமான சூழ்நிலை ஏற்பட்டது. அந்தத் தருணத்தில், தொல்பொருள் ஆய்வாளர்களின் உதவியுடன், திடீர் பிள்ளையார் சுயம்பு இல்லை; யாரோ உள்நோக்குடன் கொண்டு வந்து வைத்தது தான் என விஞ்ஞானபூர்வமாக நிரூபித்தேன். பிரச்னையை மிகத் திறமையுடன் சமாளித்து, மதக் கலவரம் ஏற்படாமல், தவிர்த்ததைத்தான் ராஜாஜி பாராட்டினார். அந்தப் பாராட்டுக்கு மேலான சிறப்பெதுவும் நான் பெற்றதாக நினைக்கவில்லை.



– வைகுந்த்

குமார்: *(குஷியுடன்)* அதுவா? அநாவசியச் செலவைக் குறைக்கிற ஐடியாவுக்கு ஆயிரம் டாலர் பரிசுன்னு எங்க கம்பெனி பிரசிடெண்ட் அறிவிச்ச மறுநாளைக்கே எனக்கு அந்தப் பரிசு கிடைச்சது. நான் குடுத்த ஐடியா : அந்தப் பரிசுப் பணத்தைப் பாதியா குறைக்கலாமேங்கிறதுதான்!

4

(சென்னையில் புத்தம் புதியதாகத் தோன்றியுள்ள ஒரு புத்தகக் கடையின் இணைப்பான காப்பி பார். ஆவி பறக்கும் 'கபுச்சினோ' கோப்பைகளுக்கு முன் ஒரு இளம் ஜோடி.)

சிவப்ரியா: ஒரு மாசத்திலே நடந்ததையெல்லாம் 'ஸ்க்ரால்' பண்ணிப் பார்த்தா தமாஷா இருக்கு இல்லே?

குமார் : என்னோட அப்பா 'லாட்டரி சிட்' பைத்தியம். தலைவலி போய் திருகுவலி வந்த மாதிரி அவர் இப்போ குரோர்பதி போட்டிக்கு மாறிட்டார்.

சிவப்ரியா: அவரோட ஜாதகத்தை அலசின எங்க அப்பா, 'உங்களுக்கு ஒரே ஒரு தடவை லாட்டரிச் சீட்டில் பரிசு விழும். அதற்கப்புறம் ஒரு பெரிய பரிசு வேறு காத்திருக்கு. ஆனால், அந்தப் பெரிய்ய்ய பரிசு கிடைக்கணும்னா லாட்டரியிலே விழுந்த பரிசை முழுசா சாமிக்குக் குடுத்துடணும்னு அருள்வாக்கு சொல்லியிருக்கார்.

குமார்: அதை வேதவாக்காக எடுத்துண்டு என் அப்பா, மதுரை பஸ் ஸ்டாண்டில் வாங்கின ஒரு லாட்டரிச் சீட்டை, பயங்கர நம்பிக்கையுடன் திருப்பதியில் சுப்ரபாத சேவையை முடிச்சுண்டு உண்டியிலே போட்டுட்டார். ரிசல்ட் வந்த மறுநாள் பேப்பரைப் பார்த்தால் பயங்கர ஷாக்! குபேரனோட கடனை அடைக்கிற திருப்பதி மகாக்ரோர்பதி பாலாஜிக்கு இரண்டு லட்சம் பரிசு. ஆடிப் போயிட்டார் அப்பா! உன்னோட அப்பா ஜோதிடப் புலியை, தன்னை நடுத்தரவர்க்கத்திலிருந்து விடுவிக்க வந்த விடுதலைப் புலியாக பாவித்து, மறு பேச்சில்லாமல் சம்பந்தியாக்இக் கொண்டதோடு, 'கௌன்பனேகா க்ரோர்பதி' நிகழ்ச்சிக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டார். இப்போ எங்க வீட்டில் இல்லாத பொது அறிவுப் புத்தகங்களே இல்லைன்னு சொல்லலாம்.

மூணு கண்ணுடைய சாமி எது? a. விஷ்ணு, b. சிவா, c. காளி, d. பிரம்மா போன்ற சிம்பிள் ஆயிரம் ரூபாய் கேள்வியிலிருந்து, சுதந்திரம் கிடைத்த நள்ளிரவில் லார்ட் மௌன்ட்பேட்டனின் இடதுபக்கத்தில் நின்று கொண்டிருந்தது யார்? a. நேரு, b. படேல், c. ராஜாஜி, d. எட்வினா போன்ற ஒரு கோடி வெய்ட் உள்ள பரிசுக் கேள்வி வரை 'கான்ஃபிடன்ட்டான' பதில் அவரிடம் ரெடி. ஒவ்வொரு 'சுபராத்திரி'யிலேயும் இத்தி வேற படிக்கிறார்.

சிவப்ரியா : திருப்பதி உண்டியிலே 'பரிசு விழும்' என்ற நம்பிக்கையோட டிக்கெட்டை உங்கப்பா போட்டதாலே வெங்கடேசப் பெருமான் என்ன செஞ்சிருக்கார் பார்த்தியா?

குமார் : என்ன செஞ்சிருக்கார்? லட்டு மாதிரி ஒரு பொண்ணை அவரோட பையனுக்குக் குடுத்திருக்கிறார்!

(இருவரும் சிரிக்கிறார்கள்)

அலை உறங்கும் கடல்

வாய் பிளந்து நின்றான் அருள்தாஸ்.

"பாரு, அங்க சண்டை நடக்கு. வெளச்ச நெலமெல்லாம் குண்டு போடுதான். பாக்டரி, கொடவுனெல்லாம் இளுத்து மூடி சீல் வெச்சாச்சு. உற்பத்தி இல்லே, வெளச்சலில்லே, பணப்புளக்கமும் இல்லேன்னா பிறவு மனுசன் என்ன பண்ணுவான்? அட, மனுசன் கெடக்கான், களியத் தின்னுக்கிட்டுன்னாலும் சண்டை போடுறவன் தெம்புக்குத் தின்னணுமில்ல? அவனுக்குக் கனடாவிலேருந்து பணம் வருதுன்னு பேசிக்கறாவ. பாலஸ்தீனத்துலேருந்து வருதுன்னு சொல்றாக. எப்பிடியோ வந்துட்டுப் போவட்டும். நமக்குந் தொழிலாச்சுன்னா சரிதான்'' என்றார் தானியேல் முதலாளி.

முதல் நாள் இரவு அருள்தாஸ், நாடாரின் டாக்கீஸுக்கு வந்திருந்த போது தயங்கித் தயங்கி, மிக கவனமாகவே விஷயத்தைச் சொன்னார் அவர்.

பா. ராகவன்

தானியேல் நாடாரின் டூரிங் டாக்கீஸின் பின்புறமிருந்த அவரது ஆபீஸ் அறையில் மருதனையும் ஜெபராஜையும் பார்த்த போது முதலில் அருள்தாஸுக்கு அதிர்ச்சியாயிருந்தது. 'டே, மவனுவளா, நீங்களா?' என்று கீழ்க்குரலில் தன் வியப்பை வெளிப்படுத்தினான்.

"இப்பந் தெரிஞ்சி போச்சில்ல? நானா கூப்ட்டு காட்டினாலொழிய ஒரு கொசு கூட அறியாது பார்த்துக்கிடுவ. நம்பளுக்குப் பணந்தேவ. அவனுக்குப் பொருளுக தேவ. அவங்கிட்டப் பணம் உண்டு. இங்க பொருளு வாங்க வசதி இருக்கு. தீந்து போச்சு விசயம்'' என்றார் முதலாளி.

"அருளு, இங்க டீசல் லிட்டர் என்ன வெலை?'' என்றான் ஜெபராஜ்.

"ஏன்? ஏழு ரூவா?''

"நூறு பர்செண்டு மேல கூட்டி மேலுக்கு ரெண்டு ரூவா வெச்சு பதினாறுக்கு வாங்கறான் அவன். அதை விடு. இச்சிலி சம்பா மூட்டை என்ன விலை?''

"ஆரு கண்டது?'' என்றான் அருள்தாஸ்.

"நானூத்தம்பது ரூவா வையி. மூட்டைக்கு ஏழு நூறு தரான் பார்த்துக்கிடு. பென் டார்ச்சு செல்லு வேணுமா? இருவது ரூவா. சக்கரை கிலோ முப்பத்தஞ்சு ரூவா. பெட்ரோல் லிட்டருக்கு நூறு ரூவா கூசாம தருதான் தெரியுமா?''


"பாரு, அவன் உரிமைக்குப் போராடுறான். நம்ம உதவிக்குக் கூலி கொடுக்கறேங்கறான். சட்டப்படி தப்புத்தான். ஆனா இங்க எது சட்டப்படி ஆவுதுங்கேன்? இங்க இருக்கற மீனுக்கார பயவுக ஒருத்தனானா எக்ஸ்ட்ரா டீசல் ஏத்திட்டுப் போயி நடுக்கடல்ல ட்யூபு போட்டு மாத்தினதில்லேன்னு சொல்லச் சொல்லு?''

''நாஞ்செஞ்சதில்ல மொதலாளி'' என்றான் அருள்தாஸ்.

"உன்னிய விட்ரு. உன்னமாதிரி இன்னும் ஏழெட்டுப் பத்து பேரு இருப்பானுவ, வெவரந்தெரியாதவக. ஆனா பொதுவுல நடக்கதென்னா? ஏன், நம்ம நேவி ஆபீசருங்களுக்கு இது தெரியாது? எல்லாந் தெரியும்! கண்டுங்காணாம இருக்கதெல்லாம் கவர்மெண்டே கத்துக் குடுக்கதுதான?'' என்று கண் சிமிட்டினார்.

''நா என்ன செய்யணும்?'' என்று அருள்தாஸ் கேட்டான்.

''வாரம் ஒருக்காதான். வெள்ளிக்கெழமை நைட்டு ஒம்பதடிச்சதும் கட்டுமரம் ஏறி குருசடையண்ட போயிரு. அஞ்ச எப்பவும் இஞ்சினில்லாம ஒடஞ்ச போட் ஒண்ணு குப்புறக் கெடக்



குமில்ல?''

''ஆமா? அரிச்சிப் போனதில்ல?''


''அதான். நம்முதுதான். மேலுக்கு உடசலாத் தெரிஞ்சாலும் ஸ்ட்ராங் போட்டு தான். டயத்துக்கு மருதன் வந்து இஞ்சின் மாட்டி விடுவான்...''

''நம்ம மருதனா!''

''சொல்லுதக் கேளு. உங்கூட ஜெபராஜும் வருவான்...''

''சாமீ...!''

''கேளுன்றனில்ல? ரெண்டு பேருமா பாம்பனைச் சுத்திக்கிட்டு இந்தால வந்து,




தனுஷ்கோடி கரை எட்டாம ஒரு இங்கிலீஷ் 'வி' போட்டு அந்தண்ட ஆறாந்திட்டு முட்டும் போவணும். மிச்சத்தை அவன் வந்து பார்த்துக்கிடுவான்."

"ஆரு?"

"ம்? அசலூரான்" என்று சிரித்தவர், "மூச்சு விட்றாத வெளில. ஒரு ட்ரிப்பு நீ போய் வந்தா ஏழாயிரம் உம் பங்கு" என்று சொன்னார்.

"ரோந்து போட்டு வருமே மொதலாளி?"

"எனக்குத் தெரியாதா?" என்று போலியாகக் கோபித்தவர், "அதெல்லாம் டைம் பார்த்துத்தாஞ் செய்வேன். எந்த போட்டு



"மெகா சீரியல் பரிசுக் கேள்வின்னாலும் இப்படியா கேட்பாங்க?"

"அப்படி என்ன கேட்டாங்க?"

"இன்று கதாநாயகி விட்ட கண்ணீர் எத்தனை லிட்டர்னு கேட்டுட்டாங்க!"

– தஞ்சை ராகவ், மகேஷ்

எப்ப, எங்க வரும்? அப்ப நாம்ப எங்க இருப்பம், அவன் எப்ப, எப்பிடி வருதான், சரக்கு மாத்தற டைம் எல்லாம் நான் பார்த்துக்கிடுதேன். நீ ஓக்கேன்னு மட்டுஞ் சொல்லு. வெளிய மூச்சு விடுறதில்லைன்னு அந்தோணியார் மேல சத்தியஞ்செய்யி."

"சொல்ல மாட்டஞ் சாமி!" என்று வாய் பொத்தினான் அருள்தாஸ்.

"ஆனா ஒண்ணு. நித்தியம் என்னால இது செய்ய முடியாது மொதலாளி. கொஞ்ச நாளைக்கிதான்" என்றான்.

"யார்றாவன்? நமக்கே ஆறு மாச காண்ட்ராக்டுதான்!" என்றவரை, வியப்புடன் பார்த்தான்.

"என்னா பாக்கே? ஒரே சப்ளையரை அவன் வெச்சுக்கறதில்ல. ஆறு மாசத்துக் கொருத்தன மாத்திக்கிட்டே இருக்கான். இப்பம் நானா? இன்னும் கொஞ்ச நாளிச்சி நாகைப்பட்டணத்தான் ஒருத்தன் முளைப்பான். அப்புறம் கடலூரு. ஒரு ரவுண்டு போய்ட்டு மறுபடி இந்தப் பக்கம் வந்தா வேறொருத்தன்..."

"அட்டேங்கப்பா" என்றான் அருள்தாஸ்.

"இதுவே லக்குதான். போன ரவுண்டு தூத்துக்குடில என் மச்சான் பிரெண்டு ஒருத்தனுக்குக் கொடுத்தாவ. அந்த கான்ட்ராக்டு! இப்பம் நமக்கு வாய்ச்சிது. மறுவடியும் சொல்லுதேன், மூச்சு விடப்படாது!"

"சேச்சே!" என்றான் அருள்தாஸ்.

குற்றம் குறித்த பய உணர்வும் உறுத்தும் கேள்விகளும் அவனைத் தின்றாலும் முதலாளி சொன்னபடி மறுநாள் இரவும் டாக்கீஸுக்கு வந்த போதுதான் அங்கே மருதனையும் ஜெபராஜையும் சந்தித்தான்.

"கவனமா இரு அருளு. நாளைக்கி நைட்டு ஒம்பதே காலுக்கு நீ கட்டுமரத்துல கிளம்பி, குருசடைத் தீவாண்ட வந்துரு. ஜெபராஜி தனியா வருவான். மருதன் மதியமே போயிருவான்..." என்றார் தானியேல் நாடார்.

"சரக்கு?" என்றான் அருள்தாஸ்.

"அது இன்னிக்கே அங்க போயிரும்" என்று சிரித்தவர், "உன்னை ஏன் கூப்டேன் தெரியுமா? உனக்கு உதவணும்னு ஒரு யோசனை. காம்ப்பஸ் கூட இல்லாம கரெக்டா திசை பாத்து போட்டு ஓட்றவன் நீயிங்கறது ஒரு காரணம்."

"அது உங்களுக்கு எப்பிடித் தெரியும் மொதலாளி?"

"மருதன் சொன்னான்" என்றவர், "அட்வான்சு வேணுமா?" என்று கேட்டார்.

"ஐயோ, வேணாம் மொதலாளி. மொத வாட்டி போறேன். முடிஞ்சதுமே பார்ப்பம்."

"அப்ப சரி" என்றார் தானியேல் நாடார்.

அந்த இரவு அது நடந்தது. புத்தி அறிய ஒரு குற்றம். நடுக்கடலில், கவிந்த இரவின் கருமைத் துணையில் இரண்டு காடா விளக்குகளின் உதவியுடன் ஆறு மூட்டைகள் அரிசி, ஐந்நூறு லிட்டர் டீசல், எண்ணிக்கை தெரியாத பாட்டரி செல்கள், ஒரு ஜெனரேட்டர், மேலும் என்னதென்று தெரியாமல் சீலிடப்பட்ட மூன்று பார்சல்கள்.

லுங்கித் துணியில் சுருட்டிப் பணம்

கொடுத்தார்கள். எவ்வித பரபரப்புமில்லாமல் நின்றபடியே மாடர்ன் ப்ரெட் சாப்பிட்டபடி அடுத்த தேவைகள் குறித்துச் சொல்லிவிட்டுக் கிளம்பிப் போனார்கள்.

போகும் போதிருந்ததை விடத் திரும்பும் போது அருள்தாஸுக்குப் பயம் மிகுந்திருந்தது. வாழ்நாளில் அத்தனை பணத்தை மொத்தமாக அவன் பார்த்ததில்லை. சாகும் வரை கூடப் பார்க்க முடியுமா என்பது சந்தேகந்தான் என்று நினைத்தான். பிளாஸ்டிக் வாளி விற்பவனிடம் வீட்டுப் பெண்கள் பழந்துணி மூட்டை எடுத்து நீட்டுவது போல நீட்டினார்கள், அந்தப் பணத்தை.

தானியேல் நாடார் சொன்னபடி ஏழாயிரம் தந்ததுடன் ''வீரன்டா நீயி!'' என்று தோளில் தட்டிப் பாராட்டிய போது பயம் கலந்த பெருமை மிகுந்தது அவனுக்கு.

எல்லாம் சற்று நேரந்தான். மாலை உமாவைச் சந்திக்க வழக்கமான முகுந்தராயர் சத்திரப் பாதையில் சைக்கிள் மிதித்துக் கொண்டு சென்ற போது, தன் விழிகளை ஊடுருவி அவள் குற்றத்தைக் கண்டுபிடித்து விடக்கூடுமென்று நினைத்தான்.

இயல்பாயிருக்க வேண்டுமென்ற நினைவே தன் இயல்புத் தன்மையைக் குலைத்து விடுவதை மானசீகமாக உணர்ந்தான்.

தான்தானா செய்தோம் என்கிற நினைப்பே இப்போது அவனுக்கு அச்சம் தருவதாயிருந்தது. அவசரத்தில், யோசனையின்றி ஒப்புக் கொண்டு விட்டோமோ என்று தோன்றியது. ஆனால் புதிய பணி என்று ஏதும் செய்யவில்லை. எப்போதும் போல இஞ்சினை இயக்கியது மட்டுந்தான். படகிலிருந்த பொருட்களைக் கூட அவர்களேதான் எண்ணி எடுத்து, மாற்றிக் கொண்டார்கள். ஒரு குற்றத்துக்கு உபயோகமான கருவிகளில் தானும் ஒன்றென இருந்திருக்கிறோம் என்பது மட்டும் உறுதியாக உறுத்திக் கொண்டேயிருந்தது. என்ன சமாதானம் யோசித்தாலும் அது மறையவில்லை.

எப்படியும் ஒரு லாஞ்ச் வாங்கியாக வேண்டுமென்கிற வெறி அவன் மூளையைக் கவ்வியிருந்தது. தொழில் மாற்றிக் கொள்ளலாம், உமாவை மணந்து கொண்டு மானாமதுரைப் பக்கமோ, பரமக்குடிப் பக்கமோ போய் கடை போடலாம், வாடகை சைக்கிள் கடை வைக்கலாம் என்றெல்லாம் யோசித்தாலும் உண்மையில், கற்பனையிலன்றித் தன்னால் அதெல்லாம் இயலாதென்றே பட்டது.

இயல்பு எப்படி மாறும்? குணம் எப்படி மாறும்? உமாவால் மீன் சமைக்க முடியுமா? கருவாடு காயப் போட ஒப்புக் கொள்வாளா? கூடையில் சுமந்து சென்று மார்க்கெட்டில் போடச் சொன்னால் முடியுமா அவளால்? தன்னால் மட்டும் எப்படி முடியும் இதெல்லாம்?

ஆனால் மனத்தின் மாய வலை வீச்சுக்குக் காதல் சங்கு அகப்படும்போது சிந்தனை எப்படிச் சிதறிப் போனது! புத்தியுள்ளவன் பொருத்தம் குறித்து யோசிக்க மாட்டானா? புத்திக்கும் காதலுக்குமேன் சம்பந்தமே இல்லாமல் போகிறது?



''திவாலா நிலையை நோக்கி நாடு ரொம்ப வேகமாப் போவுதுன்னு தோணுது...''

''எப்படி....?''

''யாரும் சிரிச்சாக் கூட 'தமாஷா வரி' கட்டணும்னு மன்னர் உத்தரவு போட்டிருக்கார்!''

– பாளை பசும்பொன்

மிகச் சிறியதொரு பொறி. பார்வையின் சூட்டிலேயே பற்றிக் கொண்டு விட்டது.

மேரியைத் தையல் வகுப்புக்கு சைக்கிளில் கொண்டு விடப் போன போது தான் அவன் உமாவை முதன் முதலில் பார்த்தான். பிறகு அவளைப் பார்ப்பதற்காகவே தினமும் மேரியை சைக்கிளில் கொண்டு விட்டான்.

புன்னகையில் தொடங்கிய பரிச்சயம். விசாரிப்புகளில் உருவான இணக்கம். மௌனங்களால் அரங்கேறிய நெருக்கம். பாவனைகளால் உணர்ந்த காதல். தூறல் விழுந்த மாலையொன்றில் அறிவித்துக்

மிக நல்ல விஷயம்!

காப்பாற்றிய கபடி மைதானம்!

நெல்லூரில் பள்ளிக்கூடம் படித்துக் கொண்டிருந்த காலம். 'பொக தோட்டா' பூங்காவில் கபடி விளையாடும் காக்கி நிஜார் இளைஞர் கூட்டம் ஒன்று என்னைக் கவர்ந்தது. விளையாட்டைப் பார்க்கப் போய் துர்கா பிரசாத் என்பவரின் அறிமுகமும் அவர் மூலம் ஆர்.எஸ்.எஸ். அறிமுகமும் கிடைத்தன. பெற்றோருக்கு இது துளியும் பிடிக்கவில்லை.



போகப் போக ஆர்.எஸ்.எஸ். கோட்பாடுகளின் உயர்வுகள் அப்பா–அம்மாவுக்கும் புரிந்து, பிடித்துப் போயின. துர்கா பிரசாத்தை நான் சந்தித்ததுதான் என் வாழ்வின் மிகச் சிறந்த விஷயம். இல்லாவிட்டால் வக்கீலாகி ஆந்திராவில் ஆயிரக்கணக்கான வக்கீல்களுள் ஒருவனாக இருந்திருப்பேன்.

— வெங்கையா நாயுடு

கொள்ளாமலேயே அவர்கள் காதலர்களாயினர்.

பிறகு சந்திப்புகள். சீண்டலும் தீண்டலுமாக நகர்ந்த நெருப்புக் கணங்கள்.

அருள்தாஸ் பெருமூச்சு விட்டான். உமா ஒருபோதும் தன் செயலை ஏற்கவோ, மன்னிக்கவோ மாட்டாள் என்று அவனுக்கு உறுதியாகத் தோன்றியது. விஷயம் தெரிந்த விநாடி முதல் தன் மூச்சுப்பட்ட காற்று கூடப் பரவிப் பட முடியாத தூரத்துக்கு ஓடிவிடக் கூடுமென்று நினைத்தான்.

படகு இழந்தும் வாழ முடிவது போல அவளை இழந்து பின் வாழ முடியுமா என்று சந்தேகமாயிருந்தது. இந்த ஒரு முறையோடு போதும் என்று நிறுத்திக் கொண்டு விடலாமா என்று நினைத்தான்.

ஏழாயிரம். ஒரு மாதத்துக்குக் கூட இந்த வருமானம் சாத்தியமானதில்லை, இதுகாறும் அல்வாப் பொட்டலமும் சேலையும் வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போன போது மேரி குதித்த குதி அவன் கண்முன் வந்தது. அம்மைக்குத்தான் எத்தனை சந்தோஷம்?

"ஏதுடா இத்தினிப் பணம்?" என்று அவள் விழி விரித்த போதுதான் அவள் முகத்தில் கூடப் புன்னகையைப் பார்க்க முடியுமென்று தெரிந்தது அவனுக்கு.

கடைத் தெருவுக்குப் போய், புதிதாகப் பாய்கள் வாங்கினார்கள். ஒரு டேபிள் ஃபேன் வாங்கினார்கள். அம்மைக்கொரு நைலக்ஸ் புடைவை எடுத்துக் கொடுத்தான். மேரி இரண்டு டஜன் கண்ணாடி வளையல்கள், வாங்கிக் கொண்டாள். அபிராமியில் சாப்பிட்டு விட்டு, இரவுக் காட்சி சினிமாவும் பார்த்து விட்டு வீடு திரும்பி முதல் முதலாக மின்விசிறிக் காற்றில் உறங்கிய போது சுகமாகத்தான் இருந்தது. ஆனால் உமா சம்மதிக்க மாட்டாள், ஒரு போதும்.

தன் கவனத்தை ஒரு பொருட்டாகக் கருதாமலே தன் பாதை மாறிக் கொண்டிருப்பதாக உணர்ந்தான் அருள்தாஸ். தப்புத் தண்டாவுக்குப் போகாதவன் என்று உமாவின் பாட்டி கூறியதை எண்ணிப் பார்த்தான்.

மனம் இன்னும் இதைத் தவறு என்றுதான கூறிக் கொண்டிருந்தாலும், வாழ்க்கை தொடர்ந்து செய்யவைத்துத்தான் தீரும் என்று தோன்றியது.

பயமும் குறுகுறுப்பும் பரவசமும் குழப்பமும் கலந்ததொரு உணர்வு நிலையில் அவன் உமாவை முகுந்தராயர் சத்திரத்தை ஒட்டிய சவுக்குத் தோப்பு முனையில் சந்தித்தபோது, அவள் மிகுந்த சந்தோஷத்தில் இருப்பதாகத் தோன்றியது அவனுக்கு.

"வா அருள். என் பாட்டி சொல்றா, இந்த வாரத்துக்குள்ள நாம கல்யாணம் பண்ணிக்காட்டா இனி ஆயுசுக்கும் நடக்காதாம். நீ சொல்லு. இன்னிக்கு வெச்சுக்கலாமா? நாளைக்கு வெச்சுக்கலாமா?" என்று கேட்டான்.

(தொடரும்)



கொட்டாம்பட்டிக்கு ஒரு கலெக்டராகத்தான் திரும்ப வேண்டும் என்ற உறுதியோடு ஐ.ஏ.எஸ் தேர்வில் தேறி, பயிற்சிக்காக டெல்லி செல்கிறார் அர்ஜுன். பயிற்சியின் முடிவில் ஓர் அதிர்ச்சி. அவர் ஒரு முன்னாள் கிரிமினல் எனக் காரணம் காட்டி, அவரது பணி நியமனத்தை நிறுத்தி வைக்கிறது அரசு.

அர்ஜுன் எப்படி கிரிமினல் ஆனார்? – அதுதான் கதை! காதல், பாசம், செண்டிமெண்ட் என பல வண்ணங்களைக் கலந்து ஃபாஸ்ட் புட் மாதிரி கொடுத்திருக்கிறார் மனோஜ்குமார். அதனால்தான் படத்திற்கு வானவில் என்று பெயர் வைத்தார்களோ என்னவோ? (வேறு காரணம் அறியோம் பராபரமே!)

ரயிலில் பிச்சையெடுக்கும் இளைஞனை வாரப் பத்திரிகைகள் விற்கச் செய்து அரைமணிக்குள் அவனை ஐடியல் பிஸினஸ்மேனாக்கும் அர்ஜுனைப் பார்த்து அதிசயிக்கும் அபிராமி, அர்ஜுனின் அறிவையும், திறமையையும் கண்டு காதலிப்பதாகக் காட்டுவது, 'கச்சடா' சினிமாக் காதல்களுக்கு மத்தியில் டபுள் ஓ.கே!

தஞ்சைத் தமிழ் தெரிந்த புதுமுகம் அபிராமி, மலையாளத்தில் நடிப்பு பயிற்சியெடுத்து, தமிழில் நிஜமாகவே நடித்திருக்கிறார். சிறையில் தன்னைச் சந்திக்க வரும் அபிராமியைப் பார்த்து, 'என்னை மறந்து விடு' என்று அர்ஜுன் சொல்ல, 'உன்னைக் காதலிச்சேன்னு நினைக்கவே வெட்கமாயிருக்கு' எனக் கொதித்து ஒரு புயலைப் போல் வெளியேறும் போது கம்பீரம்!

பிளஸ் டூ தேர்வில் தோற்றுவிட்டதாக நினைத்து தற்கொலை செய்து கொள்ளும் உமா படுசுட்டியாக நடித்து, 'யார் இவர்?' எனக் கேட்க வைக்கிறார். திறமையான நடிகை இந்துவை, ஜூனியர் ஆர்ட்டிஸ்ட் போல இரண்டு காட்சிகளில் மட்டும் ஏன் காட்டினார் என்பது இயக்குனருக்கே வெளிச்சம்.

ஐ.ஏ.எஸ். படிக்கும் மகனுக்கு, பேனா வாங்க கடைக்குச் செல்லும் மணிவண்ணன், பேனா சரியாக எழுதுகிறதா என பார்க்க, நிப் முனையிலிருந்து கட்டை விரலில் மை தடவி அதை கைநாட்டாக வைத்துப் பார்த்து திருப்தி அடைகிறபோது சிரிப்பலை.

அர்ஜுனின் புஜபலத்தை அளவுக்கு அதிகமாகவே பயன்படுத்தியிருப்பது பி,சி ரசிகர்களுக்குக் கூட எரிச்சலூட்டலாம்.

ஆக்ராவின் அழகையும், குளுகுளு கோத்தகிரியின் பசுமையையும் கலைக்கண்ணோடு பார்த்திருக்கிறது கார்த்திக்ராஜாவின் கேமிரா. தேவா – வைரமுத்து கூட்டணியின் டெபாசிட் தப்பி விடுகிறது. அரட்டை அரங்கம் பார்த்து நீதிபதி தீர்ப்பு சொல்லுவதாகக் காட்டுவது மில்லெனிய ஜோக்.

மணிவண்ணன் காமெடியில் விட்டதை பிரகாஷ்ராஜ் அனாயாசமாகக் கைப்பற்றியிருக்கிறார். ஒரு ஐடியல் பணக்கார இளைஞராக அறிமுகமாகி, அபிராமியின் காதலுக்காக, மெல்ல மெல்ல வில்லனாக மாறுவதை. சிறப்பாகச் சித்திரித்தமைக்காக, இரண்டாவது பாதியில் படம் கொஞ்சம் இழுவையாகி விட்டதை மன்னித்து விடலாம்.

— விஷ்ணுவல்தாசன்

நடக்குமென்பார்

அக்னிசர்மா பக்கம்



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

கிரக சஞ்சாரம் ரூட் சரியில்லாததால சஞ்சலம் இந்த வாரம் கியாரண்டியாக உண்டு. ஆதலால் நிதானமும் தேவை. புருஷன் / பெண்டாட்டிகிட்டே எரிஞ்சு விழறாப்பல மத்தவங்ககிட்டே விழுந்துடாதீங்க. வாயை விட்டுடக்கூடாத வாரம் இது. ஆபீஸ் போறவங்க வழக்கத்தைவிட உடம்பை அலட்டிக்கிட்டு வேலை செய்யணும். சினிமா, நாட்டிய, இசை கலைஞர்களை வெற்றி தேடி வரும். இந்த ராசிக்காரங்க யாரும் அசலூர் போக இது நல்ல நேரம் கிடையாது. ஒரு சிலர் சொத்து வாங்கலாம். வேறு சிலர் அப்பாவுக்கு உடம்பு படுத்தும். இந்த ராசி ஆண்களுக்குப் பெண்களால் நன்மை உண்டாகும். நம்புவீங்களா? நம்புங்க! சாதுக்கள், மகான்கள் தரிசனத்தினாலும் நன்மை ஏற்படலாம்.



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

கம்ப்யூட்டர் துறையைச் சேர்ந்த இந்த ராசிக்காரங்களுக்கு இது ஏறுமுகமான வாரம். பொதுவாகவே இந்த ராசிக்காரங்களுக்குச் சொல்லிக்கற மாதிரியான நல்லது நடக்கும். ஆனால் வரவுக்கும் செலவுக்கும் சம்பந்தமில்லாம ரொம்ப கஷ்டப்படுத்தும். குடும்பத்துப் பேர்ல ஒரு கண் இல்லை; இரண்டு கண் வைச்சுக்குங்க! அதே போல வாயை (அதாவது சாப்பாட்டு விஷயத்துல) கட்டிப் போடுங்க. இந்த வாரம் அலைச்சல் அதிகமாயிருக்கும். ஆனால், பயணம்னா முடிஞ்சவரை தவிர்க்க முயற்சி பண்ணுங்க. இயந்திரங்களோட தினமும் உறவாடறவங்க எச்சரிக்கையா இருக்கணும். சபலங்களுக்கு இடங்கொடுக்கவே கொடுக்காதீங்க. அப்புறம்... மூச்சைப் பிடிச்சுக்குங்க... கணவனுக்கு மனைவியாலும், மனைவிக்குக் கணவனாலும் நன்மை நடக்கும்!




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

திட்டப்படி எல்லாமே நடக்கக் கூடிய வாரம் இது. வெளிநாட்டுப் பயண வாய்ப்பு, போட்டி பந்தயங்களில் வெற்றி, குழந்தைகளால் நன்மைன்னு எக்கச்சக்கமான பாஸிடிவ் விஷயங்கள். ஆனால்... தம்பதியரிடையே உறவு சீராயிராது. லைஃப் பார்ட்னர் போல் பிஸினெஸ் பார்ட்னராலும் பிரச்னை வரும். ஆதலால் பார்ட்னர்ஷிப் பிசினஸ் நடத்தறவங்களுக்கு இது எச்சரிக்கை வாரம். பெண்களுக்கு மட்டும் அவ்வளவாக பாதிப்பு இருக்காது. ஆண் பிள்ளைச் சிங்கங்கள் கர்ஜனையை யெல்லாம் விழுங்கிவிட்டு நிதானமாய் எதையும் செய்ய வேண்டும். பிரார்த்தனை மூலம் மன அமைதி தேடிக்குங்க. முடிஞ்சா தான-தர்மம் செய்யுங்க.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

முதல்ல கண்ணாடியில பாருங்க- உங்க முக வசீகரம் மேட்டூர் அணையில் தண்ணி மாதிரி ததும்பிக்கிட்டிருக்கா! எதிர்ப்பெல்லாம் குறைஞ்சு உற்றாரும் நட்பும் உதவிக்கு வரப் போகிற வாரமிது. பெயர், புகழ், முன்னேற்றம்ங்கற த்ரீ இன் ஒன் வாரமாய் இது உங்களைத் திக்குமுக்காட வைக்கும். மனத் துணிவும் நம்பிக்கையும் அதிகரிக்கக் கேட்பானேன்! 'டப்பு' விஷயத்துலதான் கொஞ்சம் கவனமாயிருக்கணும். ஆனால் இந்த வாரம் அலைச்சல் ட்ரில் வாங்கும்!



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்களுக்கே நல்ல நிர்வாகத்திறன் உண்டு. அதோட போனஸா அரசாங்கத்திடம் எதிர்பார்த்திருந்த ஒத்துழைப்பும் சேர்ந்துகிட்டா... எல்லாம் நன்மைக்கே! இந்த வாரமும் தீபாவளி மாதிரி உற்சாகமா, புதுத் துணி, அலங்காரப் பொருள்னு வந்துசேரும். உல்லாசமா இருப்பீங்க. சினிமா கினிமா பார்க்கற வாய்ப்பு உண்டு. சிவப்பு, பொன்நிறம் - இரண்டும் ரொம்ப உதவும். அன்னியர்கள்கூட உதவுவாங்க. விவசாயிகளுக்கும் தொழிலாளிங்களுக்கும்தான் கொஞ்சம் பிரச்னை இருக்கும். இவங்க மட்டும் கேளிக்கை பக்கம் போயிடாம கவனமாயிருக்கணும். வயிற்று வலி வரலாம். ஆனாலும் சுமுகமாய் இருங்க.




கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


எந்தப் பக்கம் திரும்பினாலும் ஸ்பீட் பிரேக்கர்ங்க உங்களுக்கு! ஆனா சின்ன ஸ்பீட் பிரேக்கர் என்பதனால விபத்து இராது- இந்த ராசியில் கடல் வாணிபம் செய்றவங்க இருந்தா அவங்களுக்கு ஆதாயம். கலைத் துறையில உள்ளவங்களுக்கு சுக்ரன் உதவி இருக்கு- அரசாங்கமும் அப்பாவின் உடம்பும் படுத்தும்! ஆபீஸிலும் தொழிலிலும் சோதனைகள். விழிப்போட இருங்க.

நடக்கும்!

பெரியவங்க சொல்றதைக் கேட்டு நடங்க. ரொம்ப யோசிச்சு செயல்பட்டா கொஞ்சம் பிழைப்பீங்க.



துலாம் : (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை) உங்ககிட்டே என்னென்லாம் நல்ல குணம் இருக்கோ, அதெல்லாம் ஓர் உச்சத்தைத் தொடும். குடும்பத்தில் சுப காரியம், விருந்து, வீட்டுக்குச் சாமான்கள்னு புதுசா மகிழ்ச்சி ஏற்படும். ஆனால் அலைச்சல், உடல் அசதி, சோர்வும் கூடவே உண்டு. கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. என்ன நடந்தாலும் விவேகத்தை விட்டுடாதீங்க.



விருச்சிகம் : (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய) எல்லாரும் பாராட்டுகிற மாதிரி சாதனைகள் செய்யப் போறீங்க. செவ்வாய் அனுகூலமாக இருக்கிறார். ஆசை, அபிலாசை, எல்லாம் அவசர அவசரமா நிறைவேறப்போகுது. கோர்ட், வழக்குன்னு முட்டுக்கட்டைபோட்ட விஷயங்களெல்லாம் ஆவியாப் போய்டும்! சுபிட்சம் பெருகும். என்ன தமிழ் சினிமால வர கடைசி சீன் மாதிரியிருக்கேன்னு பார்க்கறீங்களா? இதோ கொஞ்சம் மைனஸ் விஷயங்கள்: குடும்ப நலத்தை அலட்சியப் படுத்தாதீங்க. குறிப்பா, அப்பாவைப் பார்த்துக்குங்க. பயணம் வேண்டாம். புது மனிதர்களிடம் ஜாக்கிரதையா இருங்க. இந்த வாரம் புது நட்பு எதுவும் வேண்டாம்.



தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை) வேலை செய்யற இடத்துல உயர்வுகள், அங்கீகாரம் எல்லாம் காத்திருக்கு உங்களுக்கு. அது தவிர கூடப் பிறந்தவங்களால வேற நன்மை. தர்ம காரியங்களிலும் தெய்வ காரியங்களிலும் உங்க ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரம் பண்றவங்களுக்கும் நல்ல நேரம் இது. அயல் நாட்டுத் தொடர்பு இருந்தால் அதன் மூலமா ஆதாயம் உண்டு.



மகரம் : (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை) இந்த வாரத்தின் பிற்பகுதியில் சுப காரியங்களில் பங்கேற்கிற சந்தர்ப்பம் கிடைக்கும். இந்த ராசிக்கார அரசியல்வாதிகளுக்கு நல்ல காலம். மாணவர்களுக்கு வெற்றி நடை. கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்குச் சுபிட்சம். கமிஷன் வியாபாரிகளுக்குக் கூடுதல் லாபம். விஞ்ஞானம் - கம்ப்யூட்டர் துறையினருக்கு வளர்ச்சி, இயந்திர, இஞ்சினியரிங் பணியாளர்களுக்குச் சோதனை! அவசரப்படேல்! நிதானம் கடைபிடியுங்கள். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் பலன் உண்டு.



கும்பம் : (அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை) மன்னிக்க வேண்டும் நண்பர்களே. இந்த வாரம் நல்ல பலன் சொல்வதற்கில்லை. மனக் குழப்பம், நிம்மதியின்மை வாட்டும்; அரோக்கியமும் வேலை நிறுத்தம் செய்யும்; உழைப்பை அதிகம் வாங்கும் இந்த வாரம். அதற்காக குறுக்கு வழி எதையும் நாடாதீர்கள்! நேர் வழியை நாடினால் பிரச்னைகள் குறையும். கணவன் - மனைவி இடையேகூட பிரச்னைதான். இந்த வாரம் பக்குவமா நடந்துக்குங்க. உறவும் நட்பும் உரசல்களால் சோதனைக்குள்ளாகும். விவேகத்தோட இருங்க. சித்த புருஷர் யாரையேனும் தியானம் செய்யுங்க!

துலா ராசிக்காரரான பரத்வாஜுக்கு சுபகாரியம், விருந்து என்று மகிழ்ச்சி ஏற்படுமாம்!





மீனம் : (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய) இந்த வாரம் மனத் துணிவும் தன்னம்பிக்கையும் வெளிப்படும்ன்றதால் வேற என்ன வேணும்னு நீங்க கேட்கலாம். அசந்தீங்கன்னா அலைச்சலும் உடல் சோர்வும் உண்டாகும் ஜாக்கிரதை. கலைத்துறையினருக்கு சுபிட்சம், விளையாட்டு - விநோதங்களில் ஈடுபடறவங்களுக்கு முன்னேற்றம்னு பெரும்பாலும் நல்லதே நடக்கும். எதிர்ப்புகள் மறையும். பெண்களின் நோக்கம் நிறைவேறும். சுபகாரியம் கூட நடக்கலாம். ரொம்ப மெய்மறந்துடாம கொஞ்சம் வேதாந்த விசாரத்துல ஈடுபட்டு எச்சரிக்கையா இருங்க.

இல.கணேசன் பேட்டி



? திருச்சி பாராளுமன்றத் தொகுதியின் இடைத் தேர்தலை, வரும் சட்டமன்றத் தேர்தலோடு நடத்த மத்திய அரசு விரும்புகிறதா?

அரசாங்கத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், பிஜேபி மத்திய தலைமையும் மாநிலத் தலைமையும் தமிழக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தி.மு.க தலைவரும் அப்படித் தான் விரும்புகிறோம்.

? இடைத் தேர்தல் உறுதியென்றால் இங்கே யார் நிறுத்தப்படுவார்கள்? நீங்கள் போட்டியிடும் உத்தேசம் உண்டா?

பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த, பாரதிய ஜனதா கட்சியில் ஏற்கெனவே இருப்பவர் ஒருவர் நிறுத்தப்படுவார். நிச்சயமாக அது நான் அல்ல.

? டான்சி தீர்ப்பின் மூலம் பின்னடைவு ஜெயலலிதாவுக்கா? அதிமுகவுக்கா?

அதிமுக வேறு, ஜெயலலிதா வேறு எனப் பிரித்துப் பார்க்கக் கூடிய நிலையில் அந்தக் கட்சி இல்லை.

? பா.ம.க. மதில் மேல் பூனையாக இருந்து வரும் நிலையில் கருணாநிதி - மூப்பனார் நட்பு முறிவு பற்றி பிஜேபி வட்டாரத்தில் எழுந்துள்ள எதிரொலி என்ன?

பா.ம.க.வினர் கூட்டணிக்குள் இருந்துகொண்டே தி.மு.கவை பகிரங்கமாக விமர்சனம் செய்கிறார்கள் என்கிற ஒரே காரணத்தால் அவர்கள் மதில் மேல் பூனையாக இருக்கிறார்கள் எனச் சொல்வதை நான் ஏற்கவில்லை. பா.ம.க. தேசிய ஜனநாயகக் கூட்டணியில்தான் அங்கம் வகிக்கும். ஆனால், கூட்டணிக்குள் அங்கம் வகிக்கிற கட்சிகள் தங்களுக்குள்ளே பகிரங்கமாக விமர்சனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதனை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

? நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பதில் தமிழக - கர்நாடக அரசுகள் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு, உச்ச நீதி மன்றத்தின் நிலைப்பாடு குந்தகம் ஏற்படுத்திவிட்டது என்பதை ஏற்கிறீர்களா?

தற்போது காட்டுக்கும் கோர்ட்டுக்கும் இடையே மோதல் நடைபெற்று வருகிறது. சட்டம் என்ன சொல்கிறது என்பதை நீதி மன்றம் வலியுறுத்துகிறது. ஆனால், இரு மாநில அரசுகளும் யதார்த்த நிலையை மனத்தில் வைத்து நடவடிக்கை எடுக்கும்போது அது சட்டத்தின் நிலையோடு ஒத்துப் போகாமல் இருக்கலாம். ராஜ்குமார் விஷயத்தில் நடந்து வரும் சம்பவங்கள் மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. ஆனால், தவிர்க்க இயலாது என்பதை ஒப்புக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனை முடிவு செய்வது கடத்தப்பட்டவர்களும், கடத்தப்பட்டவர்களின் உறவினர்களும் எந்த மன நிலையில் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது.

? அயோத்தியில் ராமர் கோயில் கட்ட எதிர்ப்பு தெரிவிக்கும் எந்த அரசும் பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடுமென மத்திய அரசுக்கு ஒரு எச்சரிக்கையாக ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுரேஷ் ராவ் ஆக்ராவில் செய்தி

“கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பதில்லை!”

யாளர்களிடம் கூறியுள்ளாரே...?

அயோத்தியில் ராமர் கோயில் வர வேண்டும் என்பது இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிற பெருவாரியான இந்துக்களின் விருப்பம். அந்த விருப்பத்திற்கு மாறான எண்ணங் கொண்ட கட்சிகள் மக்கள் எதிர்ப்பை சம்பாதிக்க நேரிடும் என்பதும் உண்மை. இதைத் தான் ராவ் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதில் எந்தத் தவறுமில்லை.

? வெளிநாட்டுத் திருச்சபைகள் இந்திய மண்ணில் செயல்பட ஏன் அனுமதிக்கிறீர்கள் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் கே.எஸ். சுதர்ஸன் கேள்வி எழுப்பியிருப்பது, சிறுபான்மை கிறிஸ்தவ மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுத்தாதா?

பாரத நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் பரவி வரும் தீவிரவாத செயல்களின் பின்னணியில் இருப்பவர்கள் அன்னிய நாட்டு கிறிஸ்தவ மிஷனரிகள்தான். தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் எவரையும் புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்தினை தேச பக்தர்கள் அனைவரும் - அவர்கள் எந்த மதத்தினராக இருந்தாலும் சரி ஏற்பார்கள் என்பது திண்ணம். நாட்டுக்குக் குந்தகம் விளைவிப்பவன், ஆக்கிரமித்தவன், தன் மதத்துக்காரன் என்கிற ஒரே காரணத்துக்காக அவனை ஆதரிக்க முயல்வது தேச நலனுக்கு ஆபத்தானது. அவர் இந்துவாக இருந்தாலும் சரி; அவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி; அவர் கிறிஸ்துவராக இருந்தாலும் சரி.

நக்சலைட்டுகள், விடுதலைப் புலிகள் ஆகியோருள் பெருவாரியானவர்கள் இந்துக்களே! அதற்காக, அவர்கள் இந்து என்கிற ஒரே காரணத்துக்காக, நாங்கள் அவர்களைக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பதில்லை. இதே மனப்பான்மை இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்க வேண்டும் என்பதுதான் நமது விருப்பம்.

? வரும் சட்டமன்றத் தேர்தலில் புதிதாக உங்கள் அணியில் ஜாதிக் கட்சிகளை இணைத்துக் கொள்வீர்களா?

ஜாதி அடிப்படையில் உருவான கட்சிகள் ஏனைய பிரதான கட்சிகளாலும் பொது மக்களாலும் புறக்கணிக்கப்பட வேண்டும் என நாங்கள் தீர்மானமே நிறைவேற்றி இருக்கிறோம்.

? மக்கள் தொகையில் கணிசமான எண்ணிக்கை பலம் கொண்ட ஜாதிச் சங்கங்கள் சமீப காலமாய் அரசியல் கட்சிகளாக அவதாரம் எடுத்து வருகின்றனவே...

அரசியல் கட்சிகளாக அவதரிக்கின்றன என்பது உண்மை. ஆனால், கணிசமான அளவு பொது மக்கள் ஆதரவு இருக்கிறது என்பது பொய்.

? ஓராண்டு பிஜேபி ஆட்சியின் சாதனை பட்டியலில் சாதாரண மக்களையும் பாதித்திருக்கும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வும் உண்டுதானே...

ஆம். ஆனால், அது தவிர்க்க இயலாது என்பதனையும் நமது அடுத்த தலைமுறை பயன் பெறுவதற்காகச் செய்யப்பட்டது என்பதையும் மக்களுக்கு உணர்த்தும்போது மக்கள் அதனை ஏற்றுக் கொள்கிறார்கள்.

? பிஜேபி மூலமாக அரசியல் பணி; ஆர்.எஸ்.எஸ். மூலமாக சமூகப் பணி என்று கூறுகிறீர்கள். இதை ஓர் அச்சுறுத்தலாகவே பலர் காண்கின்றனரே...?

இன்றைக்கு அரசியல் களத்தில் ஏனைய கட்சிகளோடு ஒப்பிடும்போது ஓரளவுக்கு உயர்ந்த குணங்களைக் கொண்டிருக்கிற தலைவர்களைக் கொண்ட கட்சியாக பாரதிய ஜனதா இருக்கிறதென்றால் அந்தப் பெருமையெல்லாம் ஆர்.எஸ்.எஸ்.ஸைத்தான் சாரும். ஒரு தனி மனிதன் முறையாகச் செயல்பட மூன்று அமைப்புகள் உறுதுணையாக இருக்க வேண்டும். முதலாவது வீடு. இரண்டாவது கல்வி நிலையம். மூன்றாவது ஆலயம். துரதிருஷ்டவசமாக இந்த மூன்றுமே கடமையைச் சரியாகச் செய்யாததால் தனி மனித ஒழுக்கம் பாதிக்கப்படுகின்றது. இந்த மூன்றின் பணியையும் ஒருங்கே செய்கின்ற அமைப்புதான் ஆர்.எஸ்.எஸ். இதில் அச்சுறுத்தல் எங்கே வந்தது!

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



• சுஜிதா



• ரமணி

சுஷ்மா பார்க்கணுமடுக்கும்

ப்ரிவியூ முடிஞ்சி, தியேட்டரைவிட்டு சக்கரம் வெளியே வந்ததும் லபக்குன்னு பிக்அப் பண்ணிக்கினேன். பார்ட்டி கம்முன்னு வந்தது. இன்னாப்பா... எதனாச்சும் மவுனவெரதமான்னு கேட்டேன். இல்லே உண்ணாவிரதம்ன்னு சக்கரம் சொன்னதும் டபக்குன்னு வண்டியை நிறுத்தி சக்கரத்தைப் பார்த்தேன். பல நாள் சாப்பிடாத பரதேசி கணக்கா கண்ணு ரெண்டும் பஞ்சடச்சிப் போயி பாக்கவே பரிதாபமா இருந்துச்சி. வூட்டாண்டை சண்டை கிண்டை போட்டுட்டு சோறு துன்னலியான்னு கேட்டதும், சக்கரத்துக்கு மூக்குமேல கோபம்! 'அடப் போய்யா! அக்டோபரு இருவதாம் தேதிலேர்ந்து, புகழேந்தி தங்கராஜ்ன்னு ஒரு புது சினிமா டைரக்டரு பட்டினி கிடந்து, சாகிற நிலையில இருக்காரு'ன்னு சொன்னதும் எனக்குத் தலையும் புரியலே வாலும் புரியலே...! சக்கரமே மேட்டரை ரிலீஸ் பண்ணிச்சு. "இப்போ நான் 'காற்றுக்கென்ன வேலி'ங்கிற படத்தைத்தான் பார்த்துப்புட்டு வர்றேன்... நம்ம ஊருல இருக்கிற லோக்கல் சென்சார், அப்புறம் டெல்லியிலே இருக்கிற டிரிபூனலு கமிட்டி எல்லாம் தடை செஞ்சிருக்கிற படம்ன்னு சொன்னதும் நான் முந்திகினு அப்புடி இன்னாப்பா அந்தப் படத்துலே இருக்குன்னேன்... அதான் எனக்கும் புரியலே... முன்னாடி சந்தோஷ்சிவன் டெரரிஸ்ட்ன்னு ஒருபடம் எடுத்தாரு. அதுலே இலங்கையிலேர்ந்து வர்ற ஒரு பெண் போராளி கர்ப்பமாயிடுறா. மறுபடியும் களத்துக்குப் போகவேண்டிய நிலையிலே கர்ப்பத்தைக் கலைச்சுடலாம்னு முடிவு பண்றா... ஆனா அவளுக்குள்ளே இருக்கிற அம்மா விடமாட்டேங்கிறா! அந்தப் படம் கூட ராமேஸ்வரத்துல நடக்குற மாதிரி சந்தோஷ்சிவன் எடுத்திருந்தாரு..."

சக்கரம் சொன்னதும் நான் ஊடால தலைய வுட்டேன். "அதுக்கும் இப்போ பார்த்துட்டு வர்ற படத்துக்கும் இன்னா கனெக்ஷன்?"

"காற்றுக்கென்னவேலி படத்துல தாய்மைக்குப் பதிலா காதல்... இலங்கைப் போராட்டத்துல கால் அடிபட்டு வேதாரண்யத்துக்குச் சிகிச்சைக்கு வர்றாங்க ஒரு பெண் போராளி. அவங்க உயிரைக் காப்பாத்தி, சிகிச்சை கொடுக்குற டாக்டருக்கும் அவங்களுக்கும் காதலு.... விவரம் தெரிஞ்சி டாக்டரை போலீசு நொங்கு நொங்குன்னு நொங்குது. கடசிலே சிகிச்சை முடிஞ்சு, காதலி... ச்சீ.... போராளி இலங்கைக்குப் போயிடுறாங்க... டாக்டரு தேம்பித்தேம்பி அழுவுறாரு."

–சக்கரம் அழாத குறையா சொன்னிச்சு. இதுலே இன்னாப்பா காண்டராவர்சின்னு கேட்டேன். இலங்கை, வேதாரண்யம்னு டைட்டில் போடுறாங்க. கொஞ்சம் கொஞ்சம் இலங்கைத் தமிழ் பேசுறாங்க. மத்தபடி இந்தப் படத்தை ஒரு கவிதை மாதிரி டைரக்டரு எடுத்திருக்காரு....'போராளி'ங்கிற வார்த்தையத்தான் பயன்படுத்தியிருக்காரு... விடுதலைப் புலி, டெலோ இதுமாதிரி ஒரு வார்த்தையும் படத்துலே இல்



லேன்னு சக்கரம் சொன்னதும்... அப்பாலே படம் வருமா இல்லே குற்றப்பத்திரிகை மாதிரி ஆயிபூடுமான்னு கேட்டேன்...

வர்ற பன்னிரண்டாம் தேதி மத்திய செய்தி ஒளிபரப்பு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் படத்தைப் பார்க்க ஒத்துக்கிட்டு பேக்ஸ் கொடுத்துருக்காங்க. ஆனாலும் டைரக்டர் எனக்கு பேக்ஸ் வல்லேன்னு ஆஸ்பத்திரிலே பட்டினி கிடந்து சாகுறாருன்னு சக்கரம் உணர்ச்சிவசப்பட்டது.

செய்தி கொடுக்கிறதோட நிறுத்திக்க. சும்மாகாட்டியும் பிலிம் காட்டுறதை வுட்டுடுன்னு சொன்னதும் பார்ட்டி கம்முன்னு ஆயிடுச்சி... அப்பாலே ஆபிசு வர்ற வரைக்கும் பெண் போராளியா நம்ம சுஜிதா என்னமா நடிச்சிருக்குன்னு சக்கரம் புலம்பிக்கிட்டே வந்தது.

அக்டோபர் இருவத்தி இரண்டாம் தேதி ஹிந்தி பிரசார சபாவுல ஆனந்த தீபாவளி. சக்கரம் இட்டுக்கினு போன ஒரு உருப்படியான பங்ஷன். கண்ணு தெரியாத, காது கேக்காத, வாய்பேச முடியாத, காலு ஊனமுற்ற, மனவளர்ச்சி குறைஞ்ச இரண்டாயிரம் குழந்திங்க... எல்லா பேத்துக்கும் புது டிரஸ், பலகாரம், மூணுவேளை சாப்பாடுன்னு ஒரே அமர்க்களம். உண்மையிலே ஆனந்த தீபாவளிதான். இதை ரெண்டாவது வருஷமா நடத்துறது சரவணா ஸ்டோர்ஸ்காரங்க. விழா முடியுறபோது எல்லா பிள்ளைகளையும் வெடி வெடிக்கக் கூப்பிட்டாங்க. ஆனா அந்தப் புள்ளைகள் எப்படி வெடிக்கும்? பாவம் எல்லாத்தையும்

தமிழ்ப்படம்!

பெரிய ஆளுங்கதான் கொளுத்திவிட்டாங்க.

தமிழ்நாடு தீ அணைப்புத் துறை இயக்குனராண்ட இருந்து அவசரமா போன் வந்துகிது... உடனே வண்டிய எடுன்னு சொன்னதும் தீ வண்டி கணக்கா பாய்ஞ்சு போனோம்... அப்பாலே இயக்குனரு ரமணி ஐ.பி.எஸ்., இந்த வருஷம் தீவாளிக்கு எத்தனை வீடு எரிஞ்சது? ஏன் எரிஞ்சதுன்னு கணக்குக் காட்டத் தான் கூப்பிட்டேன்னாரு...



• உண்ணாவிரதம்

1998 தீபாவளிக்குத் தமிழ்நாடு முழுக்க 958 விபத்து நடந்தது... போன வருஷம் 602. இந்த வருஷம் இது நாநூறாகக் குறைஞ்சு போச்சின்னு சொன்னதும் சக்கரம் ஆன்னு ஆச்சர்யத்துல வாயைப் பிளந்திட்டுது.

"இந்த வருஷம் தமிழ்நாட்டுல இருக்கிற எல்லா பள்ளிக் கூடத்துக்கும் டப்பாசு (பட்டாசு) கொண்டுகினு போயி எப்படி வெடிக்கணும்ன்னு வெடிச்சுக்காட்டி ஒரு குட்டி தீபாவளியே நடத்திக்காட்டுனோம். பசங்களுக்குத் தீ விபத்து பத்தி, கட்டுரை, கவிதை, பேச்சு, ஸ்லோகன் போட்டி நடத்தினோம். அதுக்கு நல்ல பலன்"னு சொன்னாரு இயக்குனர்.

சென்னையிலே மட்டும் எத்தினி விபத்துன்னு சக்கரம் கேட்டது... எழுபத்து ஏழு! இது எல்லாமே மொட்டை மாடியிலே போட்டிருந்த கூரை செட்டு தான்னு ரமணி சொன்னாரு... அப்பாலே ராக்கெட்டை கவருமெண்ட் தடை பண்ணினாலே தீபாவளி தீவிபத்துக்கு குட்பை சொல்லிப்புடலாம்னாரு... நாங்க அவருக்கு குட்பை சொல்லிட்டு வந்துட்டோம். ஆனா ராக்கெட்டைத் தடை பண்ணாம விட மாட்டேன்னு ரமணி சாரு பேசிக்கிட்டே இருந்தது ரோடு வரைக்கும் கேட்டுது.

— மீண்டும் சந்திக்கும்வரை,
மீட்டருக்குமேல் கேட்காத ஆட்டோ செல்வம்





தமிழ்நாட்டில் உடன்பிறவா சகோதரி என்றால் என்ன பண்ணுவார்கள்? சொத்து வாங்கிக் குவிப்பார்கள்; வழக்குகளைச் சந்திப்பார்கள்; தண்டனை பெறுவார்கள்; அப்பீலுக்குப் போவார்கள். ஆனால், ப்ரியதர்ஷன் படத்தில் வரும் உ.பி.சவான ஜோதிகாவும், சர்பானி முகர்ஜியும் வித்தியாசமானவர்கள்.

இரண்டு ஆண்கள் நெருங்கிய ஸ்நேகிதர்களாக இருந்தால், இரண்டு பேருடைய திருமணம் நடந்த பின்னும் கூட அவர்களுக்கு இடையிலான நட்பு தொடரும். இருவருக்கும் இடையிலான நட்பு, இரண்டு குடும்பங்களுக்கு இடையிலான நட்பாக வளரும். ஆனால், இந்தச் சமுதாயத்தில், இரண்டு பெண்களுக்கு இடையிலான நட்பு, திருமணத்துக்குப் பின்னும் தொடருவது சாத்தியமா? எனவே, நட்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, திருமணத்தையே பொய் சாக்குச் சொல்லி தள்ளிப் போடும் உ.பி.ச.க்களின் கதைதான் ப்ரியதர்ஷனின் டைரக்ஷனில் உருவாகியுள்ள 'ஸ்நேகிதியே'!

வசதியான வீட்டுப் பெண் சர்பானி முகர்ஜி. மிடில் கிளாஸ் வீட்டுப் பெண் ஜோதிகா. கற்பனையில் ஒரு காதலனை சிருஷ்டித்து, அதை நிஜம் போல

ஜோதிகாவின் உடன்பிறவா சகோதரி!

வீட்டில் ரீல் விட்டு, திருமணம் வேண்டாம் என்கிறார் ஜோதிகா. ஆனால் விதி சதி செய்து விளையாட ஆரம்பிக்கிறது. ஜோதிகா சொல்லும் (கற்பனை) காதலன் தான் தான் என்று ஒரு இளைஞன் அடிக்கடி ஃபோன் செய்கிறான். நேரில் வருவதாக ஒருநாள் அவனிடமிருந்து டெலிபோன் வருகிறது. வரும் இளைஞன் கொலை செய்யப்பட்டுவிட, கொலைப்பழி ஜோதிகா, சர்பானி முகர்ஜி மீது



விழுந்து விடுகிறது.

அதனால் இவர்களைப் போலீஸ் துரத்த, அடுக்கடுக்காய்ப் பிரச்னைகள். கொலையைத் துப்பறிய வரும் போலீஸ் ஆபீசராக வருகிறார் தபு. கிளைமாக்ஸில் கொலையாளியே தபுதான் என சொல்லி பரபரப்பூட்டுகிறார் டைரக்டர்.

ஜோதிகாவை, 'காதலுக்கு மரியாதை' – இந்தி வடிவத்தில் அறிமுகப்படுத்தியவர் ப்ரியதர்ஷன். ஜோதிகாவின் துறுதுறுப்பும், படபடப்பும் சுட்டித்தனமும் இந்தக் கேரக்டருக்கு மிகப் பொருத்தம் என்பதால் அவரை நடிக்கச் செய்தார்.

பணக்காரப் பெண்ணுக்கு ப்ரியதர்ஷனின் தேர்வு சர்பானிமுகர்ஜி. இவர் மும்பையில் பிரபலமான மாடல். சர்பானி குடும்பத்தில், இவர்தான் சினிமாவில் நுழைய கொஞ்சம் லேட். இவரது குடும்பத்து உறவுகள் இரண்டு பேர் ஏற்கெனவே இந்தியில் மிகப் பிரபலம். ஆளுக்கு ஒரு தமிழ்ப்படம் கூட நடித்திருக்கிறார்கள். அவர்கள் காஜோல் (மின்சாரக் கனவு) ராணி முகர்ஜி (ஹேராம்). காஜோல், ராணிமுகர்ஜி, சர்பானி முகர்ஜி மூவருடைய அப்பாக்களும் சகோதரர்கள்.

படத்தில் மட்டும் என்று இல்லாமல், ஜோதிகாவும், சர்பானியும் நிஜத்திலும் மிக நெருங்கிய தோழிகளாகி விட்டார்கள். படப்பிடிப்பின்போது இருவரையும் உ.பி.ச என்றுதான் வேடிக்கையாய் எல்லோரும் குறிப்பிடுவார்கள்.

படத்தின் பெரும்பாலான காட்சிகள் மைசூரிலும், நாகர்கோவிலிலும் எடுக்கப்பட்டன. படப்பிடிப்பு முழுக்க, பிக்னிக் போல ஜாலியாகக் கழித்தார்கள் ஜோதிகாவும் சர்பானியும். போதாக்குறைக்கு, ஹாஸ்டலில் லூட்டி அடிக்கும் காட்சிகளும் படத்தில் உண்டு.

கல்லூரி தின நிகழ்ச்சி, பிக்னிக், பிறந்த நாள் விழா என்று இளமையான காட்சிகள், கலகலா பாடல் காட்சிகளுக்கும் குறைவில்லை. ஜோதிகாவும், சர்பானியும் ஜாலியாக ஆடிப்பாடி கலக்கி விட்டார்கள் என்கிறார் தயாரிப்பாளர் முகேஷ்.

மைசூரில், ஒரு காவல் நிலையத்திலிருந்து ஜோதிகாவும், சர்பானியும் பைக்கில் தப்பிப் போகிற காட்சி. ஜோதிகா பைக் ஓட்ட, பில்லியனில் சர்பானி. வேகமாய் ஓடிய பைக், சட்டென நிலை தடுமாறி விட, ஜோதிகாவும், சர்பானியும் கீழே விழுந்து, நல்ல அடி.

அவர்களுக்கு அடிபட்டு விட்டதால், படத்துக்கு அடிபடாது. ஜெயித்து விடும் என நம்புகிறார் யூனிட்டைச் சேர்ந்த ஒரு டெக்னீஷியன்!

— கௌதம்ராம்

சுமி
சூப்பர் மார்க்கெட்

'மீண்டும் வருக!' என்று சுமியை செந்தமிழில் 'வெல்கம்' செய்திருக்கும் ஆயிர மாயிரம் ரசிக உள்ளங்களுக்கு முதற்கண் என் ஹார்ட் ஃபெல்ட் கிராட்டிடியூட்!


• ஜெயகாந்தன்

வாழ்த்தோடயே இலவச இணைப்பா கவிதையும் அனுப்பிட்டார் -- வேற யாரு...? நம்ம வீ. விஜயராகவன் சார் தான்! அவர் கவிதையை இந்த காலம்ல தனி பாக்ஸ்ல பப்ளிஷ் பண்ணிருக்கேன். அந்த நல்ல கவிதையைப் பார்த்து இன்ஸ்பையர் ஆகி அடியேன் எழுதின சுமாரான கவிதை இதோ :

கை வலி, கால் வலி,
கண்ட கண்ட நேரத்தில்
கேட்காமலே நுழையும்
மண்டை மகா வலி,
வித்தவுட்டில் வந்து சேரும்
வஞ்சமிகு வயிற்று வலி
பொல்லாத கண் வலி
பென்சில் சிவப் போய்,
பிடித்துக் கொள்ளும்
கண்டு விரல் சுளுக்கு...

எல்லாத்தையும் பல் கடித்துப்
பொறுக்கலாம் வாழ்வில்

பல்லே 'வலிப்பேன்' என்று
பெரும்பான்மை பலத்துடன்
அராஜகம் ஆரம்பித்தால்
எதைக் கடித்துப் பொறுப்பேன்
ஏழையேன் ஏழையேனே!

என் பல் வலி சீக்கிரம் குணமாக வாழ்த்தனுப்பப்போற ரசிகர் மன்றத்தாருக்கு அட்வான்ஸ் தாங்க்ஸ்!


• பாலகுமாரன்

'பல்'மொழிகள்னு இரண்டு வாரம் முன்னாடி கல்கியில படிச்சிருப்பீங்க. தினமணி மருத்துவ மலர்லேருந்து எடுத்துப் போட்டது. பின்னாலேயே தீபாவளி மலரும் கொண்டு வந்திருக்கற தினமணிக்கு 'ஜே' போடணும். ('ஜெ' அல்ல!) மலர்ல ஹைலைட், தமிழ்நாட்டு மடாலயங்கள் பத்தின சுருக் நறுக் அறிமுகம். அனேகமா எல்லா முக்கியமான மடங்களையும் 'கவர்' பண்ணியிருக்காங்க. ஒண்ணை மாதிரி இன்னொண்ணு இல்லாம இருக்கணும்னு கட்டுரைகளை ரொம்ப கேர்ஃபுலா அமைச்சிருக்கறதைச் சொல்லணும். ஜெயகாந்தன் பேட்டியும் பாலகுமாரன் கட்டுரையும் கீழே வைக்காம படிக்கவைக்கற ஐடம்ஸ்.

'எழுதிக் கொண்டேயிருந்தால் இருக்கும் போதே இல்லாமல் ஆகிவிடுவேன்'ன்னு ஜெயகாந்தன் சொல்லியிருக்கறதை எல்லா ரைட்டர்ஸூம் ஞாபகம் வைச்சுக்கிட்டாகணும்.


ஏழையேன்

பாலகுமாரன் 'உடையார் குடி'ன்ற காட்டுமன்னார்கோயில்ல உள்ள ஒரு கல்வெட்டு பத்தி ரொம்ப இன்வால்வ்மென்டோட எழுதியிருக்கார். ஆதித்த கரிகாலன் கொலைசதி பத்தி சில விவரங்களைச் சொல்ற கல்வெட்டு. இந்த மாதிரியான கட்டுரைகள் நம்ம ஹிஸ்டரி டெக்ஸ்ட் புக்ஸ்ல வந்தா எல்லா ஸ்டூடன்ட்ஸூமே அந்த சப்ஜெக்ட்ல எய்ட்டி – நைன்டி பர்சன்ட் வாங்குவாங்க...

விச் ரிமைன்ட்ஸ் மீ... எஜூகேஷன்

சிஸ்டமை எப்படி அடியோட மாத்த ணும்னு லாஸ்ட் வீக் சோனியா காந்தி பேசினதை 'ஹிண்டு'ல படிச்சேன். பேசி யிருக்கறது அரசியல்வாதியான்னு நம்ப முடியலை. கல்விங்கறது கற்பனையையும் சிந்தனையையும் தூண்டறா மாதிரி இருக் கணும்; இப்போதைய எஜுகேஷன் நேர் ஆபாஸிட்டா இருக்கு; இன்னமும் இந்திய பெண்கள்ல பாதிக்கு மேலே எழுதப் படிக்கத் தெரியாதவங்களாயிருக்காங்க; இன்பர்மேஷன் டெக்னாலஜில இருபத் தோறாம் நூற்றாண்டைத் தொட்டுட்டோம். ஆனா கல்வியைப் பரவலாக்கறதுல இன் னும் எய்டீந்த் செஞ்சுரிலதான் இருக் கோம்னெல்லாம் புட்டு புட்டு வைச்சிருக் காங்க...

சரி மேடம், காங்கிரஸ் தேர்தல் அறிக் கைல எஜுகேஷன் அஜெண்டாவுக்குச் சிறப்பிடம் உண்டான்னு கேட்டு ஈமெயில் அனுப்பலாம்னு பார்த்தேன்... கட்சித் தேர்தல்ல ஏகமனதா தேர்ந்தெடுக்கப் படறதுக்காக பிஸியா உழைச்சுட்டிருப்பாங் களேன்னு விட்டுட் டேன்!



— சுமி

ஏழையேனே!



களத்து மேட்டுக் கம்ப்ளெயிண்ட்டு

"காயில் ஃபால்டோ,
பீஸ் போயிடிச்சோ
போர்வெல் மோட்டர் ரிப்பேர்
அர்ஜெண்டாப் பார்த்து
கனெக்ஷன் கொடுக்கச்
சொன்னாரு அப்பா,
கரண்ட் கட்
ஆவறதுக்கு முன்னாடி."

அ னா ஆ வன்னா
அறிமுகமில்லாமலே
அஞ்சாவது எட்டியிருக்கும்
ஆறுமுகம்
இதைச் சொல்லிவிட்டு,
வரும் வழியில்
அமைச்சரின்
ஆவேச சூளுரை
"அஞ்சாவது வரை
தமிழிலேயே கல்வி,
ஆங்கிலத்தை
அண்ட விடாமல்.
தமிழில் சொல்ல முடியாத
ஒன்று
எங்களுக்குத் தேவையே இல்லை."

இதைக் கேட்டு
நடுங்கிப் போன
'அது'
காணாமல் போய் விட்டது —
கை தட்டிக் கலையும்
கூட்டத்தின் இடிபாடுகளுக்கு
இடையே.

ஆமாம்,
பர்ஸுக்கு
என்ன சொல்வது
தமிழில்?

— வீ. விஜயராகவன்

இன்று மனமகிழ் மன்றத்தின் ஆண்டுவிழா. அஞ்சலகம் அழகு மாளிகையாய் விழாக்கோலம் பூண்டிருந்தது. வண்ண வண்ண தோரணங்களைப் போர்த்திக் கொண்டு, முத்து, முத்தான வாசகங்கள் ஏந்திக் கொண்டு கொலுவிருந்தது. மேடை மீது கலர் டீ.வி. பர்தா போர்த்தி அமர்ந்திருந்தது. போஸ்ட் மாஸ்டர் முகச் சிலையை விலக்கி செல்லமாய் கன்னத்தைத் திருகிவிடக் காத்திருந்தது.

மாலை ஐந்து மணிக்கெல்லாம் அலுவலக வேலைகள் முடிந்துவிடும். அதுவரையில் சவுண்டு சர்வீஸின் சத்தத்தை குறைத்துத்தான் வைத்திருந்தார்கள். போஸ்ட்மாஸ்டர் அங்கும், இங்கும் அலைந்து கொண்டிருந்தார். கவுன்சிலர் வரப் போகிறார். குறை ஏதும் இருந்துவிடக் கூடாதே "முருகேசா, டேபிள் கிளாத்தை விரித்துப் போடு. பூந்தொட்டிகளை எடுத்துவை, வத்திகளைக் கொளுத்தி வை, கூல் டிரிங்ஸ் வாங்கி வந்தாச்சா? கவுன்சிலர் வந்ததும் மாலை போட்டு வரவேற்கணும், மாலை ஒண்ணு வாங்கி வா'' என்று முருகேசனை விரட்டிக் கொண்டே இருந்தார். அவனும் அவர் சொல்லும் வார்த்தைகளை 'டொக் டொக்' என முத்திரை குத்தும் சத்தம், சவுண்டு சர்வீஸ் சத்தம் இவைகளுக்கு நடுவில் கூர்ந்து கவனித்து, சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தான்.

முருகேசனுக்குப் போஸ்ட் மாஸ்டர் மீது மிகுந்த பக்தி. அவர், இவன் ஜாதிக்காரன் என்பதால் மட்டும் அல்ல, ஒட்டுமொத்த மனித சமூகத்திற்கும் பாடுபடுகிற மனிதராக மனத்தில் பட்டதால்தான் அவர் அவனுள் உயர்ந்து நின்றார். அவர் மேடையில் பேசும்போது இன்னும் இன்னும் கேட்க வேண்டும்போல் இருக்கும், தீண்டாமையை ஒழிக்க வேண்டும், ஏற்றத்தாழ்வைப் போக்க வேண்டும் என்றெல்லாம் பேசுவார்.

அடிக்கடி அஞ்சலகத்தில் வேறு, வேறு தலைப்புகளில் கூட்டம் போட்டு அறிவுறுத்துவார். மனித நேயம் பற்றியும், சுற்றுப்புறச் சூழல் பற்றியும் கூட்டம் போட்டு நல்ல நல்ல அறிஞர்களை எல்லாம் வரவழைத்துப் பேச வைப்பார். ஒரு டாக்டரை வரவழைத்து "உடல் ஆரோக்கியம்'' என்ற தலைப்




மணிநாக்

பில் நடத்திய கூட்டம்தான் நடந்த கூட்டங்களிலேயே சிறந்த கூட்டம்.

"நாம சோத்தைத்தான் அதிகம் தின்கிறோம், அது தப்பு. எந்த அளவுக்குச் சோறு சாப்பிடுகிறோமோ, அந்த அளவுக்குப் பதார்த்தங்கள் கலந்து சாப்பிடணும். கறி சாப்பிடுவதால் எல்லா சத்தும் வந்துவிடாது, அப்படித்தான் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லா சத்தும் கிடைக்கிற பொருட்கள் எவை, எவை தெரியுமா?" எனக் கேள்வி கேட்டுச் சொல்லியும் வைத்தார்.

அஞ்சலகத்தில் தொழிற் சங்கக் கூட்டங்களும் அடிக்கடி நடக்கும்.

திண்ணை



ஆனால் அவற்றில் போஸ்ட் மாஸ்டர் கலந்து கொள்ள மாட்டார். தொழிற் சங்கங்கள் அரசியல் சார்புடையவை என ஒதுங்கியே இருப்பார். போஸ்ட் மாஸ்டர் நடத்தும் கூட்டங்களில் எல்லாம் தொழிற் சங்கத்துக்காரர்களின் பங்களிப்பும் குறைவாகத்தான் இருக்கும். போதனைகளால் மட்டும் பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியாது என்பார்கள். அவர்களுக்குப் போஸ்ட் மாஸ்டர் மீதும் நல்ல அபிப்ராயம் இல்லை. இவர் ஒரு "ரூல் மாஸ்டர்" என்றெல்லாம் கிண்டல் செய்வார்கள். வேலையை ஒழுங்காகச் செய்யலைன்னா கேட்கத்தான் செய்வார்கள்; அதற்காக அவரை இப்படி எல்லாம் பழிக்கலாமா?

அலுவலகத்தில் ஏதாவது பிரச்னை என்றால் தொழிற் சங்கத்துக்காரர்கள் உடனே போர்டில் எழுதிப் போட்டு போஸ்ட் மாஸ்டரை அசிங்கப்படுத்திவிடுவார்கள்.

அம்பேத்கர் விழாவில் போஸ்ட் மாஸ்டர் பேசிய பேச்சு இவனுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. தீண்டாமைக் கொடுமையால் அம்பேத்கர் வண்டியிலிருந்து தூக்கி எறியப்பட்டது; அம்பேத்கர் நடத்திய "கோயில் நுழைவுப் போராட்டம்", "பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம்" பற்றி எல்லாம் அவர் பேசப் பேச இவனுக்கு, இவன் அனுபவித்த தீண்டாமைக் கொடுமைகள் எல்லாம் நினைவுக்கு வந்தன.

சிறுவனாய் இருக்கும்போது இவனது ஆண்டையோடு திண்ணையில் இவன் உட்கார்ந்ததற்காக புளியம் மிளாறால் அடி வாங்கியிருக்கிறான். ஆண்டையுடைய வயல் வெளியில் வேலை செய்துவிட்டுச் சாப்பிடும்போது கூட தரையில் சப்பணங்கால் போட்டு உட்கார்ந்து சாப்பிடக்கூடாது. குத்தங்கால் இட்டுத்தான் உட்காரணும். இரண்டு கைகளையும் இணைத்து வாயில் வைத்தால் கூழை ஊற்றுவார்கள். அதை உறிஞ்சிக் குடிக்க வேண்டும் கூழ், கை ஓட்டைக்குள் ஒழுகி முழங்கை வரை வந்துவிடும். அதையும் ஒழுக விடாமல் நக்கிச் சாப்பிடும் நாய் பிழைப்பு!

போஸ்ட் ஆபீசில் எத்தனையோ, குரூப் டி ஊழியர்கள் இருக்கிறார்கள், இருந்தாலும் போஸ்ட் மாஸ்டர் இவனைத்தான் கூப்பிடுவார். டீ வாங்கிவர, பில்களை 'டிரெஷரரிடம் சேர்க்க, ஃபைல்களை எடுத்து வைக்க, அனைத்து வேலைகளுக்கும், இவன் தான். பெல் அடித்ததும், முதல் ஆளாய்ப் போய் நிற்பான். டேபிளைத் துடைத்து விடுவான்,

கண்ணாடி கிளாஸைக் கழுவி, தண்ணீர் நிரப்பி மூடி வைப்பான். அவருக்குப் பணி விடை செய்வதை, தன் இனத்துக்கே செய்வ தாக நினைத்துப் பூரித்துப் போவான்.

போஸ்ட் மாஸ்டர் அறையில் எப்பொழு தும் ஒரு பூனை இருக்கும், அதற்குப் பசித்தால் அவரது காலில் போய் உராயும், அதைப் புரிந்து கொண்டு அவர் பால் வாங்கி வரச் சொல்லி, ஒரு கப்பில் ஊற்றி வைப்பார். அது குடிக்க, குடிக்க பார்த்து ரசித்துக் கொண்டே இருப்பார். அது குடித்து முடித்ததும் டேபிள் மீது தூக்கி விடுவார். அது டேபிள் விரிப்பு கண்ணாடியின் வழ வழப்பில் நிற்காது. அவர் எதிரில் போடப் பட்ட சேருக்குத் தாவி உட்கார்ந்து கொள் ளும். பிறகு முன் காலைத் தூக்கி முக வாயைத் துடைத்துக் கொண்டு கத்தும். அது தொழிற் சங்கத்து ஆட்கள் பேட்டி காண்பது போல் இருக்கும்.

இரண்டு கார்கள் போஸ்டாபீசின் முன்னால் சர்... சர்... என்று வந்து நின்றன. கவுன்சிலர் இறங்கிவந்தார். போஸ்ட் மாஸ்டர் மாலை எடுத்துக் கொண்டு ஓடினார். கவுன்சிலர் கழுத்தில் போட்டார். அனைவரும் கைதட்டினார்கள். கவுன்சிலரை உள்ளே அழைத்துக்கொண்டு போய் உட்கார வைத்தார். ஜெயந்தி மேடம் கடவுள் வாழ்த்து பாட, கூட்டம் ஆரம்பமானது.

போஸ்ட் மாஸ்டர் தலைமை தாங்கிப் பேசினார். "போஸ்ட் ஆபீசை ஒட்டிய தார்ச் சாலையில் போக்குவரத்து அதிகம் என்பதால் போஸ்ட் ஆபீசின் முன்னால் உள்ள மணல் பகுதியில் புழுதி கிளம்பி ஆபீசுக்குள் நுழைந்து மாசு ஏற்படுத்துகிறது. அதைப் போக்க கவுன்சிலர் அவர்கள் தார் போட்டு, தார் சாலையோடு இணைத்துக் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக ஆபீசுக்குத் தேவையான குடிதண்ணீரை தினம், தினம் விலை கொடுத்து லாரியில் வாங்குகிறோம். எனவே, கார்ப்பரேஷன் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கான விண்ணப்பத்தையும் தங்களுக்குத் தருகிறோம்'' என்று பேசி முடித்துவிட்டு மனுக்களையும் கவுன்சில ரிடம் கொடுத்தார்.

கவுன்சிலரின் பேச்சுக்குப் பிறகு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். போஸ்ட் மாஸ்டர் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியாக, ஸ்வீட், காரம், ஐஸ்கிரீம் வழங்கப் பட்டது.

இவனுக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது. கவுன்சிலர் இவர் ஜாதிக்காரர் என்பதால் அவரைக் கௌரவிக்க வரவழைக்கிறார் போஸ்ட் மாஸ்டர் என்று சிலர் பேசிக் கொண்டார்களே, அது சரியல்ல என்பதை இப்போது உணர்ந்திருப்பார்கள். தொழிற்சங்கங்கள் இவரிடம் எழுப்பிய பிரச்னையை எவ்வளவு சாதுர்யமாக இவர் முடித்திருக்கிறார்! இவரைப் புரிந்து கொள்ளாமல் சிலர் குறை சொல்கிறார்களே என வருந்தவும் செய்தான்.

அடுத்த நாள் போஸ்ட் மாஸ்டர் பலரையும் அழைத்து விழா எப்படி இருந்தது என்று கேட்டு விசாரித் துப் பூரிப்படைந்து கொண்டிருந்

ஆட்சியரின் அதிரடி உத்தரவு...!



திருவாரூர் மாவட்டத்தில் தீபாவளி மாமூல் வாங்குபவர்கள் குறித்து எச்சரிக்கையை மாவட்ட ஆட்சியர் உமாசங்கர் வீதிதோறும் ஒலி பெருக்கியில் முழங்கியது மட்டுமின்றி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கையும்களவுமாகப் பிடித்து தங்களிடம் ஒப்படைக்கும் படியும் கூறினார். 'சிலர் மின் இணைப்பைத் துண்டிப்போம் என்பர், டெலிபோன் செயலிழக்கச் செய்வோம் என்பர். நீங்கள் எதற்கும் கவலைப்படாமல் எனது 20276 எண்ணில் டெலிபோனில் தொடர்பு கொள்ளலாம்' என அறிவித்தார். மாநில அரசு ஊழியரோ, மத்திய அரசு ஊழியரோ எவராயினும், கடுமையாக தண்டிக்கப்படுவர் என்றார். ஆட்சியரின் இந்த அதிரடி உத்தரவால் கதிகலங்கினர் அதிகாரிகள்.

ஜி.ஜி. கிருஷ்ணன்



பிறந்த பயன்

படிப்பை முடித்தவுடனேயே, ஒரு தொழிற்சாலையில் வேலை கிடைத்த போது ஏற்க வேண்டிய சூழ்நிலை காலை ஐந்தரை மணிக்கு எழுந்து கோவையில் வீட்டை விட்டு ஆறரைக்குப் புறப்பட்டால், மூன்று பஸ் மாறி, எட்டு மணிக்குத் தொழிற் சாலையில் இருந்தே ஆக வேண்டிய கட்டாயம். இரவு வீடு திரும்ப வெகுநேரமாகிவிடும். இயந்திரங்களின் மத்தியில் என் வாழ்க்கையும் இயந்திரத் தனமாகிப் போனது. ஆறு வருடங்களில் இலக்கிய மனது துருப்பிடித்து விட்டது.

ஒரு நாள், இனியும் பொறுப்பது சரியில்லை என்ற சூழ்நிலையில், பணி விலகல் கடிதம் எழுதி, அதனை இயக்குனரிடமே நேரடியாய்க் கொடுத்து விட்டுத் திரும்பி வந்து என் இருக்கையில் அமர்ந்தபோது பிறந்த பயனை அடைந்து விட்டாற் போலிருந்தது!

- கவிஞர் தாமரை

மிக நல்ல விஷயம்!

தார். பலரும் பலவிதமாகச் சொன்னார்கள். ''உங்கள் பேச்சு நன்றாக இருந்தது'', "அலங்காரம் நன்றாக இருந்தது", "விருந்து நன்றாக இருந்தது" என்று சொன்னார்களே தவிர யாரும் இவரது சாதுர்யத்தைச் சுட்டிக்காட்டிப் பாராட்டவில்லை என வருந்தினான். இவனை அழைத்துக் கேட்பார் என இவனும் எதிர்பார்த்து அவர் எதிரே, எதிரே போய் நின்று பார்த்தான். அவர் கேட்பதாய்த் தெரியவில்லை. தானே சொல்லலாம் என வாயெடுக்கும்பொழுதெல்லாம் யாராவது ஒருவர் உள்ளே வந்து விடுகிறார்கள். என்ன செய்ய. சரி, மாலையில் தனியாகத்தான் இருப்பார் சொல்லிக் கொள்ளலாம் என வேலைகளில் மூழ்கினான்.

மாலை ஏழரை மணியிருக்கும், போஸ்ட் மாஸ்டர் தனியாகத்தான் இருந்தார். இவன் அந்தக் கண்ணாடி அறைக்குள் கதவைத் திறந்து கொண்டு நுழைந்தான். போன் அலறியது. போஸ்ட் மாஸ்டர் ரீசிவரை எடுத்துப் பேசிக் கொண்டிருந்தார். சரி, பேசி முடிக்கட்டும், அதுவரை காத்திருப்போம் என அவர் முன்னால் போடப்பட்டிருந்த அந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

போஸ்ட் மாஸ்டர் போனில் பேசுவதை நிறுத்தினார். ரிசீவரை ஒரு கையால் மூடிக் கொண்டார். இவனை முறைத்தார். அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. முகத்தில் சூடு ஏறியது. கடுகடுப்பு கூடியது.

"எழுந்திருய்யா, போய்யா வெளியே, ஐ சே யூ கெட் அவுட்!" என ஆங்கிலத்திலும் கத்தினார். என்னமோ ஏதோவென அலறி அடித்துக் கொண்டு கேஷியரும் வாட்ச்மேனும் ஓடி வந்தார்கள்.

"என்ன திமிர் இருந்தா என் எதிரே வந்து உட்காருவே?" ஆப்ட்ரால் ஒரு குருப்-டி, கைகட்டிச் சேவகம் செய்ய வேண்டியவன் நீ, என்ன கொழுப்பிருந்தா என் எதிர்ல வந்து நேருக்கு நேரா உட்காருவே'' என்று சப்தம் போட்டுக் கொண்டிருந்தார்.

இவன் அதிர்ந்து போனான். உடல் முழுக்க வியர்த்துக் கொட்டியது.

ஆண்டைகளைப் போலல்லவா அதட்டி விட்டார்! ஆயிரம் முட்கள் உடல் முழுக்க தைக்கிற அவமானம்!

வெடி வெடித்துச் சரிகிற பாறைகள் போல் அங்கமெல்லாம் தளர்வுற்றுச் சரிகிற நடுக்கத்துடன், இவன் வெளியேறினான். பூனை உள்ளே போய்க் கொண்டிருந்தது.



✉ ஜே.எம். சாலி எழுதிய 'அறம்' ஒரு டைம் பாம்! என்ன ஒரு சாதாரண ஆரம்பம். சீரான சாதாரண நடையில் கதை செல்கிறது. வந்ததே கடைசியில் ஒரு திடுக்கிடல். தூக்கி வாரிப்போட்டது! வாழ்த்துகள்.

சென்னை – 4, சி.எஸ். மணியரசன்

✉ 'பரதநாட்டியம் போர் அடிச்சா, அது டான்சரோட தப்புதான்' என்று அலர்மேல் வள்ளி சொல்லியிருப்பது முற்றிலும் உண்மை!

மதுரை, என். பாலகிருஷ்ணன்

✉ டான்ஸி வழக்கில் தீர்ப்பையொட்டி தனியார் தொலைக்காட்சி ஒன்றில் கடந்த அக்டோபர் 14 மற்றும் 21 தேதிகளில் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. கலந்து கொண்டவர்கள்– தமிழக வருவாய்த் துறை அமைச்சர் திரு. ரகுமான்கான் (தி.மு.க) மற்றும் வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு தா. பாண்டியன். இருவருமே சட்டம் பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பாண்டியனுக்குச் சில சங்கடங்கள் இருந்தன. அவரால் ஊழலுக்கு ஆதரவாகப் பேசவும் முடியவில்லை, அதற்காக ஜெயலலிதாவுக்கு எதிராக தீர்மானமாகப் பேசவும் முடியவில்லை. அவர் இரண்டு இடங்களில் 'தடுக்கி விழுந்தது' நன்றாகவே தெரிந்தது. 1) ஊழல் வழக்கில் ஒருவருக்குத் தண்டனை பெற்றுத் தந்தால் ஊழலே ஒழிந்து விடுமா என்று கேட்டாரே பார்க்கலாம்! திருடும் கொள்ளையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு போவதால் போலீசையும் கோர்ட்டையும் ஒழித்து விடலாமா? அடுத்து அவர் சொன்னது அதிர்ச்சி அளித்தது. 2) தனி நீதிமன்றம் தற்போது கொடுத்துள்ளது தீர்ப்பே அல்லவாம்– அந்த நீதிபதியின் சொந்தக் கருத்தாம். என்ன விபரீதம்? எந்த கோர்ட் என்ன தீர்ப்பு அளித்தாலும் தனிப்பட்ட கருத்து என்று சொல்லி விடலாமா? இம்மாதிரி விபரீதமான வாதங்களைச் சொல்லித் தீர்ப்பது ஒருபுறம் ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்குவதும் மறுபுறம் நீதியை அவமதிப்பதும் ஆகும்.

சென்னை –5, எஸ். வாணிசங்கர்.

✉ பாலு ஜுவல்லர்ஸ் கடை திறக்கப் போவதாகக் கேள்விப்பட்டு தங்கள் நிருபர் பாலு அய்யப்பனை நேரில் சந்தித்து செய்திகளை வெளியிட்டிருக்கிறார். நன்றி. ஆனால் ஒரு உண்மை சரியாக விளக்கப்படவில்லை. கோர்ட் உத்தரவு கொடுத்திருப்பது Memorandum of Understanding between the Assn. and Mr. Ayyappan அடிப்படையில். அதன் 6வது பிரிவின்படி திரு பாலு அய்யப்பன் முதலில் 12% வட்டி கொடுத்து வரவேண்டும். பிறகு 4 வருடங்களில் அசல் தொகை சமபங்கீடாகத் தரவேண்டும். ஆகையால் அசல் முதலில், பிறகு வட்டியைப் பற்றி யோசனை என்பது தவறான வெளியீடு.

சேப்பாக்கம், சீனுவாசன்.

✉ கல்கி 15.10.2000 இதழ் நீங்கள் கேட்டவை -தராசு பகுதியில் ''முதல் நாள் பெரியார் பிறந்த நாள் விழாத் தலைமை; மறுநாள் காளி கோயில்களில் சிறப்பு வழிபாடு– வீரமணியால் எப்படி இதை ஜீரணிக்க முடிகிறது?'' என்ற கேள்விக்கு '' 'ஜெ'யின் உருவிலே பெரியாரைக் காண்பதால் இருக்கலாம்'' என்று பதில் வெளிவந்துள்ளது. முதலில் கேள்வியே தவறானது. தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்ற ஆன்மீகத் தலைவர்களே தலைமை தாங்கியதுண்டு. தந்தை பெரியாரின் பகுத்தறிவு, சமூக நீதி, பெண்ணுரிமை முதலிய கோட்பாடுகளில் எதையாவது ஒன்றை ஏற்கக்கூடியவர்கள் உண்டு. அனைத்தையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள்தான் தலைமை ஏற்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. வீரமணி ஜீரணிப்பது என்கிற பிரச்னை இதில் எழவில்லை; சாப்பிட்டால் அல்லவா ஜீரணப் பிரச்னை எழும்? 'ஜெ'யின் உருவிலே பெரியாரைக் காண்பதாக தி.க. பொதுச் செயலாளர் கி.வீரமணி கூறவும் இல்லை. நூல் வெளியிட்ட ஜெயலலிதா, நூலைப் பெற்றுக் கொண்ட மூப்பனார் அவர்களிடம் அதற்குரிய பணத்தை வாங்குமாறு சுலோசனா சம்பத்திடம் கூறியதைத்தான் ''பெரியார் வந்துவிட்டார்'' என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார் வீரமணி.

சென்னை – 7, கலி. பூங்குன்றன்,
உதவிப் பொதுச் செயலாளர்,
திராவிடக் கழகம்.

வட்டமேஜை

குழந்தை இல்லாதோருக்கு ஒரு சங்கம்!

'குழந்தையில்லா தம்பதியர் சங்கம்' என்ற ஒரு அமைப்பை சென்னையில் துவக்கியிருக்கிறார்கள் பிரபாகரன்- அருந்ததி தம்பதி. இதன் நோக்கங்களை விளக்குகிறார்கள்:

"என்னதான் காலம் மாறிவிட்டது என்று சொன்னாலும் குழந்தையில்லா தம்பதிகளை இடித்துக் காட்டியோ, 'ஐயோ பாவம்' என்று அனுதாபப்பட்டோ இந்தச் சமூகம் மிகவும் சங்கடப்பட வைக்கிறது. இதன் காரணமாக ஏற்படும் தாழ்வு மனப்பான்மையினாலும், எதிர்கால பயத்தினாலும் மதம், மருத்துவம் ஆகிய இரண்டு வழிகளிலும் முடிந்தவரை போராடிப் பார்க்கிறார்கள் தம்பதிகள். ஆனால் இந்தப் போராட்டம் எக்கச்சக்கமான வருடங்களுக்கு இழுத்துக் கொண்டே போவதென்பது தேவையில்லாத அவஸ்தை. திருமணமாகி ஐந்தாறு வருடங்கள் வரை பலவித முயற்சிகளை எடுத்துக் கொள்ளட்டும். ஆனால் அதற்குப் பிறகு நமக்குக் குழந்தையில்லை எனும் உண்மையை மனதளவில் முழுமையாக ஏற்றுக் கொண்டு, வேறு விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவிப்பதுதான் புத்திசாலித்தனம். இதற்கு உதவத்தான் இந்தச் சங்கத்தைத் தொடங்கியிருக்கிறோம்.

"பல தம்பதிகளுக்கு மனம்விட்டுப் பேசிக் கொள்ளக்கூட வேறு யாரும் இருக்க மாட்டார்கள். சங்க உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கலந்து பேசிக் கொள்ளும் போது இந்தக் குறை நீங்கி விடுகிறது. தவிர இந்த நிலை நமக்கு மட்டுமல்ல நிறையப் பேருக்கு இருக்கிறது என்பதை நேரடியாகவே அறிந்து கொள்ளும் போது ஒருவித சமாதானமும் ஏற்படுகிறது.

"பலவித நடைமுறைக் கஷ்டங்களையும் திறந்த மனத்துடன் அலசுகிறோம். 'நமக்கு வயதாகும்போது நம்மைக் கவனித்துக் கொள்ள யாராவது வேண்டாமா?' என்ற எதிர்கால பயம்

• •

தத்தெடுத்துக் கொள்ளுதல், சோதனைக் குழாய்க் குழந்தை, செயற்கை முறை கருத்தரிப்பு போன்றவை யெல்லாம் அவசியமற்றவை என்பது இவர்களது கருத்து.

• •





• அருந்ததி, பிரபாகரன்

பல தம்பதிகளுக்கு ஏற்படுகிறது.

"இன்றைய நிலைமை என்ன...? பல இளைஞர்கள் வேலைக்காக வெளிநாடு சென்று விடுகிறார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் பெற்றோரோடு கூட இருந்து கவனித்துக் கொள்ள முடிகிறதா? அவ்வளவு ஏன்? முதியோர் இல்லங்களுக்குச் சென்று பார்த்தால், அங்கு தங்கியிருக்கும் பத்து பேர்களில் ஏழு பேருக்காவது குழந்தைகள் இருக்கும். பெற்றோரை பாரமாகக் கருதி சொந்த மகனே அவர்களை 'இவர்கள் யாருமற்ற அனாதைகள்' என்று பொய் சொல்லி முதியோர் இல்லத்தில் சேர்த்து விடும் அக்கிரமங்கள் எல்லாம் கூட நடைபெறுகின்றன. அப்படியிருக்கும்போது குழந்தையில்லை என்பதற்காக இடிந்துபோய் வாழ்க்கை முழுவதும் சோகத்தில் ஆழ்ந்திருப்பது அனாவசியம்.

"இறந்த பிறகு கொள்ளிபோட ஒரு மகன் இல்லையே என்ற தவிப்பும் பலருக்கு இருக்கிறது. ஆனால் இதுவும் ஒரு மாயைதான். 'விஷ்ராந்தி' இல்லத்துக்குச் சமீபத்தில் போனபோது, அங்கே இறக்கும் முதியவர்களுக்குக் கொள்ளி போட அவர்களது மகன்கள் வராததினால் தாங்களே கொள்ளிபோடுவது அவ்வப்போது நடப்பதுதான் என்று திருமதி சாவித்திரி வைத்தி எங்களிடம் கூறினார்."

– கொஞ்சம் அளவாகவும் அழுத்தமாகவும் பேசிய அருந்ததி தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்கிறார். அவரையும்விட தனது எண்ணங்களைக் கொட்டிவிட வேண்டும் என்பதுபோல் தடையின்றிப் பேசிய பிரபாகரன் சென்னை பல்கலைக்கழகத்தில் பணிபுரிபவர். திருமணமாகி இருபது வருடங்களாகியும் குழந்தையின்றி இருக்கும் இவர்கள் தேவைப்பட்ட மனப்பக்குவத்தைப் பெற்றதற்கு ஒரு மகப்பேறு மருத்துவர்தான் காரணம் என்பதை நன்றியுடன் குறிப்பிடுகிறார்கள். அந்த டாக்டர் மகப்பேறு மருத்துவத்தில் மிகப் புகழ் பெற்றவர் என்பதும், அவருக்கும் குழந்தை கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்கவை.

தத்தெடுத்துக் கொள்ளுதல், சோதனைக் குழாய்க் குழந்தை, செயற்கை முறை கருத்தரிப்பு போன்றவையெல்லாம் அவசியமற்றவை என்பது இவர்களது கருத்து. ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்வதற்குப் பதிலாக பல விதங்களில் உதவி தேவைப்படும் பல குழந்தைகளுக்கு உதவுவது மேல் என்கிறார்கள்.

செயற்கை முறைக் கருத்தரிப்பு போன்ற விவகாரங்களில் மிகவும் முன்னணியில் இருக்கும் சென்னை மருத்துவமனையில் இந்தச் சிகிச்சைக்காக ஆகும் செலவை நடுத்தர வர்க்கத்தினரால் தாங்க முடியாது என்பதையும், வெற்றி வாய்ப்பும் குறைவு என்கிற போது தங்கள் சேமிப்பு மொத்தத்தையும் இதில் செலவழிப்பது சரியில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

சங்கம் தொடங்கி சுமார் ஒரு வருடம் ஆகப் போகிறது. எவ்வளவு உறுப்பினர்கள் என்றால் 'முப்பது' என்று பதில் வந்தது. குறைவான எண்ணிக்கை என்று நமக்குப் பட்டது. காரணங்களை அடுக்கினார்கள். "குழந்தையில்லை என்பதை முன்பின் அறியாதவர்களிடம் பகிரங்கமாக ஒப்புக் கொள்வதில் பலருக்கும் ஒருவித தயக்கம் இருக்கிறது. எங்களுடையது முழுக்க இலவச மையம்தான் என்பதையும் உறுப்பினராவதால் ஏற்படக் கூடிய நன்மைகளையும் உணர்த்திய பிறகு பலரும் உறுப்பினர் ஆகிறார்கள். ஆனால் அவர்களைச் சுற்றியிருப்பவர்கள் இதை விரும்புவதில்லை. வாரிசு இல்லாதவர்களின் சொத்துக்காக அவர்களைச் சுற்றி வரும் உறவுக்காரர்களுக்கு, இப்படியொரு சங்கத்தில் சேர்ந்தால் அத்தம்பதி சொத்தை தர்மத்துக்கு எழுதி வைத்து விடுவார்கள் என்ற பயம்!

தங்கள் வருங்காலப் பாதுகாப்புக்காக, குழந்தையில்லா தம்பதிகள் தங்களது சேமிப்பை எப்படி முதலீடு செய்வது நல்லது என்று ஆடிட்டர்கள் உதவியுடன் இலவச ஆலோசனை அளிக்கிறது இச்சங்கம்.

உடல் நலம் இல்லாமல் படுத்திருக்கும் உறுப்பினர்களை, சக உறுப்பினர்கள் சந்தித்து தெம்பு ஏற்படுத்துகிறார்கள். இப்போதைய மூத்த குடிமக்களை நடுத்தர வயது தம்பதிகள் சென்று விசாரித்துக் கொண்டால் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த குழந்தையில்லா தம்பதிகள் இவர்களுக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கை.

எப்படியாவது குழந்தை வரம் வாங்கித் தருகிறோம் என்று சத்தியம் செய்யும் மருத்துவ மாந்திரீக விளம்பரங்களிடையே இப்படியும் ஒரு நேர்மையான அமைப்பு!

— ஜி.எஸ்.எஸ்.

படம்: வெங்கடேஷ்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை-63. Tel & Fax: 237 6129.
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our website at: www.intamm.com/sspeetam

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம், தங்களுக்கு அனைத்து நலன்களும் உண்டாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பிரார்த்திக்கின்றோம்.

குருகுல மாணவர்களின், உணவு மற்றும் இதர செலவுகளுக்கு, கல்வி கற்பதற்கு கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு, கட்டிடம் கட்டுவதற்கு மற்றும் நிரந்தர வைப்பு திட்டத்திற்கு தங்களின் மேலான நன்கொடைகளை அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• பிஸ்கட், மற்றும் பால் வழங்குதல்	ரூ.	750/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ.	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	9,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-



-: விவேகானந்தர் தேசிய இயக்கம் :-

ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் சார்பில் "விவேகானந்தர் தேசிய இயக்கம்" என்ற அமைப்பு கிராமபுறத்தில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதன்மூலம் 201 கிராமங்களில் சுமார் 7000 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச சிறப்புக் கல்வியும், (டியுஷன்) ஆன்மீக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த மேலான தொண்டுகள் சிறப்பாக நடைபெற தங்களின் அன்பையும், உதவியையும் நாடுகிறோம்.

1.	ஒரு சென்டருக்கு ஒரு மாதத்தின் பராமரிப்பு செலவு (பௌர்ணமியன்று ஒரு வேளை சிறப்பு உணவு செலவு உட்பட)	ரூ.	1,500/-
2.	7000 மாணவர்களுக்கு பௌர்ணமி நாளன்று உணவு வழங்க (அன்று கூட்டு வழிபாடு, பக்தி பாடல்கள் பிரார்த்தனை அனைத்து டியுஷன் சென்டர்களிலும் நடத்தப்படும்)	ரூ.	70,000/-
3.	ஒரு மாதத்திற்க 201 சென்டர்களின் பராமரிப்பு செலவு பௌர்ணமி பூஜை உட்பட	ரூ.	3,00,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

இனிமேல் ஆரம்பம்

2



தலையில் கிரீடம் வைத்தாற் போலிருந்தது சீனுவாசராகவனுக்கு.

'இப்படியொரு சந்தர்ப்பம் வருமோ...'

அவர், தனக்குள்ளேயே வியந்து கொண்டிருக்க, அதிசயமாய்க் காப்பியை ஆற்றி, கணவர் கையில் கொடுத்த அலமேலு, செல்லமாய் அதட்டினாள்.

"என்ன யோசனை... எப்படியும் மாப்பிள்ளை செஞ்சு கொடுத்துவார்ரீ அம்மு. அவர் ஒரு காரியத்துல இறங்கி இது வரைக்கும் தோத்ததுண்டான்னு என்கிட்டயே மார் தட்டினாராக்கும் அண்ணா.. ரொம்பத்தான் அலட்டிக்காம சட்டுபுட்டுனு முடிச்சுக் கொடுங்கோ.."

அலமேலுவிடம் மார் தட்டிய அவளது அண்ணா கச்சலாக, சீனுவாசனின் எதிரிலேயே நட்டு வைத்த சோளக் கொல்லை பொம்மை மாதிரி உட்கார்ந்திருந்தார்.

"ஆமா... இந்த மாதிரி ஒரு பையன், கல்யாணத்துக்கு இருக்கிறதா யார் சொன்னது உங்களுக்கு?"

"என் சம்சாரத்தோட தங்கையோட நாத்தனார்... அதெல்லாம் கல்யாண வயசுப் பிள்ளையையும், பழுத்த பலாப் பழத்தையும் மேல துண்டைப் போட்டு மூடி மறைச்சு வைக்க முடியுமா..."

"அதெல்லாம் சரிதான். பையன் பெரிய இடம்னா... பையனோட தங்கைய - எங்க சேர்மன் பையனுக்குத்தான் கொடுத்திருக்கா... கல்யாணத்தை ரொம்ப எளிமையா வச்சுக்கணும்னு சேர்மன் கதறோ கதறுன்னு கதறியும் கேட்காம, பொண்ணைப் பெத்தவர் யானை மேல மாப்பிள்ளைய உட்கார வச்சு ஜானவாச ஊர்வலம் நடத்தினார். ஊர்வலம், கல்யாண மண்டபத்துக்கு வந்து சேர்ந்ததும் உடனேயே காசியாத்திரை ஆரம்பமாயிடுத்து.. விடிய விடிய நடந்தது ஜானவாசம்... அப்பேர்பட்ட இடத்துல போய் சம்பந்தம் பேச... நமக்கு என்ன தகுதியிருக்குன்னுதான்..."

"இதப் பாருங்கோ... எங்க அண்ணாவை மட்டம் தட்டணும்னு எத்தனை நாளா மனசுலக் கறுவிட்டிருந்தேள்... அவனும் ஒண்ணும் ஏப்பை சாப்பை இல்லே... தஞ்சாவூர்லே பாதி அவனோடது தான். யானை மேல ஜானவாஸம் இல்லாட்டாலும் ஒரு குதிரை

மேலயாவது ஏத்திருவான் மாப்பிள்ளையை...''

அலமேலு 'மொலு மொலு'வெனச் சண்டைக்கு வர, அவளது அண்ணா, வெற்றிலைக் காவி படிந்த பற்களைக் காட்டி பயங்கரமாய்ச் சிரித்தார்.


''போடி அசடு. மாப்பிள்ளை கேட்கறதுல என்ன தப்புங்கறேன். அந்தப் பிள்ளையாண்டானோட வசதி, செல்வாக்கு எல்லாம் தெரியும். நானும் பயப்படத்தான் செஞ்சேன். மனுஷா ரொம்பவும் நல்ல மாதிரி. எதுவுமே எதிர்பார்க்க மாட்டாங்கன்னு, கேள்விப்பட்டதும், உன் மன்னி, இந்த க்ஷணம் கிளம்பினாத்தான் ஆச்சுன்னு 'தைதை'யின்னு குதிச்சா... பொண்ணுக்கு அதிர்ஷ்டம் இருந்தா நடக்கட்டுமே...''

மனிதருக்குப் பேராசைதான் என்பது சீனுவாசராகவனுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனாலும், இதைச் சொன்னால் அலமேலுவின் கோபத்தை அவரால் தாங்க முடியாதே...

அஜய் கல்யாணத்துக்காக மாலையைக் கையில் வைத்துக் கொண்டு, எவன் கழுத்து கிடைக்கும் என்று காத்திருப்பது போல, யாரோ கிளப்பிவிட்ட வதந்தி - அலமேலுவின் மன்னியைச் சதிராட வைத்து, அண்ணாவைத் தஞ்சாவூரிலிருந்து கிளம்பி வரச் செய்திருக்கிறது.

அந்த நிறுவனத்தில் நெடுநாளாய்ப் பணிபுரிவதால், சேர்மனின் மகன் திருமணத்துக்குச் சென்றிருக்கிறார் அவர். அப்போதே - அஜய்யின் பெற்றோரையும், அவர்களது பெருந்தன்மையானப் போக்கையும் கண்டவர்தான்...

'பையனோட அப்பா எதுவுமே எதிர்பார்க்க மாட்டார்தான். ஆனா, பையன் தனக்குன்னு



ஒரு பெண்டாட்டிய எதிர்பார்ப் பானேய்யா... உம்ம பொண்ணு - உம்மை விடவும் ஈர்க்குச்சியா, விளக்கு வச்சுட்டுத் தேடற மாதிரியின்னா இருப்பா... ஆபீஸ்லே வந்து பாரும். சும்மா பெங்களூர் தக்காளி மாதிரி ஒரு பொண்ணு. அவதான் அவனுக்கு வலது கை - இடது கை எல்லாம். அப்படி யிருக்கறப்ப...,"

அவரை யோசிக்க விடவில்லை அலமேலு.

"நீங்கதான் கையில பத்து ரூபா சில்லறை கூட இல்லாம, அஞ்சு கிரவுண்டுல, இருபது இருபத்தஞ்சு தென்னை மரங்களோட ஐயாயிரம் சதுர அடியில பங்களா விலைக்கு வந்திருக்குன்னு பேப்பர்லே படிச்சிட்டு, போய்ப் பார்த்துட்டு வந்தேளே.. அப்ப என் கிட்ட சொன்னது ஞாபகமிருக்கா... கையில காசு இல்லையின்னா என்னடீ... கண்ணால யாவது பார்த்துடலாமேயின்னு சொல்லலே. அது மாதிரிதான் இதுவும். புறப்படுங்கோ..."

மைத்துனர் பொண்ணுக்காக இல்லா விட்டாலும்கூட, இந்தச் சாக்கில் அஜய்யின் வீட்டுக்கு ஒருமுறை விஜயம் செய்வதில் தப்பு எதுவும் இல்லை என்கிற முடிவுடன் எழுந்தார் அவர்.

"சரிடீ. எங்கம்மா சொல்லுவா. மாட்டுக் குப் புல்லு வெட்டின மாதிரியும் இருக் கணும், மச்சானுக்குப் பொண்ணு பார்த்த மாதிரியும் இருக்கணும்னு. அஜய் - உங்க அண்ணாவோட மாப்பிள்ளையானா, நானும் சேர்மன் ஃபேமிலியில ஒருத்தன்னு கர்வப்பட்டுக்கலாம். இல்லையா - குறைஞ்ச பட்சம் அந்தப் பெரியவர் - அதான் அஜய் யோட அப்பா அவரோட நாலு வார்த்தை பேசிட்டாவது வர்றேன்.."

"அதானே.. பேசறதை உபயோகமாப் பேசுங்கோ. அநாவசியமா, 'கௌன் பனேகா குரோர்பதி' பத்தியோ, வீரப்பன் - ராஜ் குமாரை வச்சுட்டு இத்தனை நாளா எப்படிச் சமாளிக்கறான்னோ, மேட்ச் ஃபிக்ஸிங் பத்தியோ பேச வேண்டாம். எங்க அண்ணா பொண்ணு அருணாவுக்கு அஜய் ஜாதகம் தர முடியுமான்னு கேளுங்கோ. அது கிடைக்கலைன்னா - இத்தனை வயசுக்கு மேல கம்ப்யூட்டர்லே ஜாவான்னும் கோவான்னும் என்னென்னெல்லாமோ படிச்சிருக் கேன். ஒரு தடவையாவது அமெரிக்காவுக்கு என்னையும் அனுப்பச் சொல்லக் கூடா தான்னு 'நறுக்'குன்னு கேளுங்கோ..."

தலையை வேகமாய் ஆட்டி விட்டு நகர்ந்தார் சீனுவாசராகவன். மனசுக்குள், அதிகம் பேசாத சற்றுக் குரலை உயர்த் தினால் கூட, 'பொலபொல'வென அழுகிற பழைய அலமேலுதான் வந்து நின்றாள்.

"வரணும்... வரணும்..."

வந்தவர்களை இரு கை குவித்து வணங்கி வரவேற்றார் அஜய்யின் தந்தை ஈஸ்வரன்.

புடைவைத் தலைப்பால் முதுகைப் போர்த்தியவாறு, மென்மையாய்ப் புன்ன கைத்தாள் மீனாட்சி. அஜய்யின் தாய்.

'அம்மாவும் அழகு... அப்பாவும் நல்ல களை... அதான் பையன் ராஜாவாட்டம் இருக்கான்...'

மீனாட்சி, பெரிய வெள்ளி தம்ளரில் வெய்யிலுக்கு இதமாய் ரோஸ் மில்க் கொண்டு வந்து வைத்தாள். அப்படி அவள் தட்டை மேசை மீது வைத்து விட்டு நிமிர்ந்த போது அவளது காதிலிருந்த வைரத் தோடுகள் பலவிதமான வர்ணங்களை வாரியிறைத்தன. இந்த வயசுக்கும் ஒரு இழை கூட வெள்ளி ஓடாத கேசமும், அதைத் தளர முடிந்திருந்த அலட்சியமுமே தனி சோபை யாகவும்...

சீனுவாச ராகவனுக்குத் தெரியும்... அல மேலுவின் அண்ணன் மனைவி, பெரிய சவுரி ஒன்றை வைத்து, பிரிமனை மாதிரி பிச்சோடா போட்டுக் கொள்வது... பேச் சோடு பேச்சாக, தன் மனைவியிடமும் அது பற்றிச் சொல்லியிருக்கிறார்.

"அம்மு... நீ எதைச் செஞ்சாலும் நான், ஏன் - எதுக்குன்னு கேட்க மாட்டேன். ஆனா, தலைமுடி கொட்டிடுத்துன்னு சவுரி மட்டும் வேண்டாம்..."

"அது என்ன பண்ணித்து உங்களை...?"

"உனக்குத் தெரியாது. ஒரு தடவை உங்க மன்னியோடத் தலையில இருந்து சவுரி அவிழ்ந்து கூடத்து முற்றத்

மிக நல்ல விஷயம்!

அப்பா, அம்மா குரு, ரேணுகா சங்கர்ராமன்

என் வாழ்க்கையில் நிகழ்ந்த மிக மிக நல்ல விஷயம் எனக்கு அமைந்த உறவுகள்தான். என்மீது நம்பிக்கை வைத்து எனக்குப் பிடித்ததைச் செய்ய அனுமதித்த அப்பா, குன்றாத படிப்பார்வம் ஏற்படுத்திய அம்மா, ஓர் இளைஞனுக்கு

துல கிடந்தது. நான், காக்காதான் ஏதோ அடிபட்டு விட்டுக்குள்ள விழுந்துடுத் தோன்னு பயந்து போயிட்டேன்...''

''அழகுதான்...''

சீனுவாச ராகவனின் கனவை, ஈஸ்வரன் தான் கலைத்தார்.

''கல்யாணத்துல பார்த்தது. அப்புறம்... எப்படியிருக்காப்பல?''

மனிதரின் ஞாபக சக்தியைக் கண்டு அசந்து போய்விட்டார் சீனுவாசன்.

''ஏதோ உங்க ஆசீர்வாதத்துல... நிஜம்மா சொல்றேன் உங்க ஸன் மாதிரி ஒரு புத்தி சாலிய நான், என் ஆயுசுல பார்த்ததே இல்லே சார். த்ச்... த்ச்.. வெறும் மூளைய மட்டுமில்லே... அந்த மனிதாபிமானம் இருக்கே... அதெல்லாம் சொல்லிக் கொடுத்து வர்றதில்லே... வம்சம் வம்சமா ரத்தத்துலயே ஊறியிருக்கணும். நான் முகஸ்துதிக்காகச் சொல்லலே...''

மனிதர் நேரிடையாக ஸ்தோத்திரம் சொல்ல ஆரம்பித்து விட்டார். அலமேலு வின் அண்ணாவோ – அங்கே போடப்பட் டிருந்த ரோஸ்வுட் டீபாய்கள், விஸ்தாரமான சோபா வகையறாக்களுக்கு உறை போடக் காணுமா தனது சொத்து சுகம் எல்லாம் என்கிற ரீதியில் மனக்கணக்கு போடத் தொடங்கி விட்டார்...

''எனக்கு அஜய்யோட ஜாதகம் தெரி யாது. ஆனா, அவரோட நட்சத்திரத்தை மட் டும் ஒருநாள் கேட்டுத் தெரிஞ்சு வச்சுண் டேன். பரணிதானே...?''

''ஆமா...''

''பேஷ். பேஷ்... பரணி – தரணி ஆளும் கறதுக்கு வேற உதாரணமே வேண்டாம் சார். உங்க பிள்ளையே போதும். இன்னும் 'ஓஹோ'ன்னு இருக்கப் போறார். பாருங்கோ...''

''ஓஹோ...''

''இவர் என் மச்சினர். தஞ்சாவூர்லே போய் இவர் வீடு எதுன்னு கேட்டா – பச் சைக் குழந்தை கூட அடையாளம் காட்டும். அத்தனை பிரசித்தம்...''

''அப்படியா... நமஸ்காரம்.''

அஜய்யின் அப்பா, அலமேலுவின் அண்ணாவைப் பார்த்து கைகுவித்தார்.

பிறகு தஞ்சாவூர்தான் தங்களுக்கும் பூர் வீகம் என்று மீனாட்சி கூற – உடனே சீனு வாசராகவன் அதைப் பிடித்துக் கொண்டே ஒரு மணி நேரம் அறுத்தார்.

''என்னதான் சொல்லுங்கோ, நம்ம மனுஷங்கன்னா அது தனிப் பாசம்தான். உங்க முகத்தைப் பார்த்த அன்னிக்கே நான் மனசுக்குள்ள நினைச்சிண்டேன். இப்படி யொரு லட்சுமி கடாட்சம்... முக அமைப்பு... இதெல்லாம் தஞ்சாவூருக்குன்னா சொந் தம்னு நிஜமாத்தான் சொல்றேன். என் ஒய்ஃப் அலமேலு இன்னிக்கு வரல்லே. கூடிய சீக்கிரம் ஒருநாள் கண்டிப்பா அழைச் சிட்டு வர்றேன். அவ முகத்துல கூட இப் படித்தான்... ரவிவர்மாவோட சீதாதேவி மாதிரி. அடடா... அதுவும் இருபத்தஞ்சு வருஷங்களுக்கு முன்னாலே...''

எங்கே சீனுவாசன் இதே தடத்தில் போய் –பேச வேண்டியதை மறந்து விடப் போகிறாரே என்கிற தவிப்புடன் பெண் ணைப் பெற்றவர் குறுக்கே விழாத குறை யாகப் புகுந்து தடுத்தார்.

''என் பொண்ணு கூட அப்படியே அத் தைய உரிச்சு வச்சிருப்பா. சித்த ஒல்லி. அதெல்லாம் கல்யாணமாகி, அதது நடக்க வேண்டிய காலத்துல நடந்துடுச்சுன்னா, 'கும்'முனு ஆயிடுவா...''

''அதான்... அதையேதான் நானும் சொல்ல வந்தேன். நட்சத்திரப் பொருத்தம் பிரமாதமா இருக்கு. அஜய்யோட நட்சத் திரத்துல இருந்து அஞ்சாவது நட்சத்திரம் பொண்ணோடது. 'அஞ்சும், ஆறும் கொஞ்சி வாழும்'னு எங்கப்பா சொல்லுவார். ஏன், ஃபார் எக்ஸாம்பிள் நானும் – அலமேலு வுமே இருக்கோமே – என் மச்சினர் என்கிட்ட வந்து, 'இது மாதிரி அந்தப் பிள்ளையோட ஜாதகம், நம்ம அருணாவுக்குக் கிடைக்கு மான்னு தயங்கிண்டே கேட்டார். நான் கொஞ்சம் கூட யோசிக் கவே இல்லையே.. அதுக்கென்ன, மனுஷர் தங்கமானவர். தாரா ளமா நேரே போய் கேட்கலாம்னு கையோட அழைச்சிட்டு வந்துட் டேன். மாமீ... மாமி எங்கே...

''உற்சாகமும், ஊக்கமும் சந்தோஷமும் தரும் காதலியாகவும் பின்னர் துக்கங்களில் பங்கேற்று, பாசிடிவ் அணுகுமுறை யுடன் என் பலத்தை எனக்கு தக்க தருணத்தில் உணர்த்தி என்றும் தோழி யாக உள்ள என் மனைவி ரேணுகா, தமிழ்த் திரையுலகின் மிகச் சிறந்தவர் எனக்கு குருவாக அமைந்தது, எமோஷனல் சப்போர்ட் ஆகவும், எனது வலது கரமாகவும் அமைந்து விட்ட நண்பர் சங்கர்ராமன்.

— வஸந்த்



தொகுப்பு : மானஸா

இந்தாங்கோ பூ... வர்ற வழியில பழக்கடை எதுவுமே தோதா இல்லே... நச்சு நச்சா பூவன் பழத்தை வச்சுண்டிருந்தான். 'என்னடா இது பழம்... நம்ம ஊர்லேயின்னா கல்கண்டு மாதிரி மலைப்பழம்... தோட்டத்துல இருந்து தாரோடக் கொண்டு வந்து இறக்கியிருப் பேனே'ன்னு என் மச்சினர் புலம்பிட்டே வந்தார். நான்தான் சொன்னேன்... முதல்லே, மங்களகரமாப் பூவோடப் போவோம். நிச்சயதார்த்தத்துக்கு ஜமாய்ச்சுடுவோம்னு..."

"க்கும்..."

மீனாட்சி கணவரைப் பார்த்து, மெது வாய் கனைக்க, அவர் பிரமிப்பு கலைந்து உடனேயே சீனுவாசராகவனின் கரத்தைப் பிடித்துக் கொண்டார்.

"உங்க மச்சினர்னு சொன்னாலே போதுமே மிஸ்டர் சீனுவாசன். எதுக்கு அவரோட மத்த சொத்து விவரமெல்லாம்... உம்... நாங்க அஜய்க்காக பெரிய இடம் எதுவுமே பார்க்கலே... சாதாரண நடுத்தர இடத்துப் பொண்தான் நமக்கும் சரிப்பட்டு வரும்..."

"ஆகா... ஆயிரத்துல ஒரு வார்த்தை..."

சீனுவாசன், மைத்துனரைப் பார்த்து உற்சாகமாய்த் தலையாட்டினார்.

"அண்ணா, பார்த்துண்டு உட்கார்ந் திருக்கேனே.. இது மாதிரி மனுஷாளை இனிமே நாம எங்கே பார்க்கப் போறோம்... பார்வதி - பரமேச்வரன் மாதிரி இருக்கா... சாஷ்டாங்கமா விழுந்து நமஸ்காரம் பண் ணுங்கோ..."

"இருங்கோ... இருங்கோ..."

ஈச்வரன் தடுக்கத் தடுக்க - சீனுவாசனும், அவரது மைத்துனரும் நெடுஞ்சாண்கிடை யாகத் தரையில் விழ...

மீனாட்சிதான் இதற்கு மேலும் பொறுக்க முடியாதவளாய் 'பளிச்'செனக் கூறினாள்

"எங்க பிள்ளைக்கு வரவேண்டிய பெண்டாட்டிய நாங்க பார்த்து முடிவு செஞ்சு என்ன பிரயோசனம்? இது அவ னோட 'பர்ஸனல் மேட்டர்' இல்லையா...? மேலும் அவன் ஏற்கெனவே ஒரு பொண் ணைப் பார்த்தும் வச்சுட்டான். இவனுக்கு அவதாங்கறது ஏற்கெனவே முடிவாயிடுத்து. ஏதோ அவங்களுக்குள்ளே ஒரு காலகட்டத் துக்காக வெயிட் பண்ணறா. 'அம்மா முகூர்த்தம் பாரு'ன்னு அவன் சொல்ல வேண்டியதுதான் பாக்கி..."

மீனாட்சி கூற, ஈச்வரன் தெம்பு வந்தவ ராய், மனைவியை நன்றி ததும்பப் பார்த்த வாறே கூறினார் :

"அதான்... அதையேதான் நானும் சொல்ல நினைச்சேன்... நீயே சொல்லி விட்டே..."

திரும்பி வரும் வழி நெடுக சீனுவாச ராகவன் தனது மைத்துனரிடம் புலம்பித் தீர்த்தார்.

"பொம்மனாட்டிகள் மட்டும் பார்க்க 'பளிச்'சுனு இருந்துட்டாப்பல ஆச்சா.. வீட்டை நீட்டா வச்சுக்க வேண்டாமோ... மார்பிள் தரை... நமஸ்காரம் பண்ணறப்ப மூக்குல புழுதி ஏறி... என்னதான் சொல் லுங்கோ. அதுக்கெல்லாம் அலமேலு கிட்ட டிரெயினிங் எடுத்துக்கணும்."

(தொடரும்)

● கு. கணேசன், பனங்கோட்டூர்.

? 'இந்திய தேசிய உணர்வு, திராவிட தேசிய உணர்வு என்பதெல்லாம் மாயை! இந்திய அரசியலமைப்பு தேசிய இனங்களின் அடிமைச் சட்டம்' என்று நெடுமாறன் கூறியிருப்பது பற்றி...?

! அடிமைச் சட்டமாயிருந்தால் அவரால் அதை இவ்வளவு தூரம் விமர்சிக்க முடியுமா? கம்பி அல்லவா எண்ணிக் கொண்டிருப்பார்!

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர்.

? ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற லியாண்டர் பேயஸ் – மகேஷ் பூபதி குறித்து...?

! ஒலிம்பிக்ஸில் கோட்டை விட்டதற்கு ஓரளவு பரிகாரம்.

● எம். ராஜேந்திரன், லால்குடி.

? இஸ்ரேல் – பாலஸ்தீன பிரச்னைக்கு எப்போது தீர்வு ஏற்படும்?

! காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படும்போது! அரபு நாடுகள் Vs இஸ்ரேல் என்ற பிணக்கு நிலை மாற காரணமாயிருந்து, அமைதிக்கான நோபல் பரிசும் தரப்பட்ட பிறகு, அராஃபத் இப்படியொரு நிலைக்கு ஆளானது பரிதாபம்!

● ஆர்.பி. ஜெயச்சந்திரன்,
பூனாம்பாளையம்.

? 'எந்தவொரு புத்தகத்தையும் எந்த அரசியல்வாதியும் முழுதாகப் படிக்க மாட்டான்' என்கிறாரே அன்பழகன்?

! புத்திசாலியான ஒருவன், ஒரு நூல் கூறுகின்ற விஷயங்களை மனத்தில் வாங்கிக் கொள்ள அதை வரிக்கு வரி படிக்க வேண்டும் என்று அவசியமில்லை. முட்டாள், வரிக்கு வரி படித்தும் பிரயோஜனமில்லை. எதுவும் மூளையில் ஏறாது! அரசியல்வாதிகள் அத்தனை பேரும் புத்திசாலிகள் என்று நம்ப நாம் தயாரில்லை!

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? 'தமிழக மக்களை விட்டு எங்கும் ஓடிவிட மாட்டேன்' என்று ஜெயலலிதா கூறுகிறாரே? அறிவிப்பா?

ஜெ. வெளியிட்டிருப்பது அறிவிப்பா? எச்சரிக்கையா?

எச்சரிக்கையா?

! 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று எமர்ஜென்ஸி கொண்டு வந்ததற்காக இந்திரா காந்தி கேட்டுக் கொண்டார்; மன்னிக்கப்பட்டார். ஆனால், ஜெ. அப்படிச் செய்ய முடியாது. காரணம், வழக்குகள். அதனால் பாவமன்னிப்பு கேட்பது போன்ற பாவனையில் ஒரு லாவணி பாடுகிறார்.

● க. சாந்தி, காட்பாடி.

? '2006ல் எங்கள் ஆட்சிதான்' என்று பா.ம.கவுக்குப் போட்டியாக பா.ஜ.க. பொன் ராதா கிருஷ்ணனும் கூறி விட்டாரே?

! என்றும் நடப்பது மக்கள் (விரும்பும்) ஆட்சிதான் என்பதை மறந்து விட்டு மார் தட்டுகிறார்கள்.

● கோ. வீரராகவன்,
அறந்தாங்கி.

? பூர்வீகத்தில் தாங்கள் ஹிந்துக்கள் என்ற கருத்தை முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ்ஸின் நிலை, போகாத ஊருக்கு வழி தேடுவது போல் இல்லையா...?

! அனாவசியமான விதண்டாவாதம் இது. வேற்றுமைகளைக் களைவதற்குப் பதில் நிரந்தரமாக்கும்.

● என். உஷாதேவி,
மதுரை – 9.

? 'பொது வாழ்க்கையை விட்டு ராமதாஸ் வெளியேறும் வரை போராட்டம் தொடரும்' என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளாரே? பொது வாழ்வை விட்டு வெளியேறச் செய்யும் உரிமை ஒருவருக்கு இருக்கிறதா?

! இப்போதைக்கு இருவரும் ஊழல் குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் சந்தித்துத் தப்பி வெளியேறி வரட்டும்; அப்புறம் பார்க்கலாம்.



• 'சட்ட விளக்கம்!



• [illegible]



• நம்ப மாட்டோம்!



• சேறு வீசும் அரசியல்



• பாவமன்னிப்பு!

நீங்கள் கேட்டவை

— தராசு




• பரம்பர...



• ...தாக்குதல்!



• சாதனையாளர்!



• பரிகார ஜோடி!

● கருப்பம்புலம் சித்திரவேலு,
நெய்விளக்கு.

? தாம் எழுதும் புத்தகத்தில், தமக்கு எதிராகச் சதி செய்தவர்களை அம்பலப்படுத்துவதாக ராம் ஜெத்மலானி சொல்கிறாரே?

! பிரதமர் மருத்துவமனை விட்டு வெளிவரும் நாளில் அதற்கு வெளியீட்டு விழா வேறு... 'டர்டி பாலிடிக்ஸ்' என்பது இதுதான்.

● எஸ். சேகர், சென்னை – 24. ❑

? 'டான்சி நில ஊழல் வழக்கின் தீர்ப்பு எப்படி?' என்ற கேள்விக்கு 'வாய்மையே வெல்லும்' என்று பதிலளித்துள்ளீர். இதே வழக்கில், உச்சநீதிமன்றம் ஜெயலலிதாவை விடுதலை செய்தால், அப்பொழுதும் இதே பதிலை அளிப்பீரா?

! இனி விடுதலை பெற்றாலும் சட்டத்தின் ஓட்டைகளில் புகுந்து சாதுர்யமாகத் தப்பிக்கும் வாதங்களை முன்வைத்துத்தான் அது சாத்தியமாகும். அப்போது, 'சத்தியத்தின் வாழ்வதனை சூது கவ்வும்; மீண்டும் உண்மையே வெல்லும்'.

● ஜே. ரஜினி ராம்கி, மயிலாடுதுறை.

? ஐ.டி. என்றதும் இன்கம்டாக்ஸ் என்று நினைத்து, இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி கூட்டத்துக்கு பீஹார் முதல்வர் வராமல் போய் விட்டார் என்கிறாரே கர்நாடக முதல்வர்?

! கம்ப்யூட்டர்தான் நாட்டின் நம்பர் ஒன் எதிரி என்று லாலு பேசியது கிருஷ்ணாவுக்கு மறந்து விட்டதா?

● இரா. பொன்னப்பன், வயலூர்.

? எது சாதனை?

! பைபாஸ் அறுவை சிகிச்சை முடிந்து. அதைத் தொடர்ந்து எழுந்த சில சிக்கல்களிலிருந்து ஒருவாறு விடுபட்டு, கல்கியில் 'இனிமேல் ஆரம்பம்' என்று படு பாஸிடிவ்வான ஒரு தொடர் எழுத ஆரம்பித்திருக்கும் அனுராதா ரமணன், விழுந்து இரு கைகளும் ஃப்ராக்சர் ஆகிய பிறகும் கதையை உற்சாகமாகத் தொடர்கிறார் என்பது!

● ஆடுதுறை கோ. ராமதாஸன்,
கணபதி அக்ரஹாரம். ✱

? நர்மதா அணையைக் கட்ட அனுமதி அளித்துள்ள சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் மூவருள் ஒருவர் மாறுபட்ட கருத்தைக் கூறியிருக்கிறாரே?

! இதையே ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு சர்தார் சரோவர் திட்டத்தை மனசாட்சிக்கு விரோதமின்றி அணுகி, பாதிப்புக்குள்ளாகியிருக்கும் ஏழை எளியவர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மேதா பட்கரும் போராட்டத்தைக் கைவிட்டு இதற்கு ஆக்கபூர்வமாக உதவலாம்.

✱ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஜி. ராமதாஸ், 5/46 விஜித்திரராஜபுரம்,
கணபதி அக்ரஹாரம் போஸ்ட்,
அய்யம்பேட்டை வழி, தஞ்சை மாவட்டம்.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
எஸ். சேகர், குமரன் ஒயின்ஸ்,
3, கங்கை அம்மன் கோயில் தெரு,
சென்னை - 24.

ஸ்ரீராமபக்த ஹனுமான்

14

சிம்லாவில்...

கோடைக்காலத்தில் பலரும் விரும்பிச் செல்லும் சிம்லாவில் மலை மேல் ஒரு ஹனுமான் கோவில் உள்ளது. கூட்டம் கூட்டமாக பக்தர்கள் சென்று தரிசித்து வருவதைக் காண முடிகிறது.

அதில் ஒரு விசேஷம் என்னவென்றால் அந்த ஹனுமான் கோவிலுக்குப் போகும் வழி முழுதும் குரங்குகள்! அவற்றுக்கு ஆகாரமாகக் கொடுப்பதற்கு என பல பொருட்கள் (பொரி போன்றவை) விற்கப்படுகின்றன. ஹனுமானைத் தரிசிக்கச் செல்பவர்கள் அந்தக் குரங்குகளுக்கு உணவளிக்காமல் சென்றால் கையில் எடுத்துச் செல்லும் பொருட்களை குரங்குகள் பறித்து விடும்! – இது கோவிலுக்குச் செல்லும் போதுதான். தரிசனம் செய்து விட்டுத் திரும்பும் பக்தர்களை இந்தக் குரங்குகள் துன்புறுத்துவதில்லை!

'**ஆ**ணிப்பொன்னால் செய்த தொட்டில்... வஜ்ஜிர வடம் பூட்டி, மாணிக்க கால் நாட்டி...' என்றெல்லாம் தாலாட்டுப் பாடல்களில் பாட்டிமார்கள் தொட்டிலை வர்ணித்து அரை மணி நேரம் பாடுவார்கள்!

இராவணேச்வரனின் அந்தப்புரத்திலோ ஆணிப்பொன்னால் செய்த கட்டில்! தங்கத்தால் செய்த, தந்தத்தால் இழைத்த, சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த கட்டிலிலே உறங்குகிறான் இராவணன். ரத்தினங்களாலும் இழைக்கப்பட்ட அந்தக் கட்டில் ஸ்படிகம் போல ஜொலிக்கிறது!

அதன் மீது உறங்கும் ராவணனைச் சுற்றி தேவலோக மாதர்களையொத்த அழகான பெண்கள் சாமரம் வீசுகிறார்கள். அகில்புகை போன்றதொரு தெய்வீக நறுமணம் அவ்விடத்திலே கமழ்கிறது.

பெருந்தோள்களுடன் கூடிய இலங்கை அரசன் ஒரு கரியமேகம் போல் மின்னுகிறான். அவன் காதில் ஒளிச் சிந்தும் குண்டலங்கள் 'தகதக'வென்று மின்னிப் பிரகாசிக்கின்றன. உலகிலே எத்தனை வகை ஆபரணம் உண்டோ அத்தனையும் அணிந்த அலங்காரப் பிரியனாக தகதகக்கிறான். உடம்பெல்லாம் பூசிய சந்தனத்தின் நறுமணம் வேறு அவ்விடத்திலே கவிந்திருக்கிறது.

ராவணேசுவரனின் அருகிலே... அழகே உருவெடுத்து வந்தது போல் ஆபரணங்களைப் பூண்டு, பொன்னிற மேனியுடன் ஒரு பெண்மணி படுத்திருக்கிறாள்.

ராவணனின் அந்தப்புரத்தில் நுழைந்த கணத்திலே, இவ்வளவையும் பார்க்கிறான் ஹனுமான். அரச போகங்களைப் பார்த்தறியாத அந்த எளியனுக்கு அத்தனை ஆடம்பரத்தையும் கண்டு வியப்பான வியப்பு!

'இந்தப் பாவிதானே ராமனின் மனைவியான சீதையை அபகரித்தான்!' என்ற எண்ணமும் ஆஞ்சநேயனுக்குக் கூடவே எழுகிறது.

அந்த நினைப்போடேயே மண்டோதரியைப் பார்க்கிறபோது, ஒரு கணம் – ஒரே ஒருகணம் – அப் பெண்மணிதான் சீதை என்றே எண்ணிவிட்டான் ஹனுமான்.

கட்டுப்படுத்த முடியாத ஆனந்தம் அவன் மனத்திலே தோன்றி உசுப்பி விட்டது அவனை! அந்தச் சந்தோஷத்தில் அவன் என்ன செய்தான் என்று நினைக்கிறீர்கள்?

அதை வால்மீகி வர்ணிக்கிறார் :

ஹனுமான் தன் வாலை எடுத்து முத்தமிட்டு ஆனந்தக் கூத்தாடுகிறான்! கம்பத்தின் மேல் ஏறி, ஏறிய உயரத்திலிருந்து

கீழே குதித்து... ஒரே குதூகலம் அவனுக்கு.

மகிழ்ச்சி ஏற்படுகிற நேரத்திலே வானரங்கள் செய்யக்கூடிய அனைத்தையும் செய்கிறான் ஹனுமான் என்பதைத்தான் இவ்வாறு காட்டுகிறார் வால்மீகி.

அத்தனை மகிழ்ச்சியும் கொஞ்சம் நேரம்தான் நீடிக்கிறது. புத்திமானான ஹனுமான் சீக்கிரத்திலேயே யோசிக்கத் தொடங்கி விடுகிறான்.

'ராமனை விட்டுப் பிரிந்து வந்த சீதை எவ்வாறு இப்படி நிம்மதியாகத் தூங்குவாள்? - அதுவும் ஓர் அந்நிய ஆணின் அருகிலே படுத்து அவளால் தூங்க



முடியுமா? - இது நிச்சயமாக சீதை இல்லை...' என்ற முடிவுக்கு வருகிறான் ஹனுமான்.

'ராமனைப் பிரிந்த சீதை இவ்வாறு சர்வ அலங்காரங்களுடன் காணப்படுவாளா? உணவு உட்கொண்டு போக்யங்களைத் துய்த்து மகிழ்ச்சியுடன் இருப்பாளா...? நிச்சயமாக இது வேறு யாரோதான்! என்ன மதியீனம்! இந்தப் பெண்ணைப் போய் சீதா தேவி என்று எண்ணியது எவ்வளவு தவறு!' என்று தன்னைத் தானே நொந்து கொள்கிறான் ஹனுமான்.

இந்த கட்டத்திலே ஹனுமானுக்கு வால்மீகியைக் காட்டிலும் அதிகம் மதிப்பெண் போடுபவர் கம்பர்தான். அவர் என்ன சொல்கிறார் பாருங்கள் :

'இங்கே படுத்திருப்பவள் அரக்கிதான்! நிச்சயமாக இவள் சீதையாக இருக்க முடியாது' என்று ஆரம்பத்திலேயே முடிவுக்கு வருகிறானாம் ஹனுமான். இந்த முடிவுக்கு வந்த தக்ஷணமே, 'இவள் சீதை இல்லையெனில் சீதை வேறு எங்கேதான் இருக்கிறாள்?' அவள் உயிரோடுதான் இருக்கிறாளா? இல்லையா? ஒருக்கால் ராவணன் அவளைத் தூக்கி வரும்போது கடலில் விழுந்திருப்பாளோ...? அப்படி அவள் விழுந்து மாண்டிருப்பாளேயானால், நான் அவளைக் காணாமலேயல்லவா திரும்பிச் செல்ல நேரிடும். அவ்வாறு நான் திரும்பிப் போனேனானால் ராமன் உயிர் வாழ மாட்டாரே! ராமன் பிராணனை விட்டாரானால், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன், அவர்களுடைய தாய்மார்கள், இங்கே கிஷ்கிந்தையிலே சுக்ரீவன், அங்கதன் என்று எல்லோருமே அல்லவா உயிரை விட்டு விடுவார்கள். சீதையைக் காணாது நான் திரும்பிப் போய் இத்தனை பேரும் பிராணனை விடுவதைக் காட்டிலும் நான் இங்கேயே இந்த இலங்கையில் உயிரை விட்டு விடுவதுதான் மேல்...'

மனத்தளர்ச்சி என்பதே அறியாத ஹனுமானுக்குக் கூட துயரம் ஏற்பட்ட போது சிந்தனை இப்படியெல்லாம் ஓடியிருக்கிறது!

ஆனால் ஆஞ்சனேயன் சாமானியனல்லவே. அதனால் துயர சிந்தனைகளை நொடியில் உதறி எறிகிறான். அந்தக் கணத்திலே அவனுக்கு ஓர் உண்மை புலப்படுகிறது :

மஹேந்திர மலையிலிருந்து புறப்பட்டு உயரே பறந்து இலங்கை நோக்கிப் பறந்தான் அல்லவா ஹனுமான்? அப்போது சூரியன் முதலானோரை வணங்கிவிட்டு அவன்

அருள்வாக்கு

'கண்ணாடி இருக்கிறது. உள்ளே ப்ரதிபிம்பம் தெரிகிறது. திலகமில்லாமல் அது பாழ் நெற்றியாகத் தெரிகிறது. பார்த்தால் நன்றாகவே இல்லை. திலகம் வைக்கணும் என்று தோன்றுகிறது. என்ன பண்ணணும்? கண்ணாடிக்கா பொட்டு வைப்பார்கள்? அது அழுக்காகத்தான் ஆகுமே தவிர வேறே என்ன நடக்கும்? பின்னே என்ன பண்ணுவார்கள்? ப்ரதி பிம்பத்துக்கு மூலமான பிம்ப ஆஸாமிக்குத்தான் பொட்டு வைப்பார்கள். அப்படி, இந்த ஜீவலோகம் பூராவும் ஏக சைதன்யம் மாயைக் கண்ணாடியில் காட்டுகிற தினுஸு தினுஸான ப்ரதி பிம்பங்கள்தான். நீயும் அப்படித்தான்.'

புறப்பட்டான் அல்லவா...? ஆனால் எந்த ராமன் தன்னைத் தூது அனுப்பினானோ, எந்த பிராட்டியைத் தேடி வரும்படி அனுப்பி வைத்தானோ - அந்த இருவரையும் தான் வணங்காமலே புறப்பட்டு வந்து விட்டது ஹனுமானுக்கு ஞாபகம் வந்தது.

உடனேயே அந்த இருவரையும் மனதிலே கொண்டு வந்து இருத்திக் கொண்டான் ஹனுமான்.

"நமோஸ்து ராமாய
லக்ஷ்மணாய தேவ்யைச
தஸ்யை ஜனகாத்மஜாயை" என்று அவன் வணங்கி பிரார்த்தித்ததாகச் சொல்கிறார் வால்மீகி.

பிரார்த்தித்த ஹனுமார் மனத்திலே எண்ணிக் கொண்டாராம் :

"அம்மா! சீதாபிராட்டியே எப்படி ஜனகர் தங்கக் கலப்பை கொண்டு உழுகிற போது எவ்வித சிரமமும் தராமல் நீ அவருக்குக் கிடைத்தாயோ.. அதே போல் எனக்கும் எவ்வித சிரமமும் தராமல் காட்சி தருவாயாக!.."

இந்த இடத்திலே ஹனுமானுடைய வினய பக்தியைக் கவனியுங்கள்! தேடுவதற்கு அவன் உடம்பிலே பலமில்லையா? அல்லது புத்தியோ வாக்கு சாதுர்யமோ இல்லாதவனா ஹனுமான்? அப்படியொன்றும் கிடையாது. தூதனுக்குரிய சகல பண்புகளும் நிறைந்தவன் அவன் என்று பார்த்தோம் - அன்பு, அறிவு, வாக்கு சாதுர்யம் அனைத்தும் நிறைந்தவன். ஆனாலும் அவன் பணிந்து வேண்டுகிறான் 'ஜனகனின் கலப்பை முனையில் தோன்



உனக்கு ஏதாவது நல்லது பண்ணிக் கொள்ள வேண்டுமானால் அது பொட்டு இட்டு அலங்காரம் பண்ணிக் கொள்கிற மாதிரி. நேரே உனக்கே - அதாவது மாயையில் ப்ரதிபலித்து உண்டான உன் தேஹ, இந்த்ரியாதிகளுக்கே - நீ நல்லது என்று ஒன்றைப் பண்ணிக் கொண்டால் அது கண்ணாடியில் கறுப்புப் பூசி அழுக்குப் பண்ணும் கார்யம்தான். 'மூல பிம்பம் சைதன்யம் என்றால் அதற்கு நான் பண்ணக் கூடியது என்ன இருக்கிறது? முதலில் அது என் மனஸுக்கே வரவில்லையே!'' என்கிறாயா? ஸரி, அதுவேதான் ரூபங்களோடு, குணங்களோடு இந்த லக்ஷ்மி நரஸிம்ஹ மூர்த்தியாக வந்திருக்கிறது. அவனுக்கு பஜனை பண்ணு, பூஜை பண்ணு, ஸதா ஸ்மரணம் பண்ணு! அதுதான் உனக்குப் பண்ணிக்கொள்ளும் அத்தனை நல்லதும் - திலக தாரணம் முதலான அத்தனை அலங்காரமும்' என்று லக்ஷ்மி நரசிம்ஹ பஞ்சரத்னம் என்கிற ஸ்தோத்திரத்திலேயே ஆசார்யாள் சொல்லியிருக்கிறார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

நியது போல் திடீரென்று தோன்றி எனக்கு உதவி செய்' என்று வேண்டுகிறான் சீதையிடம்.

இப்படி வேண்டிக் கொண்ட கணத்திலேயே ஹனுமானுக்குச் சம்பாதி சொன்னது ஞாபகம் வருகிறது. சீதையை இலங்காபுரி நோக்கி ராவணனின் புஷ்பக விமானம் எடுத்துச் சென்றதையும் அங்கே அசோக வனம் நோக்கி அது பறந்ததையும் சம்பாதி கண்டு சொல்லியிருந்தான். அது ஞாபகம் வந்தது.

உடனே ஒரே பாய்ச்சலில் அசோக வனத்தை நோக்கிச் சென்றான் ஹனுமான். அங்கே...

அரக்கிகள் புடைசூழ, சோகமே உருவாக, அழுக்கடைந்த ஆடையுடன், பெருமூச்சு விட்டபடி அமர்ந்திருந்த ஒரு பெண்ணைக் கண்டான் ஹனுமான்.

உடனேயே, 'இவள்தான் சீதையாக இருக்க வேண்டும்!' எனறு மனத்துள்ளே தீர்மானத்துக்கு வந்தான். அதே மனத்தால் விரைந்து அவன் ராமனிடமும் சென்றான் என்கிறார் வால்மீகி. சீதையைக் கண்டு அடையாளம் அறிந்து உணர்ந்த கணத்திலேயே ஹனுமான் ராமனை மனோவேகத்தில் அடைந்தான் என்பது எத்தனை உயர்வானதொரு கருத்து!

இலங்கையிலே ஹனுமானின் தேடலை துளஸிதாஸர் எப்படி வர்ணிக்கிறார் என்று பார்த்தால், அது சற்று வேறு விதமாகத்தான் இருக்கிறது.

ஹனுமான் மிகச் சிறிய உருவம் எடுத்துக் கொண்டு வீடு வீடாகப் போய்த் தேடுகிறானாம்! அப்போது ஓர் அழகான மாளிகை அவன் கண்ணிலே படுகிறது. அதிலே ஒரு கோயிலும் இருக்கிறது. அந்தக் கோயிலில் பார்த்தால், ராமனின் சின்னங்கள் தென்படுகின்றன. நிறைய துளஸி செடிகள் வேறு காணப்படுகின்றன. ஹனுமானுக்கு ஏகப்பட்ட சந்தோஷம் வந்துவிடுகிறது. 'ராக்ஷஸர்களே நிறைந்துள்ள இந்த இலங்கையிலே நல்லவன் ஒருவனும் இருக் கிறான் போலிருக்கிறதே!' என்று சந்தோஷப் படுகிறான்.

அந்தச் சமயத்தில், உறங்கிக் கொண்டிருந்த விபீஷணன் எழுந்து, 'ராம ராம' என்று ஸ்மரணை பண்ண ஆரம்பித்து விடுகிறான். அதைப் பார்த்ததும் ஹனுமானுக்கு மகிழ்ச்சியுடன் ஆச்சர்யமும் சேர்ந்து கொண்டது. உடனே விபீஷணனைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆசையும் வந்தது.

ஆனால் தூங்கி கண் விழித்த ஒருவன் திடீரென்று குரங்கைப் பார்க்க விரும்ப மாட்டானல்லவா...? அதனால் ஒரு மனித ரூபத்தில் போய் விபீஷணன் முன் நின்றான்.

விபீஷணன் ஹனுமானைப் பார்த்து, "ஐயனே உங்களைப் பார்த்தால் ஹரிதாஸனாகத் தெரிகிறதே?" என்றான். "நீங்கள் யார்...?" என்றும் கேட்டான்.

ஹனுமான் ராமகாதையை விபீஷணனிடம் சொன்னான்.

விபீஷணனின் சந்தோஷத்துக்குக் கேட்கவா வேண்டும்? அவனும் ஹனுமானோடு சேர்ந்து ராமநாம பஜனை செய்ய ஆரம்பித்து விட்டான்!

(தொடரும்)



யுகபாரதி

நீர் வளையம்

கிணற்றுச் சுவரில்
உட்கார்ந்து
உள்ளே படரும்
நீர் வளையங்களை
எண்ணுகிறாய்

ரசனைமிக்க
உனது செயல்களை
ரசிப்பதிலேயே
கரையத் தொடங்குகிறது
என் பொழுது.

வளையங்களை நீயும்
தளும்பாமல்
பதியுமுன் முகத்தை
நானும் பார்த்திருக்க

சட்டென்று
சலனம் விலகி
மௌனமாகிறது நீர்

எதிர்பார்த்துப் போன
வீட்டில்
இல்லாமை பேசும்
பூட்டாய்
ஏமாற்றம் பூசும்
உன்முகம்

கல்லெடுத்து நீ வீச
நினைப்பதற்குள்
உனக்குத் தெரியாமல்
என் கைவிரல்
மோதிரத்தைக்
கழற்றி விடுகிறேன்

உன் சந்தோஷத்தை
முன் வைக்கையில்
பெரிதில்லை
எதுவுமெனக்கு

எப்பவுமே
எண்ணுவதற்குப்
பிடித்தமானது
உனக்கு நீர் வளையம்
எனக்குன் கை வளையல்.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)


இயற்கையின் பரிசு இணையற்ற சந்தனம்
GOKUL
SANTOL
TALC
GOKUL
SANTOL
TALC

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka.

